REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 டிசம்பர் 17 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 299 | Friday 17,December, 2021 | 24பக்கங்கள் | 30/-

நாணய மாற்று விகிதக் கொள்கைகளில் மாற்றமா?

பரவும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை

நாணய மாற்று விகிதக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பரவி வரும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார். தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சொந்த நாட்டில் வீடற்ற நிலையில் வாழும் யுகம் முடிவுக்கு வரவேண்டும்

தாய்நாட்டில் எவருமே விடுதியில் வாழும் நிலையில் வாழக்கூடாது

வீடற்ற நிலையில் தாய்நாட்டில் விடுதியில் வாழ்வது போன்ற யுகத்தை எதிர்வரும் ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் 800 பேருக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் மற்றும் களனிவெலி புகையிரத பாதையை விரிவுபடுத்தும் நடவடிக்கையின் போது அகற்றப்பட்ட மக்கள் உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட 528 வீடுகளை கொண்ட கொலொம்தொட சரசவி உயன 08

இரசாயன உரங்களால் மனித உடலுக்கு பாதிப்பா?

ஆராய சுகாதார அமைச்சு தீர்மானம்

இரசாயன உரங்களால் மனித உடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்காக விசேட செயலணியொன்றை அமைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை அடுத்த வாரத்திற்குள் ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 08

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒரு வருடத்துக்கு ஒத்திவைப்பு

அமைச்சர் ஜனக பண்டார அமைச்சரவை பத்திரம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் கடந்த வாரம் அமைச்சரவை பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார். எனினும், இப்பத்திரம் அமைச்சரவையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லையென தெரியவருகிறது.

2017ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், உள்ளூராட்சி 08

சட்டவிரோத கருத்தடை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட

வைத்தியர் ஷாபிசிஹாப்தீன் மீண்டும் மருத்துவ பணியில்

சம்பள நிலுவையையும் செலுத்த சுகாதார அமைச்சு தீர்மானம்

சட்டவிரோத கருத்தடை அறுவை சிகிச்சை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஷாபி சிஹாப்தீனை மீண்டும் பணியில் சேர்க்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. அத்துடன் சம்பள நிலுவையை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமையால் சுகாதார அமைச்சு அதிரடி

கட்டாய விடுமுறையில் அனுப்பப்படும் அதிகாரி தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள் தாபனக் கோவையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கையில் இக் காலப்பகுதியில் சம்பளம் வழங்கப்படாமைக்கான காரணத்தை தாமதமின்றி அறிவிக்குமாறு அமைச்சின் செயலாளர் எழுத்துமூலம் வைத்தியசாலை பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

சாபி சிஹாப்தீன் 08

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் (15) சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

சுகாதார விதிமுறைகள் அலட்சியம்

மேல் மாகாணத்தில் பொலிஸாரின் அதிரடி

03

பசில் ராஜபக்ஷ வெளிநாடு பயணம்

பதில் நிதியமைச்சராக ஜீ.எல். பீரிஸ் நியமனம்

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பதில் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளதையடுத்து அந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இணையத்தளத்தின் ஊடான வர்த்தக கட்டமைப்பை பலப்படுத்தல்

அலிசப்ரி – நாமல் தலைமையில் கலந்துரையாடல்

இணையத் தளத்தினூடாக வர்த்தகம் (e Commerce) மேற்கொள்கையில் காணப்படும் வர்த்தக சட்ட கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினருடனான பேச்சுவார்த்தை டிஜிட்டல் தொழில்நுட்ப இராஜங்க அமைச்சரும் 08

15 வருடங்களுக்கு பின்னர்

தமிழ் அரசியல் கைதி ஒருவருக்கு விடுதலை

ஆயுதங்கள் கடத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைதாகி சிறையிலடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியொருவர் 15 வருடங்களின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நிரபராதியென தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலையாகியுள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த 45 வயது தேவராசா சிவபாலன் என்பவரே இவ்வாறு விடுதலையாகியுள்ளார். இவர் கடந்த 2006ஆம் ஆண்டு கொழும்பு, வத்தளையில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்டார். அதன்பின், 08

கிளிநொச்சி பகுதியில் துப்பாக்கி ரவைகள் தொடர்ந்தும் மீட்பு

கிளிநொச்சி, கோரக்கண்காட்டுப்பகுதியிலுள்ள தனியார் காணியொன்றிலிருந்து பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் 08

நாட்டில் மேலும் மூன்று ஒமிக்ரோன் தொற்றாளர்

அடையாளம் காணப்பட்டுள்ளதாக அறிவிப்பு

நாட்டில் ஒமிக்ரோன் கொவிட் திரிபு தொற்று உறுதியான மேலும் 03 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம 08

18 இலட்சத்தை கடந்த பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல்

ஒரே நாளில் 2,19,997 பேருக்கு தடுப்பூசி

நாட்டில் நேற்று முன்தினம் 2 இலட்சத்து 12,733 பேருக்கு மூன்றாம் பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது. இதன்படி, நாட்டில் இதுவரை பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 18 இலட்சத்து 69,758 ஆக அதிகரித்துள்ளது. 08

ஒமிக்ரோன் - திரிபு குறித்து உலக நாடுகள் அக்கறையின்மை

77 நாடுகளுக்கு பரவல் என WHO கவலை

கொரோனா வைரஸ் பிறழ்வின் ஒமிக்ரோன் திரிபு தொடர்பாக உலக நாடுகள் முக்கியத்துவமளிக்காமை தொடர்பில் உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

இதுவரையிலும் அடையாளம் காணப்பட்ட கொரோனா வகைகளுடன் ஒப்பிடும் 08

மண்ணெண்ணெய் அடுப்பின் விலை மும்மடங்காகியது

சந்தையில் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்பின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன.

சமையல் எரிவாயு விநியோகம் சீரான நிலைக்கு திரும்பாததாலும் தொடர்ந்து இடம்பெற்று வரும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் 08

எழிலன் உள்ளிட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் வழக்கு

ஆட்கொணர்வு மனுவின் தீர்ப்பு அடுத்த வருடம் 03

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்

சஹ்ரானின் மனைவி உட்பட 6 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

03

திருமண வைபவங்களுக்கு இனி புதிய கட்டுப்பாடு

புதிய சுகாதார வழிகாட்டி வெளியானது 03

முன்னாள் நீதவான் கமகே விடுதலை

சட்டவிரோதமாக யானைக்குட்டியை வைத்திருந்தமை தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் நீதவான் திலின கமகே நிரபராதியாகக் கருதி கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் கந்தனை தரிசித்த சீன தூதுவர்

வேட்டி அணிந்து சென்று வழிபாடு

யாழ்ப்பாணம் சென்றுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் மற்றும் தூதரக அதிகாரி வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர். 08

அழைப்பு விடுத்தவரை காணவில்லையாம்

பகிரங்க விவாதத்திற்கு சாணக்கியன் தயாராம்

கண்டால் அறிவிக்குமாறும் சவால்

பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் உடனான பகிரங்க விவாதத்திற்கு தான் தயாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்திருந்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கடந்த 08

விவாதத்திற்கு தயார்; ஹாபிஸ் MPஅறிவிப்பு

29ம் திகதி விவாதம் இடம்பெறலாம்

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோருக்கிடையில் மட்டக்களப்பு மாவட்ட காணி சம்பந்தமான எதிர்வரும் 29 ஆம் திகதி விவாதம் நடத்த நேரம் ஒதுக்க தயாராக இருப்பதாக வசந்தம் தொலைக்காட்சி சேவை அறிவித்துள்ளது. இதற்கு நசீர் அஹமட் எம்.பி விருப்பம் தெரிவித்துள்ளார். 08

விக்கல் வீராச்சாமி

யாழ் மாநகரசபையில பட்ஜெட் வெற்றி பெறாது எண்டு தமிழ் கூட்டமைப்பும் சைக்கிள் கம்பெனியும் கண்ட கனவு பிழைச்சு போச்சு....

அவை மட்டுமா இன்னும் சிலரும் உது தோக்க ஒத்தக்காலில் நிண்டவை, டக்ளஸ் ஐயா கண்ணைக் காட்டினார், காரியம் வெற்றி...!!!

சர்வதேச செய்திகள்

விளையாட்டு தளம் காற்றில் பறந்ததில் 5 சிறுவர்கள் பலி

அவுஸ்திரேலியாவில் குழந்தைகள் துள்ளி விளையாடும் காற்று அடைக்கப்பட்ட விளையாட்டுத் தளம் காற்றில் பறந்ததில் ஐந்து சிறுவர்கள் கொல்லப்பட்டதோடு மேலும் ஐவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

டாஸ்மேனியாவின் டெவோன்போர்ட்டில் உள்ள ஆரம்ப பாடசாலை கொண்டாட்ட நிகழ்ச்சியின்போதே இந்த விளையாட்டுத் தளம் பலத்த காற்றில் சிக்கி தூக்கிச் செல்லப்பட்டுள்ளது.

இதன்போது இந்த சிறுவர்கள் சுமார் 10 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் "திடீரென வலுவான காற்று வீசியதால்" நேர்ந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். சம்பவ இடத்தில் மருத்துவ உதவியாளர்களும் மீட்பு ஹெலிகொப்டரும் காணப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த சிறுவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டு ஹெலிகொப்டர்களில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சம்பவ இடத்திலேயே நான்கு சிறுவர்கள் உயிரிழந்ததோடு மற்றுமொருவர் மருத்துவமனையில் வைத்து உயிரிழந்துள்ளார்.

இந்த ஆரம்ப பாடசாலையின் ஆண்டிறுதி நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்ததாக ஏ.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இதற்கு முன்னர் 2019 ஆம் ஆண்டு சீனாவில் காற்று அடைக்கப்பட்ட விளையாட்டுத் தளத்தில் இடம் பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் உயிரிழந்ததோடு மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

அதற்கு முந்திய ஆண்டில் பிரிட்டனின் நோர்போக் கடற்கரையில் இவ்வாறான விளையாட்டுத் தளம் வெடித்து சிறுமி ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

பிரிட்டனில் கொரோனா தொற்று சாதனை அளவுக்கு அதிகரிப்பு

பிரிட்டனில் இதுவரை இல்லாத அளவுக்கு தினசரி கொரோனா தொற்று எண்ணிக்கை 78,610 ஆக உச்சத்தை தொட்டுள்ளது. இது கடந்த ஜனவரியில் பதிவான முந்தைய உச்ச எண்ணிக்கையை விடவும் சுமார் 10,000 அதிகமாகும்.

சுமார் 67 மில்லியன் மக்கள் தொகை கொண்ட பிரிட்டனில் தற்போது நோய் தொற்று சம்பவங்கள் 11 மில்லியனுக்கு மேல் அதிகரித்துள்ளது.

அதிக வேகமாகப் பரவும் புதிய ஒமிக்ரோன் திரிபே பிரிட்டனில் நோய்த் தொற்று அதிகரிப்பதற்கு காரணம் என்று பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். புதிய அலை ஒன்று பற்றியும் அவர் எச்சரித்தார்.

எனினும் அதிகரித்து வரும் நோய் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக 100க்கும் அதிகமான எம்.பிக்கள் வாக்களித்த நிலையில் ஜோன்சன் அரசு பின்னடைவை சந்தித்துள்ளது.

இது குறித்து, செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு தலைமை மருத்துவ அதிகாரி பேராசிரியர் கிறிஸ் விட்டி, "இந்த எண்ணிக்கை அடுத்த சில வாரங்களில் அதிகரிக்கும்", என்று கூறியுள்ளார்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, சமூக கொண்டாட்டங்கள் தொடர்பாக மக்கள் எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை அவர்கள் முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டனில் 10,000க்கும் அதிகமான ஒமிக்ரோன் திரிபு சம்பவங்கள் பதிவாகி இருக்கும் நிலையில் 10க்கும் குறைவான வர்களே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லண்டனிலேயே இந்த திரிபடைந்த வைரஸ் பரவல் அதிகரித்து காணப்படுவதோடு இந்தத் திரிபினால் இதுவரை ஒருவர் மாத்திரமே உயிரிழந்துள்ளார்.

உக்ரைன் எல்லையில் படை குவிப்பு: ரஷ்யாவுக்கு ஐ. ஒன்றியம் எச்சரிக்கை

உக்ரைன் எல்லையில் ரஷ்ய படைகள் குவிக்கப்பட்டு வரும் கவலைக்கு மத்தியில் உக்ரைனுக்கு எதிரான பகை நடவடிக்கைக்கு கடும் பதில் கொடுக்க வேண்டி ஏற்படும் என்று ஐரோப்பிய தலைவர்கள் ரஷ்யாவை எச்சரிக்கவுள்ளனர்.

பிரசல்ஸில் இடம்பெற்ற ஐரோப்பிய கௌன்சில் மாநாட்டில் இதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது. ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மேற்குலக நாடுகள் விடுக்கும் எச்சரிக்கைகளின் தொடர்ச்சியாகவே இது உள்ளது.

உக்ரைனுக்கு எதிராக எந்த தாக்குதல் திட்டமும் இல்லை என்று ரஷ்யா மறுத்துள்ளது.

இதேநேரம் அமெரிக்காவுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்று ரஷ்யா தனது கோரிக்கையை முன்வைத்துள்ளது.

உக்ரைன் எல்லைக்கு அருகே 100,000 ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டிருப்பதாக மேற்குலக உளவுச் சேவைகள் தெரிவித்துள்ளன. ஜனவரி முடிவில் உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாக உக்ரைன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனினும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இது பற்றி முடிவு எடுத்துள்ளாரா என்பது பற்றி இன்னும் உறுதியாகவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பதற்றத்தை தணிக்கும் படி ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறைவேற்றுக் குழுவான ஐரோப்பிய ஆணைக்குழு தலைவர் உர்சுல் வொன் டெர் லெயேன் கடந்த திங்கட்கிழமை ரஷ்யாவை வலியுறுத்தியுள்ளார். "நீங்கள் நினைக்கும் வெவ்வேறு துறைகளை இலக்கு வைத்து மேலதிக தடைகள் ஏற்கனவே தயார் நிலையில் உள்ளன" என்றும் அவர் ரஷ்யாவை எச்சரித்திருந்தார்.

எனினும் கிழக்கு பக்கமாக நோட்டோவின் விரிவாக்கம் மற்றும் ரஷ்ய எல்லைகளுக்கு நெருக்கமாக ஆயுதங்களை நிறுத்துவதற்கு எதிராக சட்டரீதியான பாதுகாப்பை ரஷ்யா கோரியுள்ளது. தமது செயற்பாடுகள் தற்காப்பு நோக்கம் கொண்டது என்று குறிப்பிட்டிருக்கும் நேட்டோ அமைப்பு, நேட்டோவில் இணையும் உக்ரைனின் எதிர்பார்ப்பை எந்த நாட்டாலும் தடுக்க முடியாது என்றது.

உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ரஷ்ய எல்லைகளை பகிர்ந்துகொண்டபோதும் ரஷ்யாவுடன் ஆழமான சமூக மற்றும் கலாசார உறவை கொண்டுள்ளது. உக்ரைன் ஆத்திரத்தை தூண்டுவதாக ரஷ்யா குற்றம்சாட்டி வருகிறது.

பாகிஸ்தான் நாணயத்தின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சி

பாகிஸ்தானின் நாணயத்தின் பெறுமதி கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதாக 'தி நியூஸ் இன்டர்நெசனல்' தெரிவித்துள்ளது. இக்காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிராக பாகிஸ்தான் ரூபாய் 30.5 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2018 ஒகஸ்ட் மாதமாகும் போது அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 123 பாகிஸ்தான் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2021 டிசம்பராகும் போது 177 பாகிஸ்தான் ரூபாவாக அதிகரித்துள்ளது. பாகிஸ்தான் நாணயத்தின் பெறுமதி வீழச்சியடைந்து வருவதையும் நாட்டில் பணவீக்கம் அதிகரித்திருப்பதையும் இது எடுத்துக்காட்டுவதாக தி நியூஸ் இன்டர்நெசனல் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் பொருளாதார ஆலோசகர் கலாநிதி அஸ்பாக் ஹஸ்ஸான் கான் கூறுகையில், நாட்டின் நிதிக் கொள்கையில் பணவீக்கமும் மாற்று விகிதக் கொள்கைகளும் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளதால் பொருளாதாரக் கொள்கை வகுப்பதில் வீழச்சி நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு பணவீக்கம் மற்றும் மாற்று விகிதத் தேய்மானத்தின் விளைவான பணவீக்க அதிகரிப்பு, பொதுபடுகடன் மற்றும் கடன் சேவைக்கும் வழிவகுத்துள்ளது என்றுள்ளார்.

செவ்வாயில் எரிமலை பாறைகள் கண்டுபிடிப்பு



அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் செவ்வாய் கிரகத்தின் ஆய்வு கலமான பெர்சவெரஸ் அது தரையிறங்கியுள்ள பள்ளத்தாக்கில் மிகப் பழைமையானது என்று நம்பப்படும் பாறைகளை அடையாளம் கண்டுள்ளது.

அவை எரிமலைகளை பூர்வீகமாகக் கொண்டிருப்பதோடு, பண்டைய எரிமலை குழப்பில் இருந்து வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்தப் பாறைகளின் மாதிரிகள் அடுத்த தசாப்தத்தில் பூமிக்கு கொண்டுவரப்படவிருக்கும் நிலையில் இந்த கண்டுபிடிப்பு ஒரு மைல் கல்லாக பார்க்கப்படுகிறது.

தரையிறக்கப்பட்ட பகுதி மாத்திரமல்ல இந்த கண்டுபடிப்பு பொதுவாக செவ்வாய்க் கிரகம் மற்றும் அதற்கு அப்பால் பரந்த சூரிய மண்டலம் பற்றிய எமது புரிதலை அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலவியல் அம்சங்கள் செவ்வாயில் பில்லியன் ஆண்டுகளுக்கு முன் கடந்த கால நுண்ணுயிர்கள் பற்றிய தடயங்களை பெற உதவியாக அமைகிறது.

இஸ்ரேல் தாக்குதலில் சிரிய படை வீரர் பலி

தெற்கு சிரியாவில் இஸ்ரேலிய ஏவுகணை தாக்குதல் ஒன்றில் சிரிய படை வீரர் ஒருவர் பலியாகி இருப்பதாக சிரிய அரச செய்தி நிறுவனமான சானா தெரிவித்துள்ளது.

"புதன்கிழமை அதிகாலை 12.50 மணி அளவில் இஸ்ரேலிய எதிரிகள் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று பக்கமாக இருந்து பல ஏவுகணைகளை வீசி வான் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு தெற்கில் பல நிலைகள் இலக்கு வைக்கப்பட்டன" என்று இராணுவ தரப்பை மேற்கோள்காட்டி சானா செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் பொரும்பாலான ஏவுகணைகளை சுட்டு வீழ்த்த சிரிய வான் பாதுகாப்பு அமைப்பால் முடிந்தது என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் படை வீரர் ஒருவர் உயிரிழந்ததோடு பொருட் சேதங்களும் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

2011 இல் சிரியாவில் போர் வெடித்தது தொடக்கம் அந்நாட்டின் மீது இஸ்ரேல் நூற்றுக்கணக்கான தாக்குதலை நடத்தி இருந்தபோதும் அது பற்றி வெளி உலகுக்கு கூறுவது அரிதாக இடம்பெற்றுள்ளது.

பிரிட்டன் மீது பிரான்ஸ் கடும் பயண கட்டுப்பாடு

ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபின் பரவலை கட்டுப்படுத்த முயற்சிக்கும் பிரான்ஸ் அரசு, பிரிட்டனில் இருந்து வரும் பயணிகள் மீது கொவிட் கட்டுப்பாடுகளை விதிதுள்ளது.

இதன்படி வரும் சனிக்கிழமை தொடக்கம் குடிமக்கள் அல்லாத அனைவரும் பிரான்ஸுக்கு வருவதற்கான கட்டாய காரணி ஒன்றை வழங்குவதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து வருகையாளர்களும் 24 மணி நேரத்திற்கு குறைவான காலத்திற்குள் எடுத்துக்கொண்ட கொவிட் தொற்று இல்லை என்பதை உறுதி செய்யும் சோதனை முடிவை வழங்க வேண்டும் என்பதோடு குறைந்தது இரு நாட்கள் தனிமைப்படுத்தலில் ஈடுபட வேண்டும்.

பிரிட்டனில் உறுதி செய்யப்பட்ட ஒமிக்ரோன் திரிபு சம்பவங்கள் பிரான்ஸை விடவும் அதிகமாக உள்ளது.

பிரிட்டனில் கடந்த புதன்கிழமை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தினசரி கொரோனா தொற்று சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதில் 10,000க்கும் அதிகமான சம்பவங்கள் ஒமிக்ரோன் திரிபாக காணப்படுகின்றன. இதே காலப் பகுதியில் பிரான்ஸில் தினசரி தொற்றுச் சம்பவங்கள் 65,713 ஆக பதிவாகி இருப்பதோடு அதில் 240 மாத்திரமே ஒமிக்ரோன் திரிபு ஆகும்.

பெர்லின் சுவரை தகர்ப்பதற்கு தூண்டிய செய்தியாளர் மரணம்

பெர்லின் சுவர் தகர்க்கப்படுவதற்கு தூண்டுதலாக இருந்த இத்தாலி செய்தியாளர் ரிகார்டோ எஹ்ர்மான் தனது 92 ஆவது வயதில் காலமானார்.

கொம்யூனிச கிழக்கு ஜெர்மனி, பெர்லின் சுவரை திறப்பதற்கான தீர்க்கமான கேள்வியை அவர் கேட்டதே அந்த சுவர் தகர்க்கப்படுவதற்கு காரணமானது. 1989 இல் கிழக்கு ஜெர்மனி அரச பேச்சாளர் குன்டர் ஸ்கபொவ்ஸ்கியிடம், கிழக்கு ஜெர்மனிக்கு வெளியில் தனிப்பட்ட பயணங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவது பற்றி அவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

அது எப்போது நடக்கும் என்று அவர் கேள்வி கேட்டார். அப்போது ஸ்கபொவ்ஸ்கி, இப்போதே, உடன் அனுமதிக்கப்படுவதாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பு வெளியாகி சில மணி நேரத்திற்குள்ளேயே பெர்லின் சுவர் வீழ்ந்தது.

கிழக்கு ஜெர்மனியின் கம்யூனிச அரசு நெருக்கடியை சந்தித்திருக்கும் நேரத்தில் எஹ்ர்மான் இத்தாலியின் அன்சா செய்தி நிறுவனத்தில் பணியாற்றி இருந்தார்.

இந்நிலையில் எல்லைக் கட்டுப்பாடு தளர்த்தப்படுவது குறித்து செய்தியாளர் சந்திப்பில் அரச பேச்சாளர் குறிப்பிட்டார். ஆனால் அதற்கான திகதி கூறப்படாத நிலையிலே, எஹ்ர்மான் எழுப்பிய கேள்வி நிலைமையை மாற்றியது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 டிசம்பர் 17 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

17 முதல் 18 வரை

சுபஹ்	04.54
லுஹர்	12.08
அஸர்	03.30
மஃரிப்	05.59
இஷா	07.14

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் மார்கழி 2

ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தமரண யோகம்

திதி: சதுர்த்தசி

இராசி பலன்கள்

மேஷம்	வெற்றி
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	சுகம்
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	செலவு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 96 ஆவது ஆண்டு வெற்றி விழாவை முன்னிட்டு நேற்று (16) காலை நடைபெற்ற மத வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அலகப்பெரும, மத குருமாருக்கு (அட்டபிரிகர) வஸ்திர தானம் வழங்குவதை காணலாம். அருகில் அமைச்சின் செயலாளர் ஜகத் விஜேவீர, கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசீம் உமர், தலைவரின் இணைப்பு செயலாளர் வீர சிங்கம் ஜெய்சங்கர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

சுகாதார விதிமுறைகள் அலட்சியம்:

மேல் மாகாணத்தில் பொலிஸாரின் அதிரடி

8,000 பேர் வரையில் சோதனை

மேல் மாகாணத்தில் சுகாதார விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் புதன்கிழமை (15) 8000க்கும் மேற்பட்ட நபர்கள் சோதனைக் குட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இதில் 828 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டதுடன் 2,970 மோட்டார் சைக்கிள்களும் 2,530 முச்சக்கரவண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று 8,155 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் இவர்களில் 1995 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர்ந்தும் இவ்வாறான சோதனைகளை முன்னெடுத்து, சுகாதார விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர்

மலேரியா நோயாளி யாழ். நகரில் கண்டுபிடிப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலத்தின் பின் மலேரியா நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதன்கிழமை இரவு அனுமதிக்கப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவருக்கே மலேரியா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்தவரென தெரிவிக்கப்படுகிறது. கடுமையான காய்ச்சல் மற்றும் மலேரியாவுக்கான அறிகுறிகளுடன் புதனிரவு 8 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியாத்

08

ஐ.நா. சபையின் உதவி செயலாளர் தடுப்பூசி திட்டத்திற்கு பாராட்டு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் (15) சந்தித்தபோது

"இலங்கையில் மிகச்சிறந்த தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டம் காணப்படுகிறது" என குறிப்பிட்டார்.

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள பல நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளதாக இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது மீண்டும் படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்திருப்பதாக பிரதமர் இதன்போது குறிப்பிட்டார். கொவிட்19 தொற்று நிலைமை காரணமாக உலகளாவிய ரீதியில் சுற்றுலாத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது. தடுப்பூசி ஏற்றல் செயற்பாடுகளின் ஊடாக சுற்றுலாப் பயணிகளின்

08

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அமரர்களை நினைவுகூரும் நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து அமரத்துவம் அடைந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு ஒன்றை கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை (22) கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் தி.ஞானசேகரன் தலைமையில் சங்கரப் பிள்ளை மண்டபத்தில் பிற்பகல் 04 மணிக்கு நடத்த ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் அமரத்துவம் அடைந்தவர்களை நினைவுகூருதலும் அதனையடுத்து சிறப்புரையும் நடைபெறவுள்ளது. இந்த நினைவுகூரும் நிகழ்வில் அனைவரையும் கலந்துக் கொள்ளுமாறு கொழும்புத் தமிழ்ச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகர் வெளிநாட்டு அமைச்சருடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை நேற்று வெளிநாட்டமைச்சில் சந்தித்து, இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடினார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பரஸ்பர ஒத்துழைப்பு சார்ந்த விடயங்கள் மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அண்மைய இந்திய விஜயத்தின் விளைவுகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை

விடைத்தாள் திருத்துனர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

On Line ஊடாக விண்ணப்பிக்குமாறு பரீட்சை திணைக்களம் அறிவிப்பு

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்களை ஒன்லைன் ஊடாக உறுதிப்படுத்துவது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் விஷேட அறிவித்தலொன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்துநர் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் எதிர்வரும் 31 திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk இனுள் பிரவேசித்து 'எமது சேவை' இன் கீழுள்ள ஒன்லைன் விண்ணப்பங்களை (பாடசாலைப் பரீட்சைகள்) க்ளிக் செய்வதன் மூலமோ அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தொலைபேசி பிரயோகமான "DoE' இனுள் பிரவேசித்து ஒன்லைன் விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்) மேல் க்ளிக் செய்வதன் மூலமோ அல்லது

08

நாட்டின் பொருளாதாரம் 1.5 சத வீதத்தால் வீழ்ச்சி

புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல்

இலங்கையில் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 1.5 சதவிகித எதிர்மறையான வளர்ச்சி வீதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மொத்த உள் நாட்டு உற்பத்தி (GDP) 2020 மூன்றாம் காலாண்டில் 25,36,490 மில்லியன்

08

எழிலன் உள்ளிட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் வழக்கு;

ஆட்கொணர்வு மனுவின் தீர்ப்பு அடுத்த வருடம்

ஓமந்தை விஷேட நிருபர்

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்டபோரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனவர்களை ஆஜர்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு அடுத்த வருடத்துக்கு தவணையிடப்பட்டதாக சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றால் நேற்று (16) அறிவிக்கப்படவிருந்தது. மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இறுதிப்போரின் கடைசி நாட்களில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவுக்கான தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்தது. இந்த வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று அந்த நீதிமன்றம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை மீதான வவுனியா மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பு நேற்று வழங்கப்படுவதாக நியமிக்கப்பட்டிருந்தது.

எனினும் அந்தத்தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லையென்று வவுனியா மேல்நீதிமன்றம் நேற்று எமக்கு அறிவித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் வருடம் மாசி மாதம் 14 ஆம் திகதி இந்த உத்தரவு அறிவிக்கப்படுமென்ற விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு இலங்கை இராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் சட்ட மாஅதிபருக்கும் எதிரானதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தமக்கள் காணாமல் போனமை தொடர்பாக இலங்கை இராணுவமும், அரசாங்கமுமே பொறுப்புக் கூற வேண்டும் என்ற விடயத்தை கருப்பொருளாக கொண்டு இந்த வழக்குதாக்கல் செய்யப்பட்டது.

வழக்கில் இராணுவத்தின் சார்பாக அவர்களுடைய சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில்

08

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்:

சஹ்ரானின் மனைவி உட்பட 6 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

ஜனவரி 06 வரை நீடித்து நீதிமன்றம் உத்தரவு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தற்கொலைக் குண்டுதாரியான தேசிய தவ்ஹீத் ஜமாஅத்தின் தலைவர் சஹ்ரானின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா உள்ளிட்ட சந்தேக நபர்கள் 06 பேரையும் ஜனவரி 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிமன்ற நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

சஹ்ரானின் மனைவியான அப்துல் ஹஷீம் பாத்திமா ஹாதியா, அசாருதீன் முஹமது இல்மி, அப்துல் ஹமீத் முஹமது ரிபாஸ், முஹமது மஷ்னுக் முகம்மது ரிலா, முஹம்மது அமீர் எம் அயதுல்லா, முஹமது முபாரக் முஹமது ரிபாயில் என்பவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போதுள்ள கொவிட் சூழ்நிலையின் காரணமாக சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவில்லை. சந்தேக நபர்கள் தொடர்பாக காணொலி தொழில்நுட்பத்தினூடாக விசாரித்த நீதிபதி, இந்த தீர்ப்பை வழங்கினார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்பட வேண்டுமென குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஷங்ரில்லா ஹோட்டலில் குண்டு தாக்குதல் நடத்திய சந்தேக நபரான சஹ்ரானின் மனைவி அப்துல் ஹமீத் பாத்திமா ஹாதியா போகம்பறை சிறையிலும் ஏனைய சந்தேக நபர்கள் பூஸ்ஸ உள்ளிட்ட சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(ந.திஸ்னா குமாரி)

திருமண வைபவங்களுக்கு இனி புதிய கட்டுப்பாடு

புதிய சுகாதார வழிகாட்டி வெளியானது

திருமண நிகழ்வுகளில் மண்டப கொள்ளளவில் 50 சதவீதமானோர் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், மரணச் சடங்குகளில் ஒரு தடவையில் 30 பேர் பங்கேற்க முடியுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று 16 ஆம் திகதி முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையிலான புதிய சுகாதார வழிகாட்டி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று வெளியிடப்பட்டது. அதில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, திருமண நிகழ்வுகளில் மதுபான பாவனைக்கு முன்னதாக விதிக்கப்பட்டிருந்த தடை இந்த புதிய சுகாதார வழிகாட்டியின் ஊடாக தளர்த்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபரின் சடலத்தை

அடையாளம் காண உதவுமாறு பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

ஹொரண பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கணேதென்ன பொது மயானத்திற்கு அருகிலுள்ள இறப்பர் தோட்டத்தின் காட்டில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கடந்த 07ம் திகதி மீட்கப்பட்டது. சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஹொரண வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்ட ஆண் சுமார் 40 – 50 வயதுடைய 05 அடி 08 அங்குலம் உடையரமுடையவரென்றும் கழுத்தில் தங்க நிற தர்ம சக்கரம் கறுப்பு நூலில் தொங்கவிடப்பட்டுள்ளதாகவும் உடலில்

08

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	140.78	146.76
கனடியன் டொலர்	155.95	161.79
யூரோ	223.47	232.04
ஜப்பான் யென்	1.7385	1.8041
சிங்கப்பூர் டொலர்	145.03	149.70
ஸ்டேலிங் பவுன்ஸ்	261.72	270.05
சுவிஸ் பிராங்க்	214.26	222.22
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	534.68	கட்டார் ரியால்	55.35
குவைத் டினார்	665.72	சவூதி ரியால்	53.73
ஓமான் ரியால்	523.61	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.88

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மார்கழி மாதம் 2ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 11

குறள் தரும் சிந்தனை



தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்

களங்கத்துக்குப் பயப்படக் கூடியவர்கள்தான் விளைவுகளை எண்ணிப் பார்த்து அந்தக் களங்கம் தரும் காரியத்தில் இறங்காமல் இருப்பார்கள்.

பண்டிகைகள் நெருங்கும் வேளையில் பொறுப்புணர்வு மிகவும் அவசியம்

கொரோனா பிறழ்வின் மற்றைய ஒரு வைரஸான ஒமிக்ரோன் இதுவரை சுமார் நாற்பது நாடுகளுக்கு பரவி இருக்கிறது. ஒமிக்ரோன் பரவல் தொடர்பாக உலக சுகாதார நிறுவனமும் சர்வதேச மருத்துவ அறிவியலாளர்களும் எச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டுள்ள போதிலும், ஒமிக்ரோன் தொற்றானது உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியது என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை. அத்தொற்று மக்கள் மத்தியில் வேகமாகப் பரவுகின்றதே தவிர எந்த ஒரு நாட்டிலும் பாரதூரமான உயிராபத்துகளை ஏற்படுத்தியுள்ளதாக இதுவரை தகவல்கள் இல்லை.

அது ஒருபுறம் இருக்க கொரோனாவின் கோரத் தாண்டவம் வீழ்ச்சி நிலைமைக்கு சென்றுகொண்டிருப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் பலர் சமீபத்தில் தெரிவித்துள்ளனர். இதுவரை உலகம் சந்தித்து வந்துள்ள பாரதூரமான அலைகளைப் போன்று இனிமேல் அலைகள் தோன்றுவதற்கான சாத்தியம் கிடையாதென்று அவர்கள் கூறி இருப்பது நிம்மதி தரும் செய்தியாகும்.

கொவிட் தொற்றுக்கு இதுவரை உலக மக்களில் அதிகளவானோர் உள்ளாகி விட்டதாலும் தடுப்பூசி நடவடிக்கை எதிர்ப்பு சக்தியை கொடுத்துள்ளதாலும் வீரியம் நிறைந்த பிறழ்வுகளை இனிமேல் எதிர்பார்க்க முடியாதென மருத்தவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மக்களின் உடலில் எதிர்ப்பு சக்தி உருவாகி விட்டதால் இனிமேல் விலங்குகளிலேயே கொரோனா தாக்கம் செலுத்துவதற்கு இடமுண்டு என்று அவர்கள் கூறுகின்றனர். எனினும் மனிர்களுடன் ஒப்பிடுகையில் விலங்குகளில் அதன் தாக்கம் குறிப்பிடும்படியாக இருக்குமா என்பது இன்னும் கண்டறியப்படவில்லை.

இந்த அறிக்கைகளை எல்லாம் வைத்துப் பார்க்கின்ற போது கொரோனாவின் உச்சபாதிப்பு கட்டத்தை மனிதகுலம் தாண்டி வந்து விட்டது என்றே சொல்லத் தோன்றுகின்றது. ஆனாலும் மக்கள் ஒரு போதும் இந்த விடயத்தில் அசமந்தமாக இருந்து விட முடியாது. உலகெங்கும் பெரும்பாலான மக்கள் தடுப்பூசி ஏற்றிக் கொண்டதனாலும் சமூக இடைவெளியை கடைப்பிடித்து அடிப்படை சுகாதார பழக்க வழக்கங்களை பேணி வந்ததனாலேயே கொரோனாவை ஓரளவாவது வெற்றி கொள்ள முடிந்துள்ளது.

ஆனாலும் இதுஒரு நிரந்தரமான முடிவல்ல என்பதை ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். சிறிதளவிலான கொரோனா தொற்று பரவல் கூட மனித சமூதாய முன்னேற்றத்தில் ஓரளவாவது தாக்கத்தை செலுத்திக் கொண்டே இருக்கும் என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

கடந்த வருடத்தில் இலங்கை மக்கள் சந்தித்த ஒவ்வொரு அலைக்கும் மக்களது அலட்சியமே காரணமாகும். சித்திரைப் புத்தாண்டு மற்றும் இஸ்லாமியப் பண்டிகை சமூக ஒன்றுகூடல்கள் போன்றவை எல்லாம் கொத்தணிகள் தோன்றுவதற்கும், அலைகள் உருவெடுப்பதற்கும் வழிவகுத்திருந்தன. மருத்துவ சுகாதாரத் துறையினர் தொடர்ச்சியாக எச்சரிக்கைகள் விடுத்து வந்த போதிலும், மக்கள் அவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளாததன் காரணமாகவே எமது நாடு ஏராளமான உயிரிழப்புகளையும் கல்வி பொருளாதாரம் உட்பட பல்வேறு துறைகளிலும் பெரும் இழப்புகளை சந்தித்திருந்தது.

அவ்வாறான இழப்புகளில் இருந்து நாம் இன்னுமே மீண்டெழவில்லை. கொரோனாவினால் சம்பவிக்கின்ற உயிரிழப்புகள் நாட்டில் இன்னும் தொடர்ந்து கொண்டே வருகின்றன. அரசாங்க பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இன்னுமே முழுமையாக ஆரம்பிக்கப்படவில்லை. அவற்றை மீள ஆரம்பிப்பதில் இன்னும் தயக்கமே காட்டப்படுகின்றது. உலகில் இருந்து கொரோனா தொற்று முழுமையாக ஒழிக்கப்படும் நாள்வரை மனிதகுலம் மீதான அச்சுறுத்தலும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்நிலையில், நத்தார் புத்தாண்டுக் கொண்டாட்டங்களும் அதன் பின்னர் தைப்பொங்கல் பண்டிகையும் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இக்கொண்டாட்டங்களின் போது மக்கள் சமூக இடைவெளியை மறந்து ஒன்றுகூடுவது கொவிட் தொற்று பரவலை மீண்டும் அதிகரிப்பதற்கே வழிவகுக்கும் என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்கள் மிகுந்த விழிப்புணர்வைப் பேணியவாறு செயற்படுவதே புத்திசாலித்தனமானதாகும். இல்லையேல் நாடு மீண்டும் ஆபத்து நிலைமைக்குள் செல்லும் என்பதை மறந்துவிடலாகாது.

புறக்கோட்டை போன்ற முக்கிய நகரங்களில் உள்ள ஆடை விற்பனை நிலையங்களில் புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு தற்போது மக்கள் திரண்டு நிற்பதைக் காண முடிகின்றது. நாட்டின் ஏனைய நகரங்களிலும் விற்பனை நிலையங்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகின்றது. கொவிட் தொற்று முடிவுக்குக் கொண்டு வரப்படாத இன்றைய நிலையில், இவ்வாறெல்லாம் மக்கள் அலட்சியமாக நடந்து கொள்வது ஆபத்தாகவே முடியுமென்பதை மறந்து விடலாகாது. ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால் மட்டுமே எதிர்காலத்தில் ஆபத்து மீண்டும் தலைதூக்குவதைத் தடுக்க முடியும்.

editor.tkn@lakehouse.lk

கொழும்பு பல்கலைக்கழக 2019 ஆம் ஆண்டுக்கான சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17(இன்று), 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றன. கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடங்கள், கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் வளாகங்களில் இருந்து 2668 பட்டதாரிகள் பட்டம் பெறுகின்றனர்.

பல்கலைக்கழக வேந்தர், சாசன கீர்த்தி சிறி புத்த சாசன ஷோபன வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரர், உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சந்திரிகா என். விஜயரத்ன, மண்டப தலைவர், பீடாதிபதிகள், பணிப்பாளர்கள், நூலகர், கல்விசார் பணியாளர்கள், பதிவாளர் மற்றும் நிதிநிர்வாகி (பேர்ஸர்) ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மூன்று தினங்களில் பதினொரு அமர்வுகளாக சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு நிகழ்வு நடைபெறுகின்றது. டிசம்பர் 17 ஆம் திகதி, கலைப் பீடம், கல்விப் பீடம் மற்றும் மனிதவள மேம்பாட்டு நிறுவனம், மருத்துவ பீடம் ஆகியவற்றின் அமர்வுகள் நடைபெறும். டிசம்பர் 18 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிக் கற்கைகள் நிறுவனம், முகாமைத்துவ மற்றும் நிதிபீடத்தின் பட்டமளிப்பு அமர்வுகளும், டிசம்பர் 19 ஆம் திகதி சட்ட பீடம், சுதேச மருத்துவ நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனம், சிறிபாளி வளாகம் மற்றும் விஞ்ஞான பீடம் ஆகியவற்றின் பட்டமளிப்பு அமர்வுகளும் நடைபெறுகின்றன.

பட்டமளிப்பு உரைகளை கலாநிதி குலதுங்க ராஜபக்ஷ, பேராசிரியர் துசித அபேதுங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, பீட்டர் டி அல்மேதா, ரணில் விதாரண, வணக்கத்திற்குரிய தபோவனயே சுதாதர தேரர், மஜூல டி சில்வா, கலாநிதி சரத் காமினி டி சில்வா, கலாநிதி ரொஹான் பெர்னாண்டோ, கலாநிதி டபிள்யூ. எம். டபிள்யூ. வீரக்கோன் மற்றும் அருட் தந்தை நொயல் டயஸ் அந்தந்த அமர்வுகளில் உரைநிகழ்த்துவர்.இந்த ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகம் தனது கலை, விஞ்ஞான பீடங்களினதும், பிரதான நூலகத்தினதும் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியமை விஷேட அம்சமாகும்.

இலங்கையின் முதலாவது கேபிள் கார் திட்டம்

நுவரெலியாவில் இருந்து நானு ஓயா வரையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் நிர்மாணம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க முதலீடாக நாட்டின் முதலாவது கேபிள் கார் திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி, இலங்கையை துரித அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விசேட அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றான நுவரெலியா கேபிள் கார் திட்டத்தை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நுவரெலியா அபிவிருத்தித் திட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடன அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றுமொரு அபிவிருத்தித் திட்டம் ஆகும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நகர அபிவிருத்தி, திண்மக் கழிவகற்றல் மற்றும் பொது சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா வழிகாட்டலின் கீழ், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இத்திட்டம் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. நுவரெலியா மாவட்டத்திற்கு வருகை தரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்ட இந்த கேபிள் கார் திட்டம், நுவரெலியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு புத்துணர்ச்சி மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான சகல வசதிகளையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நுவரெலியாவில் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களைப் போன்று இத்திட்டமும் அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கேபிள் கார் திட்டமும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய அனுபவத்தை தரும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நானுஓயாவிலிருந்து நுவரெலியா வரையிலான 4 கிலோமீற்றர் தூரத்தை இரண்டு கட்டங்களாக விரிவுபடுத்துவதும் சுற்றுச்சூழலின் அழகையும் சுற்றுப்புறப் பகுதியையும் வெவ்வேறு கோணங்களில் அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குவதே இந்த கேபிள் கார் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது போன்ற கேபிள் கார் திட்டங்கள் சுற்றுலா தலங்களாக மாறிவிட்ட பல நாடுகளில் செயல்பாட்டில் உள்ளன.

நுவரெலியா மாவட்டம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பிரபலமான சுற்றுலாத் தலமாகும். இந்தப் பகுதியும் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை சுட்டிக் காட்டியுள்ளது.

அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முக்கிய மற்றும் பூர்வாங்க திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளன. உத்தேச கேபிள் கார் திட்டத்தை அடுத்த 18 மாதங்களுக்குள் முடிக்க அனைத்து திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நுவரெலியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் ரத்நாயக்க தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கையும் மகிழ்ச்சியையும் விரும்புகிறார்கள். அதன் நிமித்தம் நகரங்களை அழகுபடுத்துவதும் அவசியம். இது சுற்றுலா அமைச்சின் பொறுப்பாகும். நெடுஞ்சாலை அமைப்பும் அவ்வாறானதாகும்.

இன்னும் இரண்டு வருடங்களில் கண்டிக்கு அதிவேகப் பாதை வரும். அப்போது நுவரெலியா சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக மாறும். இதற்கெல்லாம் கேபிள் கார் திட்டம் வருகிறது. இந்த திட்டம் இரண்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கூட்டு முயற்சியாகும். இதன் மூலம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் முதலீட்டாளர்களையும் கவரும் என நம்புகிறோம். இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். சுற்றுலாப் பயணிகளின் வருகை பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு சரிந்த சுற்றுலாத்தலத்தை மீட்டெடுக்கும்' என்று வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

இது நிச்சயமாக மிகவும் முக்கிய மற்றும் நினைவில் அழியாத நிகழ்வாக அமையும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா தெரிவித்தார்.

'இன்று கையொப்பமிடப்படும் இந்தத் திட்டம் 55 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான திட்டமாகும். இவ்வாறான பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் இந்த செயற்திட்டத்தின் பங்காளிகள் அனைவரும் அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் அனைவருக்கும் 20 முதல் 25 ஆண்டுகள் அனுபவம் உள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் ஜனாதிபதி அவர்கள் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் திட்டமிடப்பட்டவையாகும்.

அரசியல் அதிகார மாற்றம் காரணமாக அங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டு சீர்குலைந்து அபிவிருத்தித் திட்டங்களை மோசமாகப் பாதித்தன. ஆனால் இன்று அந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், வளர்ச்சி வேகமாகவும் முறையாகவும் முன்னேறி வருகிறது. தற்போது இலங்கை அபிவிருத்தியை நோக்கி நகர்கிறது. இந்தத் திட்டங்களில் அர்ப்பணிப்பு, ஆர்வமும், ஆர்வமும் உள்ள அனைவருமே இந்த சரியான தொடக்கத்தை இறுதிவரை எடுத்துச் செல்வார்கள். சரியான முடிவுகளை விரைவாக எடுக்கவும், அதன்படி செயல்படவும் நாங்கள் தயங்க மாட்டோம்" என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

நுவரெலியா கேபிள் கார் திட்டம் இலங்கை சுற்றுலாத்துறைக்கும் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் புத்துயிர் அளிக்கும் திட்டமாகும் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

'இந்த திட்டம் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் இது நாட்டின் திறைசேரிக்கும் , உள்ளூர் பொருளாதாரத்திற்கும் சுமையை ஏற்படுத்தாமல் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் திட்டமாகும். இந்தத் திட்டம் சுற்றுலா திணைக்களம் மற்றும் சுற்றுலா அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை ஒரு பங்குதாரராக செயற்படும். நகர அபிவிருத்தி அதிகாரசபை இதற்கான திட்டமிடல் மற்றும் சூழலை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும். நுவரெலியா மாவட்டத்தில் சுற்றுச்சூழலின் அடையாளத்தைப் பாதுகாத்து சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் விசேட திட்டமாக நானுஓயா விலிருந்து நுவரெலியா வரையிலான 4 கிலோமீற்றர் கேபிள் கார் திட்டத்தை இரண்டு கட்டங்களாக நிர்மாணிப்பது முக்கிய நோக்கமாகும்.

நுவரெலியாவில் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில். இதற்காக புதிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். இதற்காக 55 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்படுகிறது. இந்த திட்டம் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். இந்நாட்டில் கல்வி பயிலும் சிறார்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றே கூறலாம். எனவே, இது மிகவும் மதிப்புமிக்க திட்டமொன்றாகும்" என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

சுவீடன் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் முழுமையாகச் செயல்படும் இந்தத் திட்டம், 55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் உருவாக்கப்படும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் கையெழுத்திடப்பட்டது.

அந்நிகழ்விற்கு வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம்; பிரசாத் ரணவீர , சுவீடன் அவுட்டோர் இன்ஜினியரிங் நிறுவனத்தின் தலைவர் மற்றும் அவுட்டோர் இன்ஜினியரிங் இலங்கை தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒஸ்போல் காபர் போன்றோர் உட்பட பலர் சமுகமளித்திருந்தனர்.

நகர அபிவிருத்தி, திண்மக்கழிவு அகற்றல் மற்றும் பொது சுகாதார துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் வீடமைப்பு சிறினிமல் பெரேரா, நகர அபிவிருத்தி தலைவர் உதய நாணயக்கார, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இத்திட்டத்தின் நகர அபிவிருத்தி அதிகார சபை தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டபிள்யூ.கே. பிரசாத் மஞ்சு ...✍
(நகர அபவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)

மகிமைகள் நிறைந்த மார்கழி மாதம்

பன்னிரண்டு மாதங்களில் மார்கழி மாதத்திற்கென தனிச் சிறப்பு உண்டு, தனி மகிமை உண்டு."மாதங்களில் நான் மார்கழி யாக இருக்கிறேன் "என பகவான் கிருஷ்ணர் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

இந்த மாதம் ஆன்மீகத்தில் தேவர் களுக்கான வைகறை அதிகாலை நேர மாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே இந்த மாதம் முழுவதும் இறை வழிபாட் டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வருடத்தின் ஒன்பதாவது மாதம் மார்கழி ஆகும். இம்மாதத் தில் மேற்கொள்ளப்படும் அதிகாலை இறைவழிபாடு பற்றி மாணிக்க வாசகர் திருவெம்பாவையிலும், ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையிலும் போற் றியுள்ளனர். மார்கழியில் அதிகாலை வழிபாட்டில் கோவில்களில் வேதங் களுக்குப் பதிலாக திருப்பாவை, திரு வெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றன.

இம்மாதத்தில் மிருகசீரிட நட்சத்தி ரத்தில் என்றும் பதினாறு மார்க்கண் டேயர் பிறந்தார். எனவே மரணத்தை வெல்லும் மாதம் மார்கழி என மார்க் கண்டேய புராணம் குறிப்பிடுகிறது. ம் ருத்யுஞ்ச ஹோமம் செய்ய இம்மாதம் சிறந்தாகக் கருதப்படுகிறது.

இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனும ஜெயந்தி, பாவை நோன் பு, திருவெம்பாவை நோன்பு, படி உற்சவம், விநாயகர் சஷ்டி விரதம், போன்ற விழாக்க ள், பண்டிகைகள், விர தமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

திருவாதிரை:

திருவாதிரை திருவிழா மார்கழியில் பௌர்ணமியை ஒட்டிய திருவாதிரை நட்சத்திர நாளில் கொண்டாடப்படுகி றது. இவ்விழாவானது சிவபெருமானின் வடிவமான ஆடலரசன் நடராஜருக்காக கொண்டாடப்படுகிறது. திருவாதிரையை கொண்டே சிவபெருமானுக்கு ஆதிரை யன் என்ற பெயர் வழக்கத் தில் உள்ளது.

இவ்விழா பற்றி திருஞானசம்பந் தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் தங்கள து பாடல்களில் குறிப்பிட்டுள் ளனர். தமிழ்நாட்டில் திருச்சிற்றம்பலம் என்னும் தில்லை சிதம்பரத்திலும், உத்திரகோச மங்கையிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ் விரதம் சிவனுக்கு உகந்ததாகக் கருதப் படுகிறது.

வைகுண்ட ஏகாதசி:

வைகுண்ட ஏகாதசி மார்கழியில் வளர்பிறையில் கொண்டாடப்படுகி றது. வைகுண்ட ஏகாதசியில் திருமால் வழிபாடு மிகச் சிறப்பாக மேற்கொள் ளப்படுகிறது. எல்லா இந்து மக்க ளாலும் இத்தினத்தில் விரதமுறை மேற்கொள்ளப்படுகிறது. திருமாலை வழிபடும் விரதமுறைகளில் இது மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

காயத்ரிக்கு மிஞ்சிய மந்திரம் இல்லை,ஏகாதசிக்கு மிஞ்சிய விர தமும் இல்லை என்பது இவ்விரதம் பற்றிய பழமொழியாகும். இவ்விழா வில் சொர்க்கவாசல் திறப்பு என்பது முக்கிய நிகழ்சியாகும். வைகுண்ட ஏகாதசி அன்று துளசி நீரினை மட்டும் உட்கொண்டு பகல் மற்றும் இரவு விழித்திருந்து திருமால் பற்றிய பாடல்கள் பாடி விரதமுறை மேற் கொள்ளப்படுகிறது. இவ்விரத வழிபாடு வைகுந்த பதவி என்னும் மோட்சத்தை நல்கும் என்று கருதப்படுகிறது.

பாவை நோன்பு:

ஆயர்பாடியில் கோபியர்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் ஆற்றுக்கு சென்று நீராடி மண்ணால் செய்த காத்யாணி தேவியை வழிபட்டு நல்ல கணவன் கிடைக்க வழிபாடு நடத்தினர். பெண்கள் கடைப்பிடித்த விரதமாயின் இவ்விரதம் பாவை நோன்பு என்று வழங்கலாயிற்று.

ஆண்டாள் பாவை நோன்பை மேற் கொண்டே அரங்கனை கணவனாக அடைந்தாள். பாவை நோன்பின் போது நெய், பால் முதலியவற்றை உண்ணாம லும், கண்ணுக்கு மையிடாமல், தலையில் மலர் சூடாமல் புறஅழகில் நாட்டம் செலுத் தாமல் இறைநாட்டத்தில் மட்டும் மனதினைச் செலுத்தி பாவை நோன்பினை மேற்கொண்டாள்.

எனவே கன்னிப் பெண்கள் நல்ல கணவன் கிடைக்க மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி கோவி லுக்குச் சென்று ஆண்டாள் எழுதிய திருப்பாவையைப் பாடி வழிபாடு நடத் துகின்றனர். திருமண மான பெண்கள் மகிழ்ச் சியான மணவாழ்வு நீடிக்க வேண்டியும், குடும்ப நலன் வேண் டியும் இவ்விரத்தினை மேற்கொள்கின்றனர்.

திருவெம்பாவை நோன்பு:

திருவெம்பாவை நோன்பு என்பது மார்கழி யில் வரும் திருவாதிரைக்கு ஒன்பது நாட் களுக்கு முன்பு கடைப்பி டிக்கப்படுகிறது. அதாவது திருவாதிரை யோடு சேர்த்து விரத நாட்கள் மொத்தம் பத்து ஆகும். இந்நோன்பில் அதிகாலை யில் எழுந்து நீராடி சிவகாமியுடன் கூடிய நடராஜரை வழிபடுவர். இவ்வி ரதத்தின் போது ஒரு வேளை அவித்த உணவினை மட்டுமே உண்பர்.

இவ்விரதத்தினை பெரும்பாலும் கன்னிப் பெண்கள் கடைப்பிடிப்பர். இவ்விரதத்தின் போது திருவெம் பாவை பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்வழிபாட்டில் பிட்டு படைக்கப்படு கிறது.

முருகன் படி உற்சவம்:

ஆண்டுதோறும் டிசம்பர் 31 ஆம் திகதி மலை மேல் உள்ள முருகன் கோயில்களில் படி உற்சவம் என்ற விழா சிறப்பாக நடைபெறுகிறது. அன்றைய தினம் பக்தர்கள் குழுக்க ளாக மலைப்படிகளின் ஒவ்வொரு படி யிலும் நின்று திருப்புகழ் பாடல்களைப் பாடுகின்றனர். இவ்விழா அறுபடை வீடுக ளில் ஒன்றான திருத்தணியில் மிகவிமரி சையாகக் கொண்டாடப்படுகிறது.

விநாயகர் சஷ்டி விரதம்:

இவ்விரதம் கார்த்திகை மாதம் வளர் பிறை பிரதமை முதல் தொடங்கி மார்கழி வளர்பிறை சஷ்டி வரை மொத்தம் 21 நாட்கள் கடைப்பிடிக்கப் படுகிறது.

இவ்விரத முறையில் ஆண்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கை யிலும் 21 இழைகளாலான காப்பி னைக் கட்டிக் கொள்கின்றனர். முதல் 20 நாட்களும் ஒரு வேளை மட்டும் உணவினை உட்கொள்கின்றனர். கடைசி நாள் முழுஉபவாசம் மேற் கொள்கின்றனர்.

விரதத்தின் நிறைவு நாள்அன்று பலவிதமான உணவுப் பொருட்களை தானமாகக் கொடுப்பர். இவ்விரதத்தின் பலனாக நல்ல வாழ்க்கைத் துணை, நற் புத்திரப்பேறு ஆகியன கிடைக்கும்.

அனுமன் ஜெயந்தி:

மார்கழி மாதத்தின் மூல நட்சத்தி ரத்தோடு கூடிய அமாவாசை அன்று அனுமன் ஜெயந்தி தமிழ்நாட்டில் கொண்டாடப்படுகிறது.

அனும ஜெயந்தி அன்று விரதம் மேற்கொண்டு மன உறுதி, ஆற்றல், தைரியம் ஆகியவற்றை அருளுமாறு பிரார்த்தனை மேற் கொள்ளப்படுகிறது. அனுமனிற்கு சிறப்பு வழிபாடுகள், ஆராதனை கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறாக மார்கழியில் பிள் ளையார், முருகப்பெருமான், சிவ பெருமான், திருமால் என எல்லா கடவுளரும் வழிபடப்படுகின்றனர். இதுவே மார்கழி மாத சிறப்பு ஆகும்.

வி.ரி.சகாதேவராஜா ...✍
காரைதீவு குறூப் நிருபர்

நகர்ப் பகுதிகளைப் போன்று கிராமங்களும் விளையாட்டுத் துறையில் முன்னேற வேண்டும்

சுழிபுரம், பாண்டவெட்டை இளைஞர் தயந்தனின் கனவு

இன்றைய காலகட்டத்தில் ஏனைய துறைகளைப் போன்று விளை யாட்டுத் துறையின் வளர்ச்சி மற்றும் வீரர்களின் சாதனைகளும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின் றன. விளையாட்டுத்துறையின் பெரும் பாலான சாதனையாளர்கள் நகர்ப்புறங் களில் வசிப்பவர்களாகவும், விளையாட்டு குடும்ப பின்னணியைக் கொண்டவர்களாகவும் மேலும் சிலர் பணபலம் படைத்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அதேநேரம் நகரப் பகுதியில் உள் ளவர்களைப் போன்று விளையாட்டுத் துறையில் சாதிக்க விரும்பும் வீரர்கள் பலர் கிராமப்புறங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் திறமை களை ஊக்கப்படுத்துவதற்கும், இவர்க ளின் திறமைகளை வெளியுலகுக்குக் கொண்டு வருவதற்கும் யாரும் முன்வ ராத நிலைமை பின்தங்கிய கிராமங்கள் பலவற்றில் காணப்படுகின்றது.

இவ்வாறான கிராமப் பகுதி வீரர்கள் தமது திறமையை வெளிக்கொண்டு வருவதற்காக ஆர்வத்துடன் செயல்படக் கூடிய ஓர் கிராமமாக யாழ் மாவட்டத் தின் சுழிபுரம் பாண்டவெட்டை உள்ளது. இருப்பினும் அங்குள்ள பிள்ளைக ளின் விளையாட்டுத் துறை சார்ந்த ஆர்வத்தை ஊக்குவிப்பதற்கு எவரும் முன்வராமையால் அவர்கள் பல பிரச்சி னைகளை எதிர்கொள்வதோடு, திறமை இருந்தும் அக்கிராமத்துக்குள்ளே முடங்கி இருக்கின்றார்கள்.

இவர்களில் ஒருவராகவே பாண் டவெட்டையைச் சேர்ந்த இ.தயந்தன் என்னும் உதைபந்தாட்ட வீரர் காணப் படுகின்றார். இவர் தமது கிராமத்தில் உள்ள விளையாட்டில் ஆர்வமுள்ள வீரர் களின் நிலைமை பற்றிய

கருத்துக்களை தினகரனுக்கான நேர் காணலின் ஊடாக வெளிப்படுத்தினார்.

"சிறுவயதில் இருந்தே எனக்கு விளையாட்டுத் துறையில் ஆர்வம் அதிகம். பாடசாலையில் நடைபெறும்

அனைத்து கால்பந்து போட்டிகளிலும் கலந்து கொள்வேன். தேசிய அளவில் போட்டிகளுக்குச் சென்று வெற்றி பெற்றுள்ளோம். என்னைப் போன்று பல்வேறுபட்ட விளையாட்டுகளிலும் ஆர்வமுள்ள இளைஞர்,யுவதிகள் இருக் கின்றனர். ஆனால் அனைவருக்கும் அவர்களுடைய வாய்ப்புக்களை வெளிக் காட்டுவதற்கான வசதிகளும் வாய்ப்புக ளும் கிடைக்கவில்லை. அதற்கு முக்கிய காரணங்களாக விளையாட்டில் கலந்து கொள்வதற்குத் தேவையான உபகர ணங்கள் மற்றும் பயிற்சிகள் பெறுவ தற்கான வசதியின்மை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பாடசாலையில் கொடுக்கப்படும் பயிற்சிகளில் கலந்து கொண்டு மீண்டும் வீடு செல்வதற்கு அதிக தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலைமையே உள்ளது. இதனால் மாணவர்கள் களைப்படைந்து படிப்பதில் ஆர்வம் குறைந்து விடுகிறார்கள்" என்று கூறு கின்றார் தயந்தன்.

"இதனை கருத்தில் கொண்டு விடுமுறை நாட்களில் கிராமத்தில் உள்ள மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட எண் ணினோம். ஆனால் எமது கிராமத்தின் மைதானம் முட்செடிகளும், புற்களும் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. கிரா மத்தின் மைதானத்தை ஒழுங்குபடுத் தும் முயற்சிக்கு எமக்கு யாரும் உதவவில்லை. மேலும் எமக்கு பயிற்சிகளை முறையாக வழங் குவதற்கு பயிற்றுவிப்பாளர் ஒருவர் இல்லாமை பெரும் கவ லையாக உள்ளது.

இவ்வாறான நிலையை மாற்ற வேண்டுமென நினைத்து தற்போது நான் மாலை நேரங் களில் எமது கிராமத்து சிறுவர் களுக்கு பயிற்சிகளை இலவ சமாக வழங்கி வருகின்றேன். எமது கிராமத்தின் மைதா னத்தை இளைஞர்களின் உத வியுடன் ஒழுங்குபடுத்தி ஓரிரு விளையாட்டு உபகரணங்களை வைத்து பயிற்சிகளை மேற் கொள்கின்றோம். நகர்புற இளைஞர்க ளைப் போன்று எமது கிராமம் போன்ற பின்தங்கிய கிராமப் பிள்ளைகளின் திறமைகளையும் ஊக்கப்படுத்தி எமக் கான விளையாட்டு மைதானம், விளையாட்டு

உபகரணங்களை வழங்குதல் மற்றும் எமது வீரர்களுக்கான பயிற்சி விப்பாளர்களை நியமித்தல்

போன்றவற்றை உரிய அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எமது விளையாட்டு திறமையை பார்த்து பெற்றோர்கள் மகிழ்ச்சியடைந் தாலும், எமக்கான அங்கீகாரம் கிடைக் காததால் விளையாட்டின் மீதான எமது ஆர்வத்தை ஏற்றுக் கொள்ள பலரும் மறுக்கிறார்கள். கல்வி பயில் வதில் மாத்திரமே வாழ்க்கையில் உயர முடியும், விளையாட்டுக்களால் எவ்வித பயனும் இல்லை என்ற மனநிலை உருவாகியுள்ளது" எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் விளையாட்டுத் துறையில் சாதிக்கத் துடிக்கும் வீரர்களை ஊக் குவிப்பது எமது கடமையாகும். இவ்வீரர்கள் தனிப்பட்ட ரீதியில் மட் டுமல்லாமல், நாட்டின் பெருமைக்கும், வளர்ச்சிக்கும் பங்காற்றக் கூடியவர் கள். எனவே விளையாட்டுத்துறையில் சாதிப்பதற்கான வளங்களை பாண்ட வெட்டை கிராம வீரர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நடவ டிக்கைகளை உரிய அதிகாரிகள் செயற் படுத்த வேண்டும் என்பதே இக்கிரா மத்து மக்களின் கோரிக்கையாகும்.

செ. எழிலன்...✍
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
(ஊடகத்துறை கற்கைகள்
நான்காம் வருடம்)

அ.இ.மு.லீக் பாராட்டு வைபவமும், நாட்காட்டி,நாற்குறிப்பேடு வெளியீடும்

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய சீருடை, நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டி வெளியீடும், புதிய நிருவாகச பைத் தெரிவுடன் பாராட்டும் நிகழ்வும் அண்மை யில் மாவட்ட சம்மேளனத்தின் அக்கரைப்பற்று மாவட்டக் காரியலாயத்தில் நடைபெற்றன.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன் னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் தலைவரும்,ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்த ருமான எம்.எம்.அஜ்வத் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவரும், தற்போதைய நிறைவேற் றுப் பணிப்பாளருமான எம்.ஐ.உதுமாலெப்பை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன் போது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய தலைவர் எம்.ஐ.எம்.றியாஸ்,செயலாளர் எம்.ஐ.எம்.சிறாஜுதீன்,பொருளாளர் கே.எல். சுபையிர் உட்பட 26 பேர் பதவி வழி உத்தி யோகத்தர்கள் இதன்போது அறிவிக்கப்பட்டு சபையில் அனுமதி பெறப்பட்டதுடன் போசகராக தொடர்ந்தும் நீதிபதி அல்ஹாமிழ் என்.எம்.அப் துல்லா செயற்பட்டுள்ளார்.

இதன் போது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம் மேளனத்தின் பெண்கள் பிரிவிற்கான மாவட்ட ஆலோசகரும், ஓய்வு பெற்ற ஆசிரியையுமான மர்ஹூம் றசீனா உம்மா உதுமாலெப்பைக்கு 'ஜன னத்துல் பிர்தௌஸ்' எனும் சுவனம் வேண்டி விசேட துஆ பிரர்த் தனையை கிழக்கு இலங்கை அரபுக் கல்லூ ரியின் பொதுச் செயலா ளரும், சம்மேளனத்தின் கலாசாரப் பணிப்பாளருமா மௌலவி யூ.எம். நியாஸ் நிகழ்த்தினார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன் னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் குடும்ப உறுப்பினர்களில் இருந்து 2020ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய் யப்பட்ட மாணவர்கள் மற்றும் பாடசாலை மட் டத்தில் திறமை காட்டிய மாணவர்கள் மாவட்ட ஆலோசகர்களால் இதன் போது பதக்கங்கள் அணிவித்தும் சினைவுச்சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.இஸ்மாயில், அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் செயலாளர் எம்.ஐ.எம். சிறாஜுதீன், பொருளாளர் ஏ.மாபீர், சுகாதாரப் பணிப்பாளர் எஸ். தஸ்தக்கீர், மாவட்ட ஆலோச கர்களான ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப் பாளர் யூ.எல்.எம்.ஹாசீம், ஓய்வு பெற்ற அதிபர் களான ஐ.எல்.ஏ.மஜீத், ஏ.ஆர்.சித்தீக், டொக்டர் ஏ.எம்.அஹமட்லெப்பை, ஏ.எல்.எம். றஹீம், ஊடகப் பணிப்பாளர் ஐ.அஹமட் ஸிறாஜ் மற்றும் ஆலோசகர்கள், சம்மேளனத்தின் பதவி வழி உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் சம்மேள னத்தின் புதிய சீருடை 2022ம் ஆண்டுக்கான நா ற்குறிப்பேடு மற்றும் நாட்காட்டியும் அதிதிக ளினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிட்டத் தக்கது.

முகம்மட் றியாஸ் ...✍
(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ பிரிவின் கீழ் வழங்கப்பட்ட நல்லொழுக்க அதிகாரங்களால், அந்தச் சட்டத்தின் 70ஆ பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையை பரிசீலித்து, கீழ்கண்டவாறு அங்கீகரிக்கப்பட்டதாக அமைச்சர் இதன் மூலம் அறிவிக்கின்றார். பின்வரும் கல்வி நிறுவனங்களை பட்டம் வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரித்து கூறப்பட்ட கற்கை நெறிக்கு எதிரில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

www.mohe.gov.lk என்ற வலைத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் 2021-12-17ஆம் திகதி வரை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்புகளின் விவரங்களைக் கொண்ட அனைத்தும் மேலதிக சாதாரண வர்த்தமானி அறிவிப்புகளையும் நீங்கள் பதிவிறக்கம் செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்: ☞ அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு கல்வி அமைச்சு, தொலைபேசி இல. 11-2879720/011-2879727
இணையதளம்: www.mohe.gov.lk

செயலாளர் / விசேடத்துவ அதிகாரம், கல்வி அமைச்சின் உயர்கல்வி பிரிவு,
இல. 18, வார்ட் பிளேஸ், கொழும்பு 7.

இன்ஸ்டிடியூட் ஒப் சேவரிங் என்ட் மெப்பிங்

01.	விஞ்ஞானமாணி (அளவை விஞ்ஞானங்கள்) பட்டம்	(24-07-1990)

ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் (SLIIT)

01.	தகவல் தொழில்நுட்பவியலில் அறிவியல் இளவல் பட்டம் (சிறப்புப் பட்டம்)	(13.10.2000)
02.	தகவல் தொழில்நுட்பவியலில் அறிவியல் முதுமாணிப்பட்டம்	(30.03.2004)
03.	தகவல் முறைமைகளில் அறிவியல் முதுமாணிப்பட்டம்	(30.03.2004)
04.	தகவல் முகாமைத்துவத்தில் அறிவியல் முதுமாணிப்பட்டம்	(30.03.2004)
05.	தகவல் தொழில்நுட்பவியலில் பட்டப்பின் டிப்ளோமா	(30.03.2004)
06.	தகவல் முறைமைகளில் பட்டப்பின் டிப்ளோமா	(30.03.2004)
07.	தகவல் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா	(30.03.2004)
08.	வணிக நிர்வாகத்தில் இளவல் பட்டம் (விசேட) (சிறப்புப் பட்டம்)	(23.06.2011)
09.	மின் மற்றும் இலத்திரனியல் பொறியியலில் பொறியியல்சார் அறிவியல் இளவல் பட்டம்	(04.07.2012)
10.	இயந்திரப் பொறியியலில் பொறியியல்சார் அறிவியல் இளவல் பட்டம்	(04.07.2012)
11.	குடிசார்ப் பொறியியலில் பொறியியல்சார் அறிவியல் இளவல் பட்டம்	(04.07.2012)
12.	பொருள்சார்ப் பொறியியலில் பொறியியல்சார் அறிவியல் இளவல் பட்டம்	(04.07.2012)
13.	தகவல் தொழில்நுட்பத்தில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
14.	மென்பொருள் பொறியியலில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
15.	கணினி வலையமைப்புகளில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
16.	சைபர் பாதுகாப்பில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
17.	சிவில் பொறியியலில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
18.	மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொறியியலில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
19.	பொறிமுறை பொறியியலில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
20.	பொருட்கள் பொறியியலில் தத்துவவியல் முதுமாணி	(25.02.2016)
21.	தகவல் தொழில்நுட்பத்தில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
22.	மென்பொருள் பொறியியலில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
23.	கணினி வலையமைப்புகளில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
24.	சைபர் பாதுகாப்பில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
25.	சிவில் பொறியியலில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
26.	மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொறியியலில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
27.	பொறிமுறை பொறியியலில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
28.	பொருட்கள் பொறியியலில் தத்துவவியல் கலாநிதி	(25.02.2016)
29.	வியாபார நிர்வாகத்தில் முதுமாணி	(24.01.2018)
30.	பௌதிக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி	(24.01.2018)
31.	உயிரியல் விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி	(19.04.2018)
32.	ஆங்கிலத்தில் கௌரவக் கல்வி இளமாணி	(19.04.2018)
33.	உயிர் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(23.04.2019)
34.	நிதியியல் கணிதக் கற்கை மற்றும் பியோகப் புள்ளி விபரவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(27.02.2021)
35.	கல்வியியில் பட்டப்பின் டிப்ளோமா	(27.02.2021)

ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் டிவெலொப்மெண்ட் அட்மினிஸ்ட்ரேஷன்

01.	பொது நிருவாகத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா	(24.04.2003)
02.	பொது நிதி முகாமையில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா	(24.04.2003)
03.	பொது முகாமைத்துவத்தில் முதுமாணிப்பட்டம்	(24.04.2003)

நெஷனல் இன்ஸ்டிடியூட் ஒப் சோஸியல் டிவெலொப்மெண்ட்

01.	சமூகப் பணிகள் இளமாணிப்பட்டம்	(01.06.2005)
02.	சமூகப் பணிகள் முதுமாணிப்பட்டம்	(07.07.2008)

அக்குவைனஸ் கொலேஜ் ஒவ் ஹயர் ஸ்டடிஸ்

01.	கலை இளமாணி	(06.10.2005)
02.	சமய கற்கைகளில் கலை இளமாணி	(06.10.2005)
03.	தகவல் தொழில்நுட்ப இளமாணி	(06.10.2005)
04.	உளவியல் மற்றும் உளநலத்துறையில் விஞ்ஞான இளமாணி	(06.10.2005)
05.	விவசாய கைத்தொழில் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(07.02.2017)
06.	ஆங்கிலத்தில் கௌரவக் கல்வி இளமாணி	(26.03.2019)

ஸ்ரீ லங்கா இன்டர்நெஷனல் புடிஸ்ட் அகடமி (SIBA)

01.	பௌத்த தலைமைத்துவத்திலான கலைமாணி விசேட பட்டம்	(22.02.2013)
02.	கலை இளமாணி	(06.01.2016)
03.	பாளியில் கலை இளமாணி	(06.01.2016)
04.	தகவல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞான இளமாணி	(06.01.2016)
05.	தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொலைதொடர்பில் தொழில்நுட்பவியல் இளமாணி	(09.08.2016)
06.	வியாபார முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி	(13.01.2021)
07.	கண்டிய நடனத்தில் கௌரவ அரங்கேற்றல் கலை இளமாணி	(13.01.2021)

நெஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்நஸ் மெமேஜ்மன்ட் லிமிட்டெட் (NSBM)

01.	வியாபார முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (மனிதவள முகாமை) (விசேடம்)	(05.03.2013)
02.	வியாபார முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (வழங்கல் சேவைகள் முகாமை) (விசேடம்)	(05.03.2013)
03.	வியாபார முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (கைத்தொழில் முகாமை) (விசேடம்)	(05.03.2013)
04.	வியாபார முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (கருத்திட்ட முகாமை) (விசேடம்)	(05.03.2013)
05.	தகவல் முறைமைகள் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (விசேடம்)	(05.03.2013)
06.	வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா	(05.03.2013)
07.	மனிதவள முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா	(05.03.2013)
08.	கைத்தொழில் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா	(05.03.2013)
09.	கருத்திட்ட முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா	(05.03.2013)
10.	கணனி வலையமைப்புக்களில் பட்டப்பின் டிப்ளோமா	(05.03.2013)
11.	கணனி மென்பொருள் பொறியியலில் பட்டப்பின் டிப்ளோமா	(05.03.2013)
12.	வியாபாரத் தொடர்பாடலில் இளமாணி	(19.01.2016)
13.	பல்லூடகத்தில் விஞ்ஞானமாணி	(19.01.2016)
14.	வியாபார நிர்வாகத்தில் முதுமாணி	(14.07.2016)
15.	வியாபாரக் கற்கைகளில் முதுமாணி	(14.07.2016)
16.	மென்பொருள் பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(14.07.2016)
17.	கணக்கியல் மற்றும் நிதியில் கௌரவ முகாமைத்துவ இளமாணி	(14.07.2016)
18.	கணனி முறைமைப் பொறியியலில் கௌரவ விஞ்ஞானமாணி	(11.01.2018)
19.	உட்புற வடிவமைப்பில் இளமாணி	(19.04.2018)
20.	கணனி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(19.04.2018)
21.	கணனி வலையமைப்பில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(19.04.2018)
22.	சர்வதேச வர்த்தகத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
23.	கணினி முறைமை பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி	(30.12.2019)
24.	மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி	(30.12.2019)
25.	எந்திர மின்னனுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி	(30.12.2019)
26.	சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகளில் வியாபார முகாமைத்துவ இளமாணி	(27.02.2020)
27.	வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி	(01.01.2021)
28.	உயிரிமருத்துவ விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(22.04.2021)
29.	பொதுச் சுகாதாரத்தில் மற்றும் போஷணையில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(22.04.2020)

த இன்ஸ்ட்டியூட் ஒப் சாட்டட் அக்கொன்டன்ஸ் ஒப் ஸ்ரீ லங்கா

01.	பிரயோக கணக்கியலில் விஞ்ஞானமாணி (பொது) பட்டம்	(12.03.2013)
02.	பிரயோக கணக்கியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம்	(12.03.2013)

ஹொரைசன் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோலொஜி (பிரைவேட்) லிமிட்டெட்

01.	தொழில் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (மனிதவள முகாமைத்துவம்)	(26.11.2014)
02.	சந்தைப்படுத்தலில் முகாமை இளமாணி திறமை	(07.12.2015)
03.	வியாபார நிர்வாக முதுமாணி	(07.12.2015)
04.	கல்வி இளமாணி	(14.07.2016)
05.	தகவல் தொழில்நுட்பவியல் விஞ்ஞான இளமாணி	(14.07.2016)
06.	தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(14.07.2016)
07.	உணவுப் பாதுகாப்பு, விலங்கு மற்றும் தாவர சுகாதாரத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	(20.01.2017)
08.	வலையமைப்பு மற்றும் செல்லிடக் கணினி தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ இளமாணி	(20.01.2017)
09.	பௌதிக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி	(11.01.2018)
10.	உயிரியல் விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி	(11.01.2018)
11.	ஆங்கிலத்தில் கௌரவ கல்வி இளமாணி	(11.01.2018)
12.	உயிர் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(01.01.2021)

நாகானந்தா இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் ஃபோர் புடிஸ்ட் ஸ்டடீஸ்

01.	பௌத்த கற்கைகளில் கலை இளமாணி	(07.12.2015)
02.	பௌத்த கற்கைகளில் கலை இளமாணி (விசேடம்)	(07.12.2015)
03.	பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா	(07.12.2015)
04.	பௌத்த கற்கைகளில் கலை முதுமாணி	(07.12.2015)
05.	பௌத்த கற்கைகளில் தத்துவவியல் முதுமாணி	(07.12.2015)
06.	பௌத்த கற்கைகளில் தத்துவவியல் கலாநிதி	(06.01.2020)

சினெக்கெம்பஸ் (பிரைவட்) லிமிட்டெட் (CINEC)

01.	கடலோர விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)	(09.07.2013)
02.	கடல்சார் பொறியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு)	(09.07.2013)
03.	தேவைகள் விநியோகங்கள் மற்றும் போக்குவரத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)	(09.07.2013)
04.	ஆங்கிலத்தில் கலை இளமாணி	(09.08.2016)
05.	சில்லறைச் சந்தைப்படுத்தல் மற்றும் பண்டக்குறியிடுதலில் கௌரவ முகாமைத்துவ இளமாணி	(28.11.2017)
06.	விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி	(28.11.2017)
07.	சுற்றுலாப் பயணத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமையில் கௌரவ முகாமைத்துவ இளமாணி	(11.01.2018)
08.	ஆங்கிலத்தில் கௌரவ கல்வி இளமாணி	(11.01.2018)
09.	பௌதீக விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி	(11.01.2018)
10.	பொறிமுறைப் பொறியியலில் கௌரவப் பொறியியல் விஞ்ஞான இளமாணி	(19.04.2018)
11.	தானியங்கிப் பொறியியலில் கௌரவப் பொறியியல் விஞ்ஞான இளமாணி	(19.04.2018)
12.	இலத்திரனியல், தொலைத்தொடர்புப் பொறியியலில் கௌரவப் பொறியியல் விஞ்ஞான இளமாணி	(19.04.2018)
13.	குடிசார் பொறியியலில் கௌரவப் பொறியியல் விஞ்ஞான இளமாணி	(19.04.2018)
14.	உயிரியல் விஞ்ஞானத்தில் கௌரவக் கல்வி இளமாணி	(19.04.2018)
15.	தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவக் கல்வி இளமாணி	(19.04.2018)
16.	கைத்தொழில் மருந்தாக்க விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(02.05.2019)
17.	ஒப்பனை விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(02.05.2019)
18.	உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(02.05.2019)
19.	வணிக நிருவாகத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
20.	மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
21.	கைத்தொழில் முகாமைத்துவத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
22.	ஆங்கிலத்தில் சிறப்பு கலை இளமாணி	(02.05.2019)
23.	மென்பொருள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(06.01.2020)
24.	வணிக மற்றும் தொழில்துறை கணிதத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(06.01.2020)
25.	வங்கித் தொழில் மற்றும் நிதியியலில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி	(06.01.2020)
26.	கற்கைநெறி மூலம் வியாபார நிருவாக முதுமாணி	(28.12.2020)
27.	வியாபார நிருவாக முதுமாணி	(28.12.2020)
28.	எந்திர மின்னனுவியல் பொறியியலில் கௌரவ விஞ்ஞான பொறியியல் இளமாணி	(08.02.2021)

சனச கம்பஸ் லிமிட்டெட்

01.	வங்கித் தொழில் மற்றும் நிதியியல் விஞ்ஞானமாணி (விசேட) பட்டம்	(21.01.2014)
02.	காப்புறுதி மற்றும் அபாய முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி (விசேட) பட்டம்	(21.01.2014)
03.	பிராந்திய விஞ்ஞானம் மற்றும் திட்டமிடலில் விஞ்ஞானமாணி (விசேட) பட்டம்	(21.01.2014)

KAATSU - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னொலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவேட்) லிமிட்டெட்

01.	KAATSU இல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (மருத்துவ விஞ்ஞானம்)	(07.01.2015)
02.	அக்குப்பஞ்சரில் மருத்துவ விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	(07.01.2015)
03.	தாதிச் சேவையில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	(07.01.2015)
04.	உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்	(08.04.2016)
05.	உளவியலில் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்	(08.04.2016)
06.	மனிதவளத்தில் முகாமைத்துவமாணி சிறப்புப்பட்டம்	(08.04.2016)
07.	சந்தைப்படுத்தலில் முகாமைத்துவமாணி சிறப்புப்பட்டம்	(08.04.2016)
08.	கணக்கியலில் முகாமைத்துவமாணி சிறப்புப்பட்டம்	(08.04.2016)
09.	பௌதிக விஞ்ஞானத்தில் கல்வி இளமாணி சிறப்புப் பட்டம்	(01.10.2018)
10.	தாதிக் கல்வி முதுமாணி	(09.01.2019)
11.	தாதி முகாமைத்துவ முதுமாணி	(09.01.2019)
12.	தாதி விஞ்ஞான முதுமாணி	(09.01.2019)
13.	முகாமைத்துவ மூலோபாயத்தில் வியாபார நிருவாக முதுமாணி	(27.02.2020)
14.	தாதியியலில் தத்துவவியல் முதுமாணி	(07.10.2020)

எஸ் எல் ரி கெம்பஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

01.	இலத்திரனியல் மற்றும் வலுமுறைமைகளிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(02.12.2016)
02.	இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகளிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(02.12.2016)
03.	இலத்திரனியல் மற்றும் பொறியியல் முகாமையிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(02.12.2016)
04.	இலத்திரனியல் தொழில்நுட்பவியல் சிறப்பு இளமாணி	(10.08.2018)
05.	தகவல் மற்றும் தொடர்பாடல் எந்திரவியலில் எந்திரவியல் விஞ்ஞான சிறப்பு இளமாணி	(09.01.2019)
06.	சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
07.	விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
08.	தொழிற்பாடுகள் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
09.	கணக்கியல் மற்றும் நிதியியலில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
10.	மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி	(02.05.2019)
11.	போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி	(06.01.2020)
12.	போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(06.01.2020)
13.	ஈ-சுற்றுலா மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி	(06.01.2020)
14.	எந்திர மின்னனுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி	(06.01.2020)
15.	விவசாய தொழில்நுட்பவியலில் சிறப்பு தொழில்நுட்பவியல் இளமாணி	(06.01.2020)
16.	சுற்றுச்சூழல் தொழில்நுட்பவியலில் தொழில்நுட்பவியல் இளமாணி சிறப்பு	(27.02.2020)
17.	உயிர் முறைமை பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு	(27.02.2020)
18.	தரவு விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(13.01.2021)
19.	கிலவுட் கொம்பியூடிங் கௌரவ விஞ்ஞான இளமாணி	(13.01.2021)
20.	மென்பொருள் பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(13.01.2021)
21.	சிவில் பொறியியலில் கௌரவ பொறியியல் விஞ்ஞான இளமாணி	(13.01.2021)
22.	இசையில் கௌரவ இளமாணி	(13.01.2021)
23.	சைபர் சிக்குரிட்டியில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(13.01.2021)
24.	இலத்திரனியல் மற்றும் வலு முறைகளிலான பொறியியல் கௌரவ விஞ்ஞான இளமாணி	(10.08.2021)
25.	இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புகளிலான பொறியியல் கௌரவ விஞ்ஞான இளமாணி	(10.08.2021)

ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் நனோடெக்னோலொஜி (பிரைவேட்) லிமிட்டெட் (SLINTEC)

01.	நனோ மற்றும் உயர் தொழில்நுட்பவியலில் முதுத்துவமாணி	(16.08.2017)
02.	நனோ அறிவியல் மற்றும் நனோ தொழில்நுட்பவியலில் தத்துவவியற் கலாநிதி	(10.05.2019)

சேஜஸ் கம்பஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

01.	தகவல் தொழில்நுட்பவியல் இளமாணி	(11.07.2018)
02.	வியாபார நிர்வாக இளமாணி	(20.09.2019)
03.	மனிதவள முகாமைத்துவத்தில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி	(22.01.2021)
04.	வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம்	(22.01.2021)
05.	கணக்கியல் மற்றும் நிதியியலில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி	(22.01.2021)
06.	சந்தைப்படுத்தலில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி	(22.01.2021)

ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

01.	தகவல் தொழில்நுட்பவியல் இளமாணி சிறப்பு	(03.09.2019)
02.	வியாபார முகாமைத்துவ இளமாணி (கௌரவம்)	(20.05.2021)

இன்டர்நெஷனல் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னோலொஜி லிமிட்டெட்

01.	வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி	(25.09.2020)

இலங்கை இரசாயனவியல் நிறுவகம்

01.	இரசாயன விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(11.03.2020)

பெனடிக்ட் XVI கத்தலிக் இன்ஸ்டிடியூட் ஒப் ஹயர் எடுயூகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

01.	வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி	(09.11.2020)
02.	தகவல் தொழில்நுட்பவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி	(23.03.2021)

றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிரைவேட்) லிமிட்டெட்

01.	சர்வதேச பொருளியல் மற்றும் நிதியியல் வியாபார கௌரவ இளமாணி	(01.01.2021)

பிஸ்னஸ் மெனேஜ்மெண்ட் ஸ்கூல் (பிரைவேட்) லிமிட்டெட்

01.	வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி (கௌரவ)	(01.01.2021)

இன்டர்நெஷனல் இன்ஸ்டிடியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

01.	வியாபார நிருவாக மாணி (சிறப்பு)	(11.06.2021)

எழிலன் உள்ளிட்ட...

(03 ஆம் பக்கத் தொடர்)

ஆஜராகியிருந்தனர். அத்துடன் சட்ட மாஅதிபர் திணைக்களத்தை சேர்ந்த சிரேஸ்ட அரசசட்டத்தரணி யொகான் அபேவிக்கிரம ஆஜராகி யிருந்தார். வழக்கை தாக்கல்செய்த மனுதாரர்களான முன்னாள் மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் ஏனைய காணாமல் போனவர்களின் குடும்பத்தினரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

மலேரியா நோயாளி...

(03 ஆம் பக்கத் தொடர்)

தடுப்பு வைத்திய அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து அவருக்கு மலேரியா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

மலேரியா அற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ள போதிலும், வெளிநாடுகளிலிருந்து வருபவர்களினால் மலேரியா பரவல் அச்சம் ஏற்பட்டுள்ளதென்றும், மலேரியா எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியா முன்னெச்சரிக்கை மருத்துவ வழிகாட்டுதல்களை தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லுமாறும் யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் உதவி...

(03 ஆம் பக்கத் தொடர்)

வருகை மீண்டும் அதிகரிக்கும் என தான் எதிர்பார்ப்பதாக விக்னராஜா நம்பிக்கை வெளியிட்டார்.

கொவிட்19 தொற்று நிலைமைக்கு பின்னரான பொருளாதார நிலை குறித்து கலந்துரையாடிய விக்னராஜா, இலங்கைக்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு பல வழிகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையுடன் மிக நெருக்கமாக பணியாற்றியுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அது எதிர்காலத்திலும் தொடருமென தெரிவித்தார்.

குறிப்பாக தனியார் துறையில் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குதன் அவசியம் மற்றும் தனியார் துறை வேலை வாய்ப்பிற்கு இளைஞர் யுவதிகளை ஊக்குவிப்பதன் அவசியம் என்பன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

விக்னராஜா, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) உதவி நிர்வாகியாகவும் அதன் ஆசிய பசுபிக் பிராந்திய பணியகத்தின் பிராந்திய பணிப்பாளராகவும் விளங்குகிறார். அதற்கமைய காலநிலை மாற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகிய துறைகளில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே இலங்கைக்கு உதவி வருவதாக அவர் பிரதமரிடம் தெரிவித்தார்.

இலங்கையில் UNDPஆதரவு பெற்ற முக்கிய திட்டங்களில் ஒன்று தற்போது ஏழு ஆண்டுகளாக செயல்பாட்டில் உள்ள காலநிலைக்கு ஒத்த ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ திட்டம் (CRIWMP). 'இலங்கையின் வறண்ட வலயத்தில் விவசாயிகளின் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திறனை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டமாகும்.

இலங்கையின் நிலையான அபிவிருத்தி சபையின் (SDC) ஒத்துழைப்புடன் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGS) அடைவதற்காக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் UNDPஇலங்கையின் வதிவிடப் பிரதிநிதி றொபர்ட் ஜுகாம் அவர்கள் இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கமளித்தார்.

மண்ணெண்ணெய்...

காரணமாகவும் பொதுமக்கள் மாற்று நடவடிக்கையாக சந்தையில் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்பை நாடி வருகின்றனர். இதனால் அவற்றின் விலைகள் அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

2,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணெய் அடுப்பு ஒன்றின் விலை தற்போது 8,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், புறக்கோட்டை மற்றும் புறநகர்பகுதிகளில் மண்ணெண்ணெய் அடுப்பு இல்லாமையால் நுகர்வோரும், வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வைத்தியர் ஷாபி சிஹாப்தீன்...

குருணாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றியதோடு, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு அவர்களின் அனுமதியின்றி கருத்தடை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் சட்டவிரோதமாக சொத்து சேர்த்த குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்ததோடு அவர் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் பல்வேறு மட்டங்களில் விசாரணை நடைபெற்றதுடன் பின்னர் அவர் குருணாகல் பிரதான நீதவானால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வைத்தியர் மொஹமட் ஷாபி சிஹாப்தீன், தாய்மாரின் கருமுட்டைக் குழாய்களை (Fallopian Tubes) அடைத்ததாகவோ, சட்டவிரோதமான முறையில் சொத்துக் குவித்ததாகவோ, அல்லது அவர்களுடன் தொடர்புகளைப் பேணியதாகவோ இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் நிரூபிக்கப்படவில்லையென குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) 2019 ஜூலை மாதம் குருணாகல் நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது.டொக்டர் ஷாபி சியாப்தீன் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி முதல் கட்டாய விடுமுறையில் அனுப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பகிரங்க விவாதத்திற்கு...

10ஆம் திகதி நடத்தப்பட்ட விவாதத்தின் போது சாணக்கியன் எம்.பி வெளியிட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பகிரங்க விவாதத்திற்கான அழைப்பை விடுப்பதாக நசீர் அஹமட் எம்.பி அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள், பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையானுடன் சேர்ந்து காணிப் பிரச்சினை தொடர்பில் நாடகம் ஆடுகின்றனரென சாணக்கியன் எம்.பி தெரிவித்த கருத்து தொடர்பில் பகிரங்கமாக விவாதிக்க வேண்டுமென தாம் விரும்புவதாக நசீர் அஹமட் கூறியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில், மாவட்ட முஸ்லிம்களுக்கு காணி தொடர்பில் இழைக்கப்பட்ட அநீதிகளை நாட்டு மக்களுக்கு வெளிக்கொணர வேண்டிய தேவை தமக்குள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இதுகுறித்து நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நசீர் அஹமட்டைக் கண்டால் கூட்டி வாருங்கள், அவரை விவாதத்திற்கு அழைத்து வாருங்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பகிரங்க வெளியில் விவாதத்திற்கு அழைப்பு விடுத்ததன் பின்னர், நசீர் அஹமட் ஊடகவியலாளர்களின் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்க மறுப்பது ஏன் எனவும் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

எந்தவொரு ஊடகமாக இருந்தாலும், அந்த ஊடகம் ஏற்பாடு செய்யும் பகிரங்க விவாதத்தில் பங்கேற்பதற்கு தான் தயாராகவே இருப்பதாகவும் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடைத்தாள் திருத்துனர்களை...

(03 ஆம் பக்கத் தொடர்)

https://onlineexams.gov.lk/eic என்ற முறை மூலமோ விண்ணப்பிக்க முடியுமென்றும் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

இம் முறைமையினுள் பிரவேசிப்பதற்கு தேசிய அடையாள இட்டையின் இலக்கத்தைப் பயன்படுத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்திய பின்பு பாடசாலை அதிபர் அல்லது நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். அதிபர் அல்லது நிறுவனத் தலைவர் சான்றுபடுத்த வேண்டிய பகுதிகள் பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் பாதுகாப்பாக அலுவலகத்தில் வைக்கப்படுவதோடு அதிபர் உறுதிப்படுத்துவது ஒன்லைன் மூலம் நடைபெற வேண்டும்.

திணைக்களத்தினால் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி School Account Login மூலம் உள்நுழைந்து Marking examiners என்பதைத் தெரிவு செய்ய வேண்டும்.அத்துடன் அதிபர் உறுதிப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. புதிய விண்ணப்பதாரிகளினதும் பாடசாலை ஆசிரியர்கள் அல்லாத சகல விண்ணப்பதாரிகள் மாத்திரம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி பிரதியை உரிய இணைப்போடு நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன், 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல.' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'விடைத்தாள் திருத்துநர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள்' தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை2021 எனக் குறிப்பிடல் வேண்டுமெனவும் இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0112785231, அல்லது 0112785681, அல்லது 0112785633, 0112785662, 0112785216, 0112785663, 0112785644 என்ற பாடசாலைப் பரீட்சைகள் மதிப்பீட்டுக்கிளை தொலைபேசி இலக்கங்கள் மூலமாகத் தொடர்புகொள்ள முடியும்.

(ஷயனுதா இரங்கநாதன்)

நாட்டின் பொருளாதாரம் ...

(03 ஆம் பக்கத் தொடர்)

ரூபாவிலிருந்து 2021 மூன்றாம் காலாண்டுக்கான நிலையான விலையில் 24,97,489 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDP) 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 40,87,148 மில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 41,32,955 மில்லியன் ரூபாவாக 1.1 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது.

நாட்டில் மேலும் மூன்று...

ஜீவந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்கனவே நைஜீரியாவிலிருந்து நாடு திரும்பிய ஒருவருக்கு ஒமிக்ரொன் கொவிட் தொற்று உறுதியாகியிருந்தது. நாட்டில் ஒமிக்ரோன் கொவிட்19திரிபு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இத்துடன் 04 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஒமிக்ரோன் கொவிட் திரிபு தொற்றுடன் நாட்டில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படக்கூடுமெனவும் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நல்லூர் கந்தனை...

நேற்றுக் காலை 10 மணியளவில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஆலயத்திற்கு வருகை தந்திருந்த அவர், இந்து சமய முறைப்படி வேட்டி அணிந்துவந்தார்.

சீனத் தூதுவரின் வருகையை அடுத்து நல்லூர் ஆலயச் சூழலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக காணப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்...

மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒரு வருட காலத்திற்கு ஒத்திவைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான காரணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பகுதியில்...

பிரிவுக்குட்பட்ட கோரக்கன், கட்டுபூங்காவன சந்திப் பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குழி ஒன்றை வெட்டிய போது சில துப்பாக்கி ரவைகள் காணப்பட்டதையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இப் பகுதியிலிருந்து துப்பாக்கி ரவைகள் அடங்கிய இரு பெட்டிகளை மீட்டனர்.

இதுதொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டளைக்கமைவாக இப் பகுதி கிராம அலுவலர் கோணாமலை சேகர் முன்னிலையில் (15) முற்பகல் 09 மணி முதல் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது ரி56 ரக துப்பாக்கியின் 750 ரவைகள் உள்ளடங்கிய 84 பெட்டிகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக இப்பெட்டிகள் இல்லாமல் குழியிலிருந்து 46,000 ரி56 ரக ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தோட்டாக்கள் யுத்த காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டவையாக இருக்கலாமென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒமிக்ரோன் திரிபு குறித்து...

போது ஒமிக்ரோன் திரிபு முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முழுவதும் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒமிக்ரோன் திரிபு பல நாடுகளில் பரவி வருகிறது, ஆனால் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. பல நாடுகளில் ஒமிக்ரோன் திரிபின் பரவலைக் குறைத்து மதிப்பிடுவது தொடர்பில் தான் கவலையடைவதாக உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் திரிபின் பரவலை எதிர்கொள்ள அவர்கள் தயாராக இல்லையென்றால் நோயாளிகளின் எண்ணிக்கை எதிர்பாராத விதமாக உயர்வடைந்து, சுகாதாரத் துறை வீழ்ச்சியடையக்கூடும் என்று அவர் உலக நாடுகளை எச்சரித்துள்ளார்.

இதேவேளை, தற்போது 77 நாடுகளில் ஒமிக்ரோன் திரிபு பரவியுள்ளது. ஐரோப்பா இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனிலும் ஒமிக்ரோன் திரிபு வேகமாக பரவி வருகிறன்றதுடன், ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளான முதலாவது மரணம் அண்மையில் பிரிட்டனில் பதிவாகியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

மனோ தலைமையில் த.மு.கூ குழு அமெரிக்க தூதுவருடன்ரை சந்திப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி தலைமையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூதுக்குழு, நேற்று அமெரிக்க தூதரை சந்தித்து கலந்துரையாடியது.

இச்சந்திப்பின் போது, தற்போது நடைபெறும் தமிழ்முஸ்லிம் கட்சிகளின் கூட்டு செயற்பாடு, தேசிய அரங்கில் மலையக தமிழ் மக்களின் எழுச்சி, இலங்கை தேசிய இனப் பிரச்சினையில் அமெரிக்காவின் பங்கு, பொறுப்புகூறல், எதிர்வரும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு கூட்டங்கள் ஆகியவை பற்றி உரையாடப்பட்டன.

அடையாளம் காண...

(03 ஆம் பக்கத் தொடர்)

மூன்று பச்சை குறிகள் உள்ளதாகவும் இடது கையின் மேல் மணி வடிவிலும்,வலது கை தோளில் S வடிவ பச்சையும் காணப்படுகின்றன. சடலத்தின் முகம் முற்றிலும் சிதைந்து அழுகிய நிலையிலுள்ளதுடன் அவரது ஆண்குறி வெட்டி அகற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்படப்பட்டுள்ளது.

இந்த சடலம் தொடர்பாக ஏதேனும் தகவல் தெரிந்தால் பின்வரும் தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளறுமாறும் பொலிஸ் தலைமையகம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

ஹொரண பொலிஸ் நிலையம் – 0342261222 அல்லது, பொலிஸ் தலைமையகத்தின் மக்கள் தொடர்பு பிரிவு – 0112436161 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தகவல்களை தெரிவிக்கலாம்.

(போல்ராஜ் சந்திரமதி)

18 இலட்சத்தை கடந்த...

நாட்டில் நேற்று முன்தினம், 2,19,997 பேருக்கு கொவிட்19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், 1,209 பேருக்கு பைஸர் பூஸ்டர் தடுப்பூசியும், 2,000 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டன. அதேநேரம், 1,174 பேருக்கு சைனோபாம் முதலாம் தடுப்பூசியும், 2,881 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதி...

2008ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில், மேல் நீதிமன்றத்தால் இவர் குற்றவாளி இல்லையென தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலையாகியுள்ளார். இவருடைய விடுதலைக்காக இவரது தாயார் குரல்கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இரசாயன உரங்களால்...

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே மற்றும் அமைச்சின் அதிகாரிகளுடன் சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இச் செயலணிக்கு சுகாதாரத் துறை உட்பட பல துறைகளைச் சேர்ந்த சுயேச்சையான குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமெனவும், அதற்காக விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டுமெனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விவாதத்திற்கு தயார்;...

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகள் திட்டமிடப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டதாக ஹாபிஸ் நசீர் எம்பி அண்மையில் பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். அவரால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணை தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கருத்துத் தெரிவித்திருந்ததோடு இது தொடர்பில் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு ஹாபிஸ் நசீர் எம்.பி அழைத்திருந்தார்.

இதேவேளை, இருவருக்கும் இடையிலான விவாதத்தை நடத்த வசந்தம் தொலைக்காட்சி முன்வத்துள்ளது. ஹாபிஸ் நசீர் எம்.பிக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர் அதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் குறிப்பிட்டுள்ளதாவது,நான் விவாதத்திற்கு அழைத்திருந்த போது, அதற்கு சாணாக்கியன் எம்.பியும் சம்மதித்திருந்தார். எமது இவ் விவாதத்திற்கு உத்தேசிக்கப்பட்ட திகதியில் என்னால் சமுகமளிக்க முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தளத்தினூடான...

விளையாட்டுத் துறை அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் தலைமையில் நீதி அமைச்சில் நடைபெற்றது. ஒன்லைன் ஊடாக வர்த்தகம் மேற்கொள்ளும் எமது நாட்டு பிரதான வர்த்தக நிறுவன பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றதோடு அவர்கள் இணையத் தளத்தின் ஊடாக வர்த்தகம் மேற்கொள்வதன்அவசியத்தைஎடுத்துரைத்தனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளை ஆராய்ந்து புதிய சட்டம் அறிமுகம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளல் தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது. இதனுடன் நேரடியாக தொடர்புள்ள நிறுவனங்கள் மற்றும் பாவனையாளர்களின் கருத்துக்களை பெற்று உகந்த சட்ட கட்டமைப்பை தயாரிப்பதன் அவசியமும் இங்கு முன்வைக்கப்பட்டது. வர்த்தக சட்ட கட்டமைப்பை (e Commerce) ஆராய்ந்துள்ள குழு மற்றும் ஒன்லைன் ஊடாக வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்கள் இது தொடர்பில் மேலும் ஆராய்ந்து சட்ட கட்டமைப்பை பலப்படுத்த வேண்டுமென அமைச்சர்கள் ஆலோசனை வழங்கினர்.

நீதி அமைச்சின் செயலாளர் மாயாதுன்ன, அமைச்சின் மேலதிக செயலாளர் துசார சுரவீர உட்பட முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.(பா)

சொந்த நாட்டில் வீடற்ற நிலையில்...

தொடர் மாடிக் குடியிருப்பை திறந்துவைத்து (15) உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு 05 பொல்ஹேன்கொட காலிங்க மாவத்தையில் அமைந்துள்ள இந்த தொடர் மாடிக் குடியிருப்பு நிர்மாணத்தின் போது வீடுகளை இழந்த கொலம்பகே மாவத்தையை சேர்ந்த குடும்பங்களுக்காக இந்த குடியிருப்பு தொகுதியில் வீடுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு படுக்கையறைகள் உள்ள டங்களாக சகல வசதிகளையும் கொண்ட இந்த 528 வீடுகளை நிர்மாணிப்பதற்கான வரியில்லாச் செலவு சுமார் 1,900 மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பில் மாகா பொறியியலாளர் தனியார் நிறுவனம் இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்றிருந்தது.

வீட்டுத் திட்டத்தை பொது மக்களுக்கு கையளித்து பிரதமர் அதன் நினைவு பலகையை திறந்து வைத்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரர் உட்பட முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.இதன்போது பயனாளர்கள் ஐவருக்கு வீட்டின் திறப்புகள் பிரதமரினால் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

2014ஆம் ஆண்டிலேயே நாம் இந்த வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்தோம். இந்த வீட்டுத் தொகுதி ஒரு தனித்துவமான வீட்டுத் திட்டமாகும். மூன்று கோபுரங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வீடமைப்புத் தொகுதியின் ஒன்று கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்கப்படவுள்ளது. அதை விடுதியாக பயன்படுத்துவதற்கு இந்த வீடமைப்பு திட்டத்திற்காக காணிகளை வழங்கிய மக்களுக்கும் களனிவெலி புகையிரத பாதை விஸ்தரிப்பின் போது வெளியேற்றப்பட்ட மக்களுக்கும் இந்த வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கிடைக்கப்பெறும். அவர்கள் சட்டவிரோத குடியிருப்பில் வாழ்ந்தாலும் அவர்களுக்கு வீடு வழங்க விரும்பினோம். அதனால் அவர்களுக்கும் இங்கு இலவச வீடு கிடைக்கின்றது.அந்த குடும்பங்களின் பிள்ளைகள் வாழ்க்கையில் ஒரு புதிய நம்பிக்கையை பெற முடிகிறது. அவர்களுக்கு வீட்டு உரிமையும், சொந்த முகவரியும் கிடைத்திருக்கிறது.

வீடற்ற மக்களுக்கு அவர்களின் தாயகத்தின் உண்மையான உரிமைகளை வழங்குவதே எமது நோக்கமாகும். நாங்கள் அமுல்படுத்தும் வீட்டுத் திட்டங்களில் சிங்களவர், தமிழ், முஸ்லிம் என்ற இனப் பாகுபாடு கிடையாது. மேலும், கட்சி பாகுபாடும் இல்லை.

வீடற்றவர்கள் தன் சொந்த ஊரில் விடுதியில் குடியிருப்பவனைப் போன்றவர்கள் என்பதை நினைவில் வையுங்கள். இன்னும் சில வருடங்களில் அந்த சகாப்தம் முடிவுக்கு வர வேண்டும். ஒரு கொள்கையுடன் நாம் இந்த வீட்டுத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இது அரசியல் உள்நோக்கம் கொண்ட திட்டமல்ல.

கடந்த காலங்களில் வீடுகளை கட்டுவதை விட வீடுகளை கட்டுகிறோம் என்று கூறுவதற்கு பணத்தை செலவு செய்த அரசாங்கங்கள் இருந்தன. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வீட்டுத் திட்டங்களுக்கான விளம்பரச் செலவு கோடிக்கணக்கான ரூபாவாகும். அந்த பணத்தில் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வீடுகளை கட்டியிருக்கலாம்.

நாடு குறித்து எண்ணியே நாம் வீடுகளை கட்டுகிறோம். வீட்டுத்திட்டத்தை மக்கள் சார்பான திட்டமாக செயல்படுத்தி வருகிறோம்.மேலும் நாம் கொடுக்கும் வீட்டில் குடும்பமாக வாழ்வதற்கு ஏற்ற சூழல் அமைய வேண்டும். அந்த வீட்டில் சுதந்திரமாக வாழ வேண்டும்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய, ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதியான வீட்டை வழங்குவதை அரசாங்கம் நோக்கமாக கொண்டுள்ளது. இதன் கீழ் நகர்ப்புற, கிராமப்புற, தோட்ட மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்காக வீடுகள் நிர்மாணிக்கப்படும். நாடு முழுவதும் இந்த வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளோம்.

நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 2024 ஆம் ஆண்டுக்குள் 50,000 வீடுகளை கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, 14,083 வீட்டு மனைகள் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களிடம் கையளிக்கதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு பிரதேசத்தில் தற்போதுள்ள குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புகளை 2024 ஆம் ஆண்டளவில் நவீன அடுக்குமாடி குடியிருப்புகளாக மாற்றுவதற்கு திட்டங்களை வகுத்துள்ளோம்.

அரசியல் நோக்கத்திற்காக அன்றி, நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்தே நாம் இந்த வீட்டுத்திட்டத்தை செயல்படுத்துகிறோம் என பிரதமர் குறிப்பிட்டார்.

இயல் எப். எம்மின் முதலாம் ஆண்டு நிறைவு விழா

ஊவா மாகாண லுணுகல பிரதேச த்திற்குட்பட்ட ஹொப்டன் பகுதியிலிருந்து ஒலிக்கும் இயல் எப்.எம் இணைய வானொலி கடந்த வருடம் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.

சாதிக்கத்துடிக்கும் இளைஞர்களாகிய கஜேந்திரன், குகணேஸ்வரன், குணசேகரம் ஆகியோரின் கூட்டு முயற்சியினால் வானொலி உலகில் புதிதாய் தடம்பதித்து இசைத்தமிழால் இணையத்தில் ஓங்கி ஒலிக்கிறது.

திங்கள் முதல் வெள்ளிவரை வார நாட்களில் இளம்துடிப்பான இளம் அறிவிப்பாளர்களால் தொகுத்து வழங்கப்படும் நிகழ்ச்சிகளாக செவ்வானம், இயலின் விடியல், அழகிடைம் என்ன பாஸ், இடைவிடாத சரவெடி, எங்கேயும் எப்போதும், உல்லாசவேளை, காற்றின் மொழி ஆகியனவும் வார இறுதி நாட்களில் கோல்மால், சினிபோஸ், உன் சுவாசகாற்று, உன்னோடு ஒரு நிமிடம், காவிய இசை, சண்டே விடியல் போன்ற வித்தியாசமான நிகழ்ச்சிகள் வானொலி இரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

இயல் எப்.எம் இணைய வானொலியானது தனது முதலாவது ஆண்டு நிறைவை கடந்த 12 ஆம் திகதி வெற்றிகரமாக கொண்டாடியது. முதலாம் ஆண்டு வெற்றிக்கொண்டாட்டத்தில் தனது நேயர்களுக்காக தனது பிரத்தியேக விசேட கலையகத்திலிருந்து முகநூலில் நேரலையாக கொட்டகலை ஆர். சிவகுமாரின் ராகம்ஸ் நம்நாட்டு கலைஞர்களை கொண்டு மெகா இசை நிகழ்ச்சியை வழங்கி குதூகலப்படுத்தியது.

அத்தோடு லுணுகல பிரதேச பொது சுகாதார வைத்திய காரியாலயம், பசறை பொது சுகாதார வைத்திய காரியாலயம், ஹொப்டன் பிரதேச வைத்தியசாலை, மீதும்பிட்டிய பிரதேச வைத்தியசாலைகள் ஆகியவற்றின் சுகாதார ஊழியர்களுக்கு கொவிட் 19 தொற்று பாதுகாப்பு உடைகள் மற்றும் தொற்றுநீக்கி பதார்த்தங்களை வழங்கியதோடு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு திட்டத்தையும் மேற்கொண்டது. இவ்வாறான நிகழ்வுகளுக்கு அனுசரணை, வழங்கிய அனுசரணையாளர்கள், ஆதரவு நேயர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும், இயல் எப்.எம் நிறுவன தலைவர் வி. குணசேகரம், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு முகாமையாளர் பிரதீபன், திட்டமிடல் விரிவாக்கல முகாமையாளர் குகணேஸ்வரன், உதவி முகாமையாளர் தயா சசி, தொழிநுட்பவியல் முகாமையாளர் தயாரூபன். மற்றும் அறிவிப்பாளர்கள் கஜேந்திரன், கோகுலதாசன்,வினோதன், சுஜேந்திரன், கிஷாந்தினி, நுஷியா, ஜீவித்தா அனைவரும் தங்களின் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

கெப் வாகனம் பாதையை விட்டு விபத்து

12 மணித்தியாளங்களுக்கு மேல் மின் துண்டிப்பு

தம்புள்ள தினகரன் நிருபர்

கெப் வண்டியொன்று மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியதில் கலேவெல பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் (15) காலை 8 மணியளவில் கலேவெல பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வீதியை விட்டு விலகி கெப் வண்டி வீதியோர மின் கம்பமொன்றில் மோதியதில் இரண்டு மின் கம்பங்கள் உடைந்து சேதமடைந்ததுடன் மின் கம்பிகளும்

பொடிமெனிக்கே புகையிரதத்தில் மோதி இளம் குடும்பஸ்தர் பலி

ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி, தலவாக்கலை குறூப் நிருபர்கள்

பொடிமெனிக்கே புகையிரதத்தில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த பொடி மெனிக்கே புகையிரதத்தில் தலவாக்கலை, சென்.கிளயார் மற்றும் சென். அன்ட்ரூஸ் ஆகிய இடங்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் (15) பிற்பகல் இளைஞன் இவ்வாறு மோதுண்டு உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கொட்டகலை சென்.அன்ட்ரூஸ் தோட்டத்தைச் சேர்ந்த ஆர். மோகனசுந்தரம் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனது கையடக்கத் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தவாறு ரயில் பாதையில் பயணித்த போது விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த இளைஞரின் சடலம் கொட்டகலை புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் கொட்டகலை பிரதேச வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

தலவாக்கலை மற்றும் திம்புளை பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பஸ்சில் பயணிக்கையில் திடீர் மரணம்

பதுளை தினகரன் நிருபர்

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பஸ்சில் பயணிக்கையில் இருக்கையில் இருந்த நிலையில் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (15) ஹோமாகம பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளது.

கொழும்பு – பம்பலப்பிட்டிய வில் ரெஸ்டுரென்ட்டிலும், பின்னர் பாதுகாப்பு ஊழியராகவும் பணிபுரிந்த பதுளை, ஹாலிஎல – திக்வெல்ல தோட்டத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான இராமசாமி ராஜு (50 வயது) என்பவரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரணம் சம்பந்தமாக பி.சீ. ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளது. விடுமுறையில் வீட்டுக்கு வந்து மீளச் செல்வதற்காக சென்ற போதே இம்மரணம் இடம்பெற்றுள்ளது.

மரணமான நபர் பதுளையிலிருந்து பிற்பகல் கொழும்பு நோக்கி பஸ்சில் பயணித்துள்ளார்.

போகும்முன்னர் வீட்டார் வந்து எடுப்பதற்காக பொதி ஒன்றையும் கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்.

இம் மரணம் தொடர்பில் ஹோமாகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு 14 கிராண்ட்பாஸ் நவகம்புர அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை புதிதாக தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் சத்திய பிரமாணம் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது. தலைவர். டி. மகேந்திரன், செயலாளர் ஜ.ராகுலன், ஆலோசகர். இரா மாதவன், பொருளாளர் ஏ.முருகன், கணக்கு பரிசோதகர் தனபாலன் மற்றும் ஏனைய அங்கத்தவர்களை படத்தில் காணலாம்.

படம்: எம்.நசார்

கொட்டும் மழையிலும் தடுப்பூசி பெற்றுக்கொள்வதில் மக்கள் ஆர்வம்

கர்தப்பளை பார்க் தோட்டத்தில் நேற்றுமுன்தினம்(15) காலை 30 வயது தொடக்கம் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

பார்க் தோட்ட பிரசவ விடுதியில் இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை கந்தப்பளை பொது சுகாதார பிரிவு அதிகாரி அமில தலைமையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை பிராந்திய பொது சுகாதார பரிசோதக பிரிவினர் முன்னெடுத்தனர்.

கந்தப்பளை பிரதேசத்தில் வானிலை மாற்றம் காரணமாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் மழையையும் பொருட்படுத்தாது பார்க் தோட்டம், தேயிலை மலை மற்றும் சந்திரகாந்த் போன்ற தோட்ட மக்கள் தடுப்பூசியை செலுத்தி கொள்வதில் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க கூடியதாகவிருந்தது.

தலவாக்கலை ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலையம் சர்வதேச பாடசாலையில் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 ஆவது ஜனன தின விழா கலை, கலாச்சார ஆன்மீக நிகழ்வுகளுடன் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கொட்டக்கலை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சாவித்ரி ரவிவர்மா, தலவாக்கலை ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய பணிப்பாளர் வைத்தியர் கருணைராசன், ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய பாடசாலையின் அதிபர் உமாதர்சினி ஆகியோர் கலந்துக்கொண்டனர். படம் தலவாக்கலை குறூப் நிருபர்

மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் மாணவர்களை இலக்கு வைத்து பாமசிகள் மூலம் போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வருகின்றது. திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் போதைப்பொருள் விற்பனை காரணமாக பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.ஆரம்பத்தில் போதையை ஏற்படுத்தவல்ல போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்த இந்த பாமசிகளில் தற்போது குறுகிய காலத்தில் உடல், உள உயிர் பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல குளிசைகள் விற்பனை செய்யப்பட்டு வருவது விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட் டுள்ளது

போதைப் பொருளுக்கு பதிலாக சந்தேகங்களை ஏற்படுத்தாத மாணவர் இளைஞர்களை கவரக்கூடிய குளிசை வகைகளை இவர்கள் பயன்படுத்தி வருவதாக இவர்கள் தெரிவிக்கின்றது.

இவற்றில் சில கொடிய நோய்களுக்கு பயன்படுத்தும் நோய்களுக்கான குளிசைகள் எனவும் வைத்தியர்களின் சிபாரிசு இன்றி விநியோகிக்க முடியாத உயிராபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய குளிசை வகைகள் கொள்ளை விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திகதி 15.12.2021 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4617
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,719,540.00
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 8 7 7 3 9 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.31,813,010.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2912
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,867,720.00
ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கங்கள் 33 57 74 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 79,856,328.56

மெகா பவர் MEGA POWER 10
சீட்டிழுப்பு இலக்கம் 965
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,257,440.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.160,272,286.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து W | சுப்பர் இலக்கம் 20 | வெற்றி இலக்கங்கள் 16 33 77 79

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 647
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,644,940.00
ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கங்கள் 27 31 46 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,334,826.00

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1182
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,262,480.00
வெற்றி இலக்கம் ரிஷபம் | வெற்றி இலக்கங்கள் 7 9 5 0 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,955,769.20
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ட்டத்தை கொண்டு வருகின்றது.

15.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 608,432
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 25,752,120.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 | ரூ. 1,000,000.00 பரிசு 01 | ரூ. 100,000.00 பரிசுகள 29
• ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
• பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
• வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.

STS

மக்கள் வங்கி - மாறவில கிளை

PEOPLE'S BANK

பெறுமதி மிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாறவில காணிப்பதிவகப் பிரிவுக்கு உட்பட்ட பிட்டிகல் கோரளே தெற்கு, யடகலன்பற்று, மஹறவெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள், ஹொரகொல்ல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள, "W 169" என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு.டப்ளியூ.எல்.எச்.பொ்னாண்டோ அவர்களால் வரையப்பட்ட, 1997 மார்ச் 10 ஆம் திகதியிடப்பட்ட 1907ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள உறுதி செய்யப்பட்ட பிரதியில் வரையப்பட்ட பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: ஏ-00 : றூ-00 : ப-38.85

அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

மஹறவெவ பிரதேச செயலகப் பிரிவின், நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட, ஹொரகொல்ல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், ஹொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள "W 169" என அழைக்கப்படும் அனுமதிபத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு.டப்ளியூ லக்ஷ்மன் எச்.பொ்னாண்டோ அவர்களால் வரையப்பட்ட, 7798 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள, துண்டு 02 இல் எல்லை குறிக்கப்பட்ட, பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: ஏ-00 : றூ-00 : ப-2.85

முக்கோண காணித்துண்டு மற்றும் அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

மேலே கூறப்பட்ட துண்டு 01 மற்றும் 02 என்பனவற்றின் இணைப்புடன் பின்வரும் காணித்துண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

துண்டு 01 இன் எல்லைகள் குறிக்கப்பட்ட மஹறவெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள், ஹொரகொல்ல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், ஹொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள "W 169" என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு.எம்.ஜே.கோமஸ் அவர்களால் வரையப்பட்ட, 14599ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள, பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: ஏ-00 : றூ-01 : ப - 1.70

அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக, மாறவில காணிப்பதிவகத்தில் K/185/65 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06ஆம் திகதி வியாழக்கிழமை

மக்கள் வங்கியின் மாறவில கிளை வளாகத்தில்

மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.

தீர்மான அறிவித்தலுக்கு

தயவு செய்து 2021.08.13ஆம் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையையும், மற்றும் டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

காணிக்கு செல்வதற்கான வழி

மாறவில மக்கள் வங்கிக் கிளையிலிருந்து A3 பாதை வழியே சிலாபம் மணிக்கூட்டு கோபுரத்தை நோக்கி சுமார் 100 மீற்றர் வரை செல்லவும். அங்கிருந்து வலது பக்கமாக நாத்தாண்டிய வீதியில் பிரவேசித்து சுமார் 300 மிற்றர் வரை சென்றதும் நாபடவெல வீதி இடது பக்கத்தில் உள்ளதை அவதானிக்கலாம். இந்த வீதி வழியே சுமார் 500 மீற்றர் வரை சென்று வலது பக்கமாக திரும்பி, மேலும் சுமார் 50 மீற்றர் வரை சென்றதும் குறிப்பிட்ட ஆதனம் மற்றும் கட்டடம் என்பனவற்றை பாதையின் இடது பக்கத்தில் காண முடியும்.

கொடுப்பனவு செய்யும் முறை:

ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2½% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) நொத்தாரிசு கட்டணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரியும்

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம், இல.79, மாறவில வீதி, நாத்தாண்டிய என்ற முகவரியில் செலுத்தப்படல் வேண்டும்.

தொலைபேசி : 032 2253300, 032 2253301

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்
130 வருடகால மகோன்னத சேவை
like us on facebook

தலைமை அலுவலகமும் காட்சியறையும்
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 081-2227593
தொலை/பக்ஸ் : 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்
6A, பெயார் பீல்ட் கார்ட்ன்,
கொழும்பு-08.
தொலைபேசி : 011-2671467, 011-2671468
தொலை/பக்ஸ் : 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையதளம்: www.sandslanka.com

நகர்வலம்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஊடக நெறிமுறை

கடந்த 11 மாதத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய 10,713 முறைப்பாடுகள்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஊடக நெறிமுறையொன்றை விரைவில் கொண்டுவர இருப்பதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கடந்த ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரைக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 ஆயிரத்தி 713 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்த அவர், இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏழில் ஒன்று குறித்து மாத்திரமே முறையிடப்படுவதாகவும் தெரிவித்தார்.

சிறுவர்கள் தொடர்பாக அறிக்கையிடுகையில் ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய ஊடக நெறிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு 1929 என்ற துரித இலக்கம் தற்போது 24மணி நேரமும் செயற்படுகிறது. சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அந்த இலக்கத்துக்கு அறிவிக்கலாம். அதேபோன்று பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1938 என் துரித இலக்கத்துக்கு 24 மணி நேரமும் முறையிடலாம். சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பல்வேறு அடிப்படையில் அதிகரித்து வருகிறது. அதனை கட்டுப்படுத்த எமது சட்ட திட்டங்களை இருக்கமாக்குவதுடன் சிறந்த ஒழுக்கமுள்ள சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும். அதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

கடந்த ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரைக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 ஆயிரத்தி 713 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது. அதில் ஆயிரத்தி 632 முறைப்பாடுகள் 5வயதுக்கு குறைந்தவர்கள் தொடர்பானவை. இந்த காலப்பகுதிக்குள் 6 முதல் 10 வயது வரையான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2ஆயிரத்தி 625முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன. இதில் 40வீதம் 5வயதுக்கு குறைவான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவே முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றன. இந்த கணக்கெடுப்பு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலாகும். இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏழில் ஒன்று தொடர்பிலே முறைப்பாடு செய்யப்படுகின்றது.சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் 60 நாடுகளின் பட்டியலை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்டிருந்தது. அதில் 3 நாடுகளே ஆசிய நாடுகளாகும். ஜப்பான், சிங்கப்பூர், மற்றும் தென் கொரியா ஆகியனவையே அவையாகும். ஏனைய 57நாடுகளும் மேற்கத்தேய நாடுகளாகும். உலகலாவிய ரீதியில் அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும் நாடுகளில் ஆபிரிக்க நாடுகளே முதலிடத்தில் இருக்கின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக கல்விக் கட்டமைப்பு, சட்டக் கட்டமைப்பு மற்றும் ஊடக பிரசார கட்டமைப்பின் பலவீனம் என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றை சரிசெய்வது எமது கடமையாகும். அதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்களில் செய்தி அறிக்கையிடுவதற்கு முறையான ஊடக நெறிமுறை ஒன்று பின்பற்றப்பட வேண்டும். அதற்காக ஊடக நெறிமுறையொன்றை விரைவில் கொண்டுவருவோம்.

அதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (பா)

படம்: சுதத் மலவீர

மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

வெலிகந்த சிங்கபுரம் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வெலிகந்த சிங்கபுரம் பகுதியிலுள்ள பண்ணையொன்றில் (13) இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். வயதுடைய வீரபுர, மதுரங்குளி பகுதியை வசிப்பிடமாக கொண்ட (வயது 45) நபர் ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, சிங்கபுரம் பகுதியிலுள்ள பண்ணையொன்றில் புதிய கூடு ஒன்றினை நிர்மாணிக்கும் போது மின்சாரம் தாக்கியுள்ளதில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

'ஈஸிகேஷ்' முறையில் ஹெரோயின் விற்பனை; மூவர் கைது

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஈஸிகேஷ் முறையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட மூவர் ஹெரோயின் போதைப் பொருளினை பக்கற்களில் அடைத்துக் கொண்டிருக்கும் போது திஸ்ஸமகாராமை வீரஹெல பிரதேசத்திலிருந்து திஸ்ஸமகாராமை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பக்கற் செய்யப்பட்ட சிறியஅளவிலான 202 ஹெரோயின் போதைப் பொருள் பொதிகள் மேலும் 15 கிராம் போதைப்பொருளும் சந்தேக நபர்களிடமிருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சர்வதேச தரத்தில் உள்நாட்டில் மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய முதலீட்டாளர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கு நேற்று அநுராதபுரம், ஒயாமடுவ மருந்துப்பொருள் உற்பத்தி வலயத்தில் காணி உறுதிகள் வழங்கப்பட்டன. காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தலைமையில் காணி அமைச்சில் நடைபெற்ற இந்நிகழ்வில் மருந்துப்பொருட்கள் உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சரான பேராசிரியர் சன்ன ஜயசுமன காணி உறுதி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

கொட்டிகாவத்தை முல்லேரியா பி.ச உப தலைவராக ஊடகவியலாளர்

பிரின்ஸ் குணசேகர

கொட்டிகாவத்தை முல்லேரியா பிரதேச சபையின் உப தவிசாளராக ஊடகவியலாளர் பிரின்ஸ் குணசேகர தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொட்டிகாவத்தை பிரதேச சபை காரியாலயத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது அவர் அதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

மேற்படி பிரதேச சபையின் உப தலைவர் பதவி வெற்றிடத்திற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த முன்னாள் உப தலைவரான சுமுது ருக்ஷான் மற்றும் தற்போதைய உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பிரின்ஸ் குணசேகர ஆகியோர் போட்டியிட்டனர்.

மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ. டி. பி. பிரசன்ன தலைமையில் கொட்டிகாவத்தை முல்லேரியா பிரதேச சபை கேட்போர் கூடத்தில் (15) நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிக வாக்குகளைப் பெற்று பிரின்ஸ் குணசேகர உப தலைவராக ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டார்.

கொதடுவ மகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையை கற்று, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சுதந்திர ஊடகவியலாளராகப் பணியாற்றி, தற்போது தினமின பத்திரிகையின் விளையாட்டு ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

அவர் உலகம் முழுவதும் பல்வேறு சர்வதேச விளையாட்டு விழாக்களை உள்ளடக்கிய சுமார் 50 நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். இவர் 27 வருடங்களாக பிரதேச சபை உறுப்பினராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்சி உயர்பீடம் எடுத்த முடிவை மீறி

பட்ஜட்டுக்கு ஆதரவளித்த மூவருக்கும் விளக்கமளிக்க கால அவகாசம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

வரவு செலவு திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கும் விளக்கமளிப்பதற்கு மேலும் இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்கியுள்ளதாக அக்கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் புத்தளத்தில் பாதிக்கப்பட்ட கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் நேற்று (16) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர், 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில்

புத்தளத்தில் கட்சித்தலைவர் ரிஷாத் எம்.பி

அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் அண்மையில் கொண்டு வரப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என கட்சியின் உயர்பீடம் கூடி முடிவெடுத்தது.

இந்த முடிவு கட்சியின் நான் உட்பட மற்றைய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

எனினும், எமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான இஷாக் ரஹ்மான், முஷாரப், அலிசப்ரி ரஹீம் ஆகிய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இவ்வாறு கட்சியின் உயர்பீடம் எடுத்த தீர்மானங்களையும், யாப்பையும் மீறி வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமையால் குறித்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அதுதொடர்பில் விளக்கமளிக்குமாறும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், விளக்கமளிப்பதற்கு தமக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் போதாதமையால் மேலும் கால அவகாசம் வழங்குமாறும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களும் எழுத்து மூலம் கேட்டுக் கொண்டனர்.

அதற்கிணங்க, வழங்கப்பட்ட கால அவகாசத்தை விடவும் மேலும் இரண்டு வாரம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாதம்பை வீதி விபத்து; தாயும் மகனும் பலி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

மாதம்பை ஈரட்டக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற வீதி விபத்தில் தாயும், மகனும் உயிரிழந்துள்ளனர்.

கந்தானை களுவாஇருப்புவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய மகனும், 54 வயதுடைய தாயுமே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த தாயும், மகனும் மோட்டார் சைக்கிளில் அநுராதபுரத்திற்கு சென்றுவிட்டு, மீண்டும் கந்தானை பகுதியை நோக்கிப் பயணம் செய்த போது மாதம்பை ஈரட்டக்குளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் உள்ள பெரிய மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, படுகாயமடைந்த இருவரையும் அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவ்விருவரும் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் கூறினர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு விழா இன்று

தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்

சுமார் 2668 பட்டதாரிகள் பட்டம் பெறுவர்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான சம்பிரதாய பூர்வ பட்டமளிப்புவிழா நிகழ்வுகள் இன்று (17), நாளை (18) மற்றும் 19 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடங்கள், கல்விநிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் வளாகங்களில் இருந்து சுமார் 2668 பட்டதாரிகள் பட்டம் பெறவுள்ளனர்.

பல்கலைக் கழக வேந்தர் சாசன கீர்த்தி சிறிபுத்தசாசன ஷோபன வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த நாயக்கதேரர், உபவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் சந்திரிகா என். விஜயரத்ன, மண்டப தலைவர், பீடாதிபதிகள், பணிப்பாளர்கள், நூலகர், கல்விசார் பணியாளர்கள், பதிவாளர் மற்றும் நிதி நிர்வாகி (பேர்ஸர்)ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மூன்று தினங்களில் பதினொரு அமர்வுகளாக சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு நிகழ்வு நடைபெறும். இன்று 17 ஆம் திகதி, கலைபீடம், கல்விபீடம் மற்றும் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மருத்துவபீடம் ஆகியவற்றின் அமர்வுகள் நடைபெறும். நாளை 18 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக்கற்கைகள் நிறுவனம் மற்றும் முகாமைத்துவ மற்றும் நிதிபீடத்தின் பட்டமளிப்பு அமர்வுகளும் நாளை மறுதினம் (19) சட்டபீடம், சுதேசமருத்துவ நிறுவனம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக விவசாயதொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனம், சிறிபாளிவளாகம் மற்றும் விஞ்ஞானபீடம் ஆகியவற்றின் பட்டமளிப்பு அமர்வுகளும் நடைபெறவுள்ளன.

பட்டமளிப்பு உரைகளை கலாநிதி குலதுங்க ராஜபக்ஷ, பேராசிரியர் துசிதஅபேதுங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, திரு. பீட்டர் டி அல்மேதா, திரு. ரணில் விதாரண, வணக்கத்திற்குரிய தபோவன யேசுதாதர தேரர், திரு மஜூல டி சில்வா,கலாநிதி சரத் காமினி டி சில்வா, கலாநிதி ரொஹான் பெர்னாண்டோ, கலாநிதி டப்ளியு. எம்.டப்ளியு. வீரகோன் மற்றும் அருட்தந்தை நொயல் டயஸ் அவ்வவ் அமர்வுகளில் உரைநிகழ்த்துவர். இந்த ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகம் தனது கலை, விஞ்ஞானபீடங்களினதும் பிரதான நூலகத்தினதும் நூற்றாண்டு விழா வினைக்கொண்டாடியமை விஷேட அம்சமாகும்.

கட்டாரிலுள்ள ஐந்து சகோதரிகள் நிதி உதவி;

புத்தளம் வைத்தியசாலையில் சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவு

கற்பிட்டி தினகரன் விஷேட, புத்தளம் தினகரன் நிருபர்கள்

புத்தளம் தள வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவு (14) திறந்து வைக்கப்பட்டது. கட்டாரிலுள்ள ஐந்து சகோதரிகள் இணைந்து குவைத் நாட்டின் 'Rahma International Society' நிறுவனத்தின் ஊடாக வழங்கிய நிதி உதவியில் மதுரங்குளி மேர்சி லங்கா நிறுவனத்தினால் குறித்த சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் தள வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் அர்ஜூனவின் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் குவைத் நாட்டின் 'Rahma International Society' நிறுவனத்தின் பிரதிநிதி முஹம்மது அல் கஸ்ஸார், மதுரங்குளி மேர்சி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி ஏ.பௌசுல் ரஹ்மான், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர் ராஜா குணரத்ன, புத்தளம் மாவட்ட மேலதிக செயலாளர், பொலிஸ், கடற்படை உயரதிகாரிகள், வைத்தியர்கள், சமயத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

சுமார் 17 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட குறித்த சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவுக்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நகர்வலம்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஊடக நெறிமுறை

கடந்த 11 மாதத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய 10,713 முறைப்பாடுகள்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஊடக நெறிமுறையொன்றை விரைவில் கொண்டுவர இருப்பதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கடந்த ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரைக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 ஆயிரத்தி 713 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவித்த அவர், இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏழில் ஒன்று குறித்து மாத்திரமே முறையிடப்படுவதாகவும் தெரிவித்தார்.

சிறுவர்கள் தொடர்பாக அறிக்கையிடுகையில் ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய ஊடக நெறிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு 1929 என்ற துரித இலக்கம் தற்போது 24மணி நேரமும் செயற்படுகிறது. சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அந்த இலக்கத்துக்கு அறிவிக்கலாம். அதேபோன்று பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1938 என் துரித இலக்கத்துக்கு 24 மணி நேரமும் முறையிடலாம். சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பல்வேறு அடிப்படையில் அதிகரித்து வருகிறது. அதனை கட்டுப்படுத்த எமது சட்ட திட்டங்களை இருக்கமாக்குவதுடன் சிறந்த ஒழுக்கமுள்ள சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும். அதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

கடந்த ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரைக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 ஆயிரத்தி 713 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது. அதில் ஆயிரத்தி 632 முறைப்பாடுகள் 5வயதுக்கு குறைந்தவர்கள் தொடர்பானவை. இந்த காலப்பகுதிக்குள் 6 முதல் 10 வயது வரையான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2ஆயிரத்தி 625முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன. இதில் 40வீதம் 5வயதுக்கு குறைவான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவே முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றன. இந்த கணக்கெடுப்பு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலாகும். இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏழில் ஒன்று தொடர்பிலே முறைப்பாடு செய்யப்படுகின்றது.சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் 60 நாடுகளின் பட்டியலை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்டிருந்தது. அதில் 3 நாடுகளே ஆசிய நாடுகளாகும். ஜப்பான், சிங்கப்பூர், மற்றும் தென் கொரியா ஆகியனவையே அவையாகும். ஏனைய 57நாடுகளும் மேற்கத்தேய நாடுகளாகும். உலகலாவிய ரீதியில் அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும் நாடுகளில் ஆபிரிக்க நாடுகளே முதலிடத்தில் இருக்கின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக கல்விக் கட்டமைப்பு, சட்டக் கட்டமைப்பு மற்றும் ஊடக பிரசார கட்டமைப்பின் பலவீனம் என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றை சரிசெய்வது எமது கடமையாகும். அதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்களில் செய்தி அறிக்கையிடுவதற்கு முறையான ஊடக நெறிமுறை ஒன்று பின்பற்றப்பட வேண்டும். அதற்காக ஊடக நெறிமுறையொன்றை விரைவில் கொண்டுவருவோம்.

அதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (பா)

படம்: சுதத் மலவீர

மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

வெலிகந்த சிங்கபுரம் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வெலிகந்த சிங்கபுரம் பகுதியிலுள்ள பண்ணையொன்றில் (13) இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். வயதுடைய வீரபுர, மதுரங்குளி பகுதியை வசிப்பிடமாக கொண்ட (வயது 45) நபர் ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, சிங்கபுரம் பகுதியிலுள்ள பண்ணையொன்றில் புதிய கூடு ஒன்றினை நிர்மாணிக்கும் போது மின்சாரம் தாக்கியுள்ளதில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

'ஈஸிகேஷ்' முறையில் ஹெரோயின் விற்பனை; மூவர் கைது

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஈஸிகேஷ் முறையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட மூவர் ஹெரோயின் போதைப் பொருளினை பக்கற்களில் அடைத்துக் கொண்டிருக்கும் போது திஸ்ஸமகாராமை வீரஹெல பிரதேசத்திலிருந்து திஸ்ஸமகாராமை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பக்கற் செய்யப்பட்ட சிறியஅளவிலான 202 ஹெரோயின் போதைப் பொருள் பொதிகள் மேலும் 15 கிராம் போதைப்பொருளும் சந்தேக நபர்களிடமிருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சர்வதேச தரத்தில் உள்நாட்டில் மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய முதலீட்டாளர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கு நேற்று அநுராதபுரம், ஒயாமடுவ மருந்துப்பொருள் உற்பத்தி வலயத்தில் காணி உறுதிகள் வழங்கப்பட்டன. காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தலைமையில் காணி அமைச்சில் நடைபெற்ற இந்நிகழ்வில் மருந்துப்பொருட்கள் உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சரான பேராசிரியர் சன்ன ஜயசுமன காணி உறுதி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

கொட்டிகாவத்தை முல்லேரியா பி.ச உப தலைவராக ஊடகவியலாளர்

பிரின்ஸ் குணசேகர

கொட்டிகாவத்தை முல்லேரியா பிரதேச சபையின் உப தவிசாளராக ஊடகவியலாளர் பிரின்ஸ் குணசேகர தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொட்டிகாவத்தை பிரதேச சபை காரியாலயத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது அவர் அதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

மேற்படி பிரதேச சபையின் உப தலைவர் பதவி வெற்றிடத்திற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த முன்னாள் உப தலைவரான சுமுது ருக்ஷான் மற்றும் தற்போதைய உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பிரின்ஸ் குணசேகர ஆகியோர் போட்டியிட்டனர்.

மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ. டி. பி. பிரசன்ன தலைமையில் கொட்டிகாவத்தை முல்லேரியா பிரதேச சபை கேட்போர் கூடத்தில் (15) நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிக வாக்குகளைப் பெற்று பிரின்ஸ் குணசேகர உப தலைவராக ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டார்.

கொதடுவ மகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையை கற்று, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சுதந்திர ஊடகவியலாளராகப் பணியாற்றி, தற்போது தினமின பத்திரிகையின் விளையாட்டு ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

அவர் உலகம் முழுவதும் பல்வேறு சர்வதேச விளையாட்டு விழாக்களை உள்ளடக்கிய சுமார் 50 நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். இவர் 27 வருடங்களாக பிரதேச சபை உறுப்பினராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்சி உயர்பீடம் எடுத்த முடிவை மீறி

பட்ஜட்டுக்கு ஆதரவளித்த மூவருக்கும் விளக்கமளிக்க கால அவகாசம்

புத்தளத்தில் கட்சித்தலைவர் ரிஷாத் எம்.பி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

வரவு செலவு திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கும் விளக்கமளிப்பதற்கு மேலும் இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்கியுள்ளதாக அக்கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் புத்தளத்தில் பாதிக்கப்பட்ட கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் நேற்று (16) களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர், 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் அண்மையில் கொண்டு வரப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என கட்சியின் உயர்பீடம் கூடி முடிவெடுத்தது.

இந்த முடிவு கட்சியின் நான் உட்பட மற்றைய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

எனினும், எமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான இஷாக் ரஹ்மான், முஷாரப், அலிசப்ரி ரஹீம் ஆகிய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இவ்வாறு கட்சியின் உயர்பீடம் எடுத்த தீர்மானங்களையும், யாப்பையும் மீறி வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமையால் குறித்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அதுதொடர்பில் விளக்கமளிக்குமாறும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், விளக்கமளிப்பதற்கு தமக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் போதாதமையால் மேலும் கால அவகாசம் வழங்குமாறும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களும் எழுத்து மூலம் கேட்டுக் கொண்டனர்.

அதற்கிணங்க, வழங்கப்பட்ட கால அவகாசத்தை விடவும் மேலும் இரண்டு வாரம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாதம்பை வீதி விபத்து; தாயும் மகனும் பலி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

மாதம்பை ஈரட்டக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற வீதி விபத்தில் தாயும், மகனும் உயிரிழந்துள்ளனர்.

கந்தானை களுவாஇருப்புவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய மகனும், 54 வயதுடைய தாயுமே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த தாயும், மகனும் மோட்டார் சைக்கிளில் அநுராதபுரத்திற்கு சென்றுவிட்டு, மீண்டும் கந்தானை பகுதியை நோக்கிப் பயணம் செய்த போது மாதம்பை ஈரட்டக்குளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் உள்ள பெரிய மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, படுகாயமடைந்த இருவரையும் அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவ்விருவரும் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் கூறினர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு விழா இன்று

சுமார் 2668 பட்டதாரிகள் பட்டம் பெறுவர்

தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான சம்பிரதாய பூர்வ பட்டமளிப்புவிழா நிகழ்வுகள் இன்று (17), நாளை (18) மற்றும் 19 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடங்கள், கல்விநிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் வளாகங்களில் இருந்து சுமார் 2668 பட்டதாரிகள் பட்டம் பெறவுள்ளனர்.

பல்கலைக் கழக வேந்தர் சாசன கீர்த்தி சிறிபுத்தசாசன ஷோபன வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த நாயக்கதேரர், உப வேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் சந்திரிகா என். விஜயரத்ன, மண்டப தலைவர், பீடாதிபதிகள், பணிப்பாளர்கள், நூலகர், கல்விசார் பணியாளர்கள், பதிவாளர் மற்றும் நிதி நிர்வாகி (பேர்ஸர்)ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மூன்று தினங்களில் பதினொரு அமர்வுகளாக சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு நிகழ்வு நடைபெறும். இன்று 17 ஆம் திகதி, கலைபீடம், கல்விபீடம் மற்றும் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மருத்துவபீடம் ஆகியவற்றின் அமர்வுகள் நடைபெறும். நாளை 18 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக்கற்கைகள் நிறுவனம் மற்றும் முகாமைத்துவ மற்றும் நிதிபீடத்தின் பட்டமளிப்பு அமர்வுகளும் நாளை மறுதினம் (19) சட்டபீடம், சுதேசமருத்துவ நிறுவனம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக விவசாயதொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனம், சிறிபாளி வளாகம் மற்றும் விஞ்ஞானபீடம் ஆகியவற்றின் பட்டமளிப்பு அமர்வுகளும் நடைபெறவுள்ளன.

பட்டமளிப்பு உரைகளை கலாநிதி குலதுங்க ராஜபக்ஷ, பேராசிரியர் துசிதஅபேதுங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, திரு. பீட்டர் டி அல்மேதா, திரு. ரணில் விதாரண, வணக்கத்திற்குரிய தபோவன யேசுதாதர தேரர்,திரு மஜூல டி சில்வா,கலாநிதி சரத் காமினி டி சில்வா, கலாநிதி ரொஹான் பெர்னாண்டோ, கலாநிதி டப்ளியு. எம். டப்ளியு. வீரகோன் மற்றும் அருட்தந்தை நொயல் டயஸ் அவ்வவ் அமர்வுகளில் உரைநிகழ்த்துவர். இந்த ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகம் தனது கலை, விஞ்ஞானபீடங்களினதும் பிரதான நூலகத்தினதும் நூற்றாண்டு விழா வினைக்கொண்டாடியமை விஷேட அம்சமாகும்.

கட்டாரிலுள்ள ஐந்து சகோதரிகள் நிதி உதவி;

புத்தளம் வைத்தியசாலையில் சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவு

கற்பிட்டி தினகரன் விஷேட, புத்தளம் தினகரன் நிருபர்கள்

புத்தளம் தள வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவு (14) திறந்து வைக்கப்பட்டது. கட்டாரிலுள்ள ஐந்து சகோதரிகள் இணைந்து குவைத் நாட்டின் 'Rahma International Society' நிறுவனத்தின் ஊடாக வழங்கிய நிதி உதவியில் மதுரங்குளி மேர்சி லங்கா நிறுவனத்தினால் குறித்த சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் தள வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் அர்ஜூனவின் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. இதில் குவைத் நாட்டின் 'Rahma International Society' நிறுவனத்தின் பிரதிநிதி முஹம்மது அல் கஸ்ஸார், மதுரங்குளி மேர்சி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி ஏ.பௌசுல் ரஹ்மான், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர் ராஜா குணரத்ன, புத்தளம் மாவட்ட மேலதிக செயலாளர், பொலிஸ், கடற்படை உயரதிகாரிகள், வைத்தியர்கள், சமயத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

சுமார் 17 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட குறித்த சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவுக்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலைச்சாரல்

கணபதி தமிழ் வித்தியாலயத்திற்கு புதிய பாதை

மாணவர்களின் நலன்கருதி வார்விக் தோட்டத்திலுள்ள கணபதி தமிழ் வித்தியாலயத்திற்கு செல்லும் பாதையை புனரமைத்து மாணவர்களின் பாவனைக்காக இ.தொ.காவின் உபதலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் கையளித்தார்.

வார்விக் தோட்டத்திலுள்ள கணபதி தமிழ் வித்தியாலயத்திற்கு செல்லும் பாதை செங்குத்தாகவும் அதிக மழை காலப்பகுதியில் சேறும் சகதியுமாகவும் இருப்பதால், மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து செல்வதில் சிரமத்தை எதிர்நோக்கினர்.

இதுதொடர்பில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் செந்தில் தொண்டமானிடம் முன்வைத்த கோரிக்கையை ஏற்று பாதையை நிர்மாணித்து மாணவர்களின் பாவனைக்கு கையளித்துள்ளனர்.

செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட மஸ்கெலியா புளூம்பீள்ட் தேசிய பாடசாலையில் பாடசாலை அதிபர் என். பரமேஸ்வரன் தலைமையில் 50 மாணவர்களுக்கு சின்னம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

படம்: மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

தோட்டக்கம்பனிகளுக்கு பாடம் புகட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது

இணக்கப்பாடின்றி பேச்சுவார்த்தை முடிவு

ஹற்றன் சுழற்சி நிருபர்

"பெருந்தோட்டத் தொழிலாளர்களை அடக்கி ஆள முற்படும் தோட்டக் கம்பனிகளுக்கு பாடம் புகட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதற்கான தொழிற்சங்கப் போராட்டத்தை இ.தொ.கா. ஆரம்பித்துவிட்டது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அக்கரபத்தனை பிளான்டேசனின் பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட முகாமைத்துவ தரத்திலான அதிகாரிகளுக்கும், இ.தொ.கா. உள்ளிட்ட தொழிற்சங்க பிரமுகர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் பிராந்திய தொழில் ஆணையாளர் தலைமையில் நேற்று (16.12.2021) ஹற்றனிலுள்ள தொழில் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றது.

இதனைதொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

அக்கரபத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன என சுட்டிக்காட்டி அதற்கு எதிராகவும், தமது தொழில் உரிமைகளை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் தோட்டத் தொழிலாளர்கள் பணிபுறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களின் இந்த போராட்டத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்கள் முழுமையான ஆதரவை வழங்கியுள்ளன.

அக்கரபத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்டங்களில் வேலை செய்யும் மக்களுக்கு நியாயம் கிட்டும்வரை பின்வாங்கப்போவதில்லை.

நாளொன்றுக்கான பெயருக்கு 20 கிலோ பறித்தாக வேண்டும் என்பது உட்பட தோட்ட நிர்வாகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் ஏற்கவில்லை. அதேபோல் தொழிற்சங்கங்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை நிர்வாகம் ஏற்கவில்லை. இதனால் உறுதியான இணக்கப்பாடின்றி பேச்சுவார்த்தை முடிவடைந்தது.

பெருந்தோட்ட மக்களை மிகவும் மோசமான நிலைக்கு அக்கரபத்தனை பிளான்டேசன் தள்ளிக் கொண்டிருக்கின்றது. சில தோட்டங்களில் 10 முதல் 12 கிலோ கொழுந்து பறிப்பதே கடினமாக செயல். இந்நிலையில் 20 கிலோ பறிக்குமாறு நிர்ப்பந்திக்கின்றனர். இதனை நாம் ஏற்கவில்லை.

துரைமாரை இறக்கி கொழுந்து பறிக்க சொன்னோம், அவர்கள் எவ்வளவு பறிக்கின்றார்களோ அவர்களைவிட அதிகமாக 2 கிலோ பறித்து தருவதாக குறிப்பிட்டோம். அதற்கு அவர்கள் உடன்படவில்லை. கொடுப்பனவுகளிலும் பிரச்சினைகள் உள்ளன. எனவே, எமது போராட்டம் தொடரும்.

கடந்த ஒரு வருடமாக நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவில்லை. மக்கள் நலனுக்காக அமைதி காத்தோம். இனியும் மக்கள் நலன் பாதிக்காத வகையில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

தீர்வுக்காக போராடுவோம். அனைத்து தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கின. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்." என்றார்.

இதன்போது இச் சந்திப்பில் பங்கேற்ற தோட்ட நிர்வாக தரப்புகளிடம் கருத்து கோர முயற்சித்த போதும் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவதை தவிர்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

லிந்துலை பாமஸ்டனில் விபத்து

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

கொட்டாவையிலிருந்து நுவரெலியாவிற்கு சென்ற வானொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றைய வானொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளான சம்பவமொன்று பாமஸ்டன் பகுதியில் நேற்று 15/12 மாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொட்டாவையிலிருந்து, நுவரெலியாவிற்குச் சென்ற வான் பாமஸ்டனில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வான் ஒன்றின் மீது மோதியுள்ளது. இதனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் 40 அடி பள்ளத்தில் பாய்ந்து வீடுடொன்றின் முற்றத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் வான் முற்றாக சேதமடைந்துள்ளது. அத்துடன வீட்டு முற்றமும் சேதமடைந்துள்ளது. தெய்வாதீனமாக உயிர்சேதம் ஏற்படவில்லை. இச்சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

லிந்துலையில் மக்கள் போராட்டம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

அக்கரபத்தனை பிரதேச சபை தவிசாளர், மக்களின் வரிப்பணத்தை முறைகேடாக பயன்படுத்துவதாக தெரிவித்து தொழிலாளர் தேசிய சங்கத்தின் அக்கரப்பத்தனை பிரதேச சபை உறுப்பினர்களும், பிரதேச மக்களும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், இந்த குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்துள்ள பிரதேசசபை தவிசாளர் கதிர்ச்செல்வன், மக்களுக்கான பஸ் தரிப்பிடமே அமைக்கப்படுவதாகவும், எஞ்சிய இடத்திலேயே சட்டப்பூர்வமான அனுமதியுடன் மக்கள் நலன் கருதி கடைகள் நிர்மாணிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அக்கரபத்தனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்ற வேளையிலேயே, லிந்துலை நாகசேனையிலுள்ள சபைக்கு முன்னாள் பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அவர்களின் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையிலும், சபை தவிசாளரின் செயலைக் கண்டித்தும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் உப தலைவரும், அக்கரப்பத்தனை பிரதேச சபையின் உறுப்பினர் வே.சிவானந்தன், மற்றும் உறுப்பினர் எஸ்.சுதாகர் ஆகிய இருவருமே இவ்வாறு வெளிநடப்பு செய்தனர்.

" அக்கரபத்தனை, மன்றாசி நகரிலுள்ள புதிய பாலத்துக்கு அருகில் பஸ் தரிப்பிடம் அமைப்பதற்காகவே அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் பஸ் தரிப்பிடம் அமைக்காமல், தனக்கும் தனது சகாக்களுக்கும் தவிசாளர் கடைகளை அமைத்து வருகின்றார். சட்டவிரோதமாகவே இதற்கான நடவடிக்கை இடம்பெறுகின்றது. தோட்ட அனுமதியின்றி காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது." என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கட்டாயம் பஸ் தரப்பிடம் அமைக்கப்பட வேண்டும், மக்களின் வரிப்பணத்தை தவிசாளர் முறையாக பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர். அதேவேளை, இது தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளரிடம் வினவியபோது,

" பஸ் தரிப்பிடமே உரிய அனுமதியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. எஞ்சிய இடத்தில்தான் மக்களின் நலன் கருதி கடைகள் அமைக்கப்படுகின்றன. இதற்கு சட்டப்பூர்வமான அனைத்து அனுமதியும் உள்ளது. தேவையான ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனினும், எதிரணியிலுள்ள இருவரே இதனை குழப்பும் நோக்கில் தவறான கருத்துகளை பரப்பி வருகின்றனர். அனைத்து ஆவணங்களும் சட்டப்பூர்வமாகவே உள்ளன. எனவே, சவால்களை எதிர்கொள்ள நான் தயார்." என்றார்.

அவலமான நிலையில் ஹற்றன் -யாழ் பஸ்சேவை

ஹற்றனிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பஸ் நிலைமை மோசமாக உள்ளதென பயணிகள் தெரிவிக்கின்றனர்.

ஹற்றனிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு ஒரேயொரு இரவு நேர பஸ் மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகிறது.

மழை பெய்யும் போது பஸ்சுக்குள்ளும் மழை நீர் ஒழுக்கு ஏற்படுகிறது. நீண்ட தூர பயணத்திற்கு ஏற்றதான ஆசனங்களும் அந்த பஸ்சில் கிடையாது.

கரப்பான்பூச்சி, பல்லி தொல்லைகளும் பஸ்சுக்குள் அதிகம் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக, தனியார் பஸ் போக்குவரத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆர். ரெஜினா

அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த நினைவுப் பேருரையும் பாராட்டு நிகழ்வும்

அமரர் இர.சிவலிங்கத்தின் 22ஆவது நினைவுப்பேருரை மற்றும் சாதனையாளர்களை பாராட்டும் நிகழ்வும் நாளை காலை 10.00 மணிக்கு இராகலை ஹல்கரனோயா உயர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக்குழு மற்றும் மலையக ஆர்வலர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை இராகலை உயர் தேசிய பாடசாலையின் அதிபர் மை. பன்னீர்செல்வம் ஆற்றவுள்ளார். இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக்குழுவின் தலைவர் எம். வாமதேவன் தலைமையுரையையும், பேராசிரியர் தை. தனராஜ் பேருரையாளர் அறிமுகம் செய்யவுள்ளார். 'மலையகத்தில் எண்மக்கல்வி சவால்களும் வாய்ப்புகளும்' எனும் தலைப்பில் பேராதனை பல்கலைக்கழக பொறியியற்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.கே. நவரட்ணராஜா ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வின் இரண்டாவது அமர்வாக மலையக ஆர்வலர் ஒன்றியத்தின் அமைப்பாளர் திருமதி இந்திராணி துரைராஜ் அறிமுகவுரை ஆற்றவுள்ளார். சாதனையாளர்களை பாராட்டும் நிகழ்வில் 2020ம் ஆண்டு க.பொ.த உயர்தர பெறுபேறுகளில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான வாழ்த்துரைகளும் இடம்பெறும்.

முன்னாள் அதிபர் பிலிப் ராமையா, நுவரெலியா, சிரேஸ்ட சட்டத்தரணிகளான எஸ். தாயுமானவன், ஏ.பி. கணபதிப்பிள்ளை, கொழும்பு பி. சுதந்திரராஜ், வலப்பனை வலய கல்விப் பணிப்பாளர் பி.பி. நவரட்ண, ஹங்குராங்கெத்த, முன்னாள் உதவி கல்விப்பணிப்பாளர், பி. மரியதாஸ், முன்னாள் சமூகவியல் விரிவுரையாளர் செல்வி கௌரி பழனியப்பன், சிரேஸ்ட சட்டத்தரணியும் நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பி. இராஜதுரை ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கவுள்ளனர். நன்றியுரையை கொட்டகலை, அரசினர் ஆசிரியர் கலாசாலை, வருகைதரு விரிவுரையாளர், பி. அருள்மொழிச்செல்வன் ஆற்றவுள்ளார்.

ஆட்சியை எம்மிடம் ஒப்படைக்கும் காலம் இப்போது வந்துள்ளது

ஜே.வி.பி அரசியல் உயர் பீட அங்கத்தவர் கே.டி. லால்காந்த

அக்குறணை குறூப் நிருபர்

மக்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றாத பிரதிநிதிகளை பாராளுமன்றிலிருந்து மீள அழைக்கும் திட்டம் ஒன்றை நாம் கொண்டு வருவோம் என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் உயர் பீட அங்கத்தவர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

கலகெதர பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஒரு மாதத்திற்கு முன்னர் நாடு இருந்த நிலையை விட இன்றைய நிலையில் பாதகமான மாற்றங்கள் காணப்படுகிறது. நிலைமை வரவர மோசமடைகிறது. அதாள பாதாளத்தை நோக்கி நாடு செல்கிறது. எமது கையில் 5 வருட ஆட்சியைத் தாருங்கள். நாட்டை மீளக் கட்டி எழுப்பி முறையான தேசத்தை உங்கள் கைகளில் ஒப்படைப்போம். நாம்தான் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு என பொதுமக்கள் வெளிப்படையாகக் கூறுகின்றனர்.

நாம் இதுகால வரை ஆட்சியை எம்மிடம் ஒப்படைக்கும் படி கேட்கவில்லை. இப்போது கேட்கிறோம். ஏனென்றால் அதற்கான காலம் வந்துள்ளது என்றார்.

ஹப்புத்தளை பண்டாரவளை பிரதான வீதியில் நேற்று அதிகாலையில் கார் ஒன்று விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் எவருக்கும் எந்தவொரு பாதிப்பு ஏற்படவில்லை. கொழும்பிலிருந்து பண்டாரவளை செல்லும் போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

படம்: லுணுகல நிருபர்

சகவாழ்வு இஸ்லாம் அளித்துள்ள முக்கியத்துவம்

உலகில் முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையாகவோ சிறுபான்மையாகவோ வாழ நேரிடலாம். அது உலகின் எந்தப் பிராந்தியமாகவும் அமையலாம். ஆயினும், இஸ்லாத்தின் தனித்துவத்தைப் பேணி வாழ்வது அதன் மீதான மார்க்கக் கடமையாகும். அதேவேளை, பிற சமூகங்களுடன் இணங்கி, சமாதானமாக வாழ்வதும் தாம் வாழ்கின்ற நாட்டிற்கு தம்மாலான பங்களிப்பை ஆற்றுவதும் அவர்கள் மீது கடமையாகும்.

இலங்கை போன்று முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடொன்றில் இக் கருத்தை சீர்தூக்கிப் பார்ப்பது மிகவும் அவசியம். இஸ்லாமிய தனித்துவத்தைப் பேணி, முஸ்லிம் அல்லாதவர்களோடு இணங்கியும் கலந்தும் வாழ்தல் என்ற இத்தொனிப்பொருள் கடந்த பல தசாப்தங்களாக இஸ்லாமிய சட்டத்துறையின் பேசு பொருளாக இருந்து வருகின்றது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை, தனித்துவத்தைப் பேணி வாழ்தல், ஒரு மார்க்கக் கடமை என்றே அது கருதுகின்றது. ஸூறதுல் ஹுஜ்ராதின் 7 ஆவது வசனம், 'அல்லாஹ் உங்களுக்கு ஈமானை விருப்பத்திற்குரியதாகவும், உங்கள் உள்ளங்களில் அதனை அலங்காரப் பொருளாகவும் ஆக்கினான்' எனக் குறிப்பிடுகின்றது. இவ்வசனத்திற்கு விளக்கமளித்துள்ள அபுல் ஹஸன் அலி நத்வி (றஹ்), 'அலங்காரப் பொருளாக ஆக்கினான் என்பதன் அர்த்தம், 'ஒரு முஸ்லிமின் தனித்துவம் இஸ்லாமே' என்பதை எடுத்துக்காட்டுவதாகக் கூறியுள்ளார்.

ஸூறதுல் பகராவின் 115 ஆவது வசனத்திலும் இதன் தாத்பரியம் வலியுறுத்தப்படுகின்றது. 'கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்குரியது. நீங்கள் எத்திசை நோக்கித் திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் கண்காணிப்பு உள்ளது'. இவ்வசனம் முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அல்லாஹ்வின் தூதை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்பதையே பறைசாற்றுகின்றது.

'எனது கோவேறு கழுதையின் மூக்கணாங்கயிறு காணாமல் போனாலும் அதனை நான் அல்லாஹ்வின் குர்ஆனில் கண்டு கொள்வேன்' என்று அபூபக்கர் (றழி) அவர்கள் கூறியுள்ளதும் 'நாம் இழிவடைந்த சமூகமாக இருந்தோம், இஸ்லாத்தின் மூலம் அல்லாஹ் எங்களை கண்ணியப்படுத்தினான். யார் இஸ்லாத்தை விட்டும் கண்ணியத்தைத் தேடுகிறாரோ அவரை அல்லாஹ் இழிவுபடுத்தி விடுவான்' என்று உமர் (றழி) அவர்கள் கூறியுள்ளதும் இஸ்லாத்தின் மீதான பற்றையும் அதன் தனித்துவத்தைப் பேணி வாழ்வதன் அவசியத்தையும் எடுத்துரைக்கின்றன.

நாம் கூறும் இத்தனித்துவம் எமது சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், கலாசாரப் பாரம்பரியங்கள் என்பவற்றில் மட்டுமன்றி, வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மனித வாழ்வை எழுபது பகுதிகளாகப் பிரிக்க முடியுமென்றால் அந்த ஒவ்வொரு பகுதியுடனும் இத்தனித்துவம் தொடர்புபட்டுள்ளதை நாம் புரிந்துகொள்ளலாம்.

ஸூறதுல் ஆலஇம்ரானின், 'உங்களில் ஒரு சமூகம் நன்மையின் பால் அழைக்கட்டும். நன்மையை ஏவி தீமையைத் தடுக்கட்டும். அவர்கள் தான் வெற்றியாளர்கள்' என்ற வசனத்திற்கு தப்ஸீருல் மனார் அளித்துள்ள விளக்கதத்தில், 'இவ்வசனத்தில் உள்ள 'கும்' என்பது ஒட்டுமொத்த மனித குலத்தையும் குறிப்பதாகவும், குர்ஆன் முழு மனித குலத்துக்குமானது. அதனால் 'உம்மா' என்று வந்திருப்பது முழு முஸ்லிம் சமூகத்தையும் குறிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, முஸ்லிம் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் ஒவ்வொரு தாஇயாக இருக்கின்றான் என்பதையே இவ்வசனம் கூறுகின்றது. தாஇயாக இருக்கின்ற ஒருவன், மக்கள் மத்தியிலிருந்து ஒருபோதும் விலகியிருக்கவோ மூடுண்டு வாழவோ, பிரிந்திருக்கவோ முடியாது. திறந்த நிலையில் இணங்கி வாழ்பவனாக அவன் இருக்க வேண்டும்.

இதேவேளை முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளில் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் சமன்பாடொன்றை சமகால இஸ்லாமிய அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அச்சமன்பாட்டை நன்கு பேணும் வகையில், ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்கள் தமது சமூக, கலாசார, ஆன்மிக வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொண்டுள்ளனர்.

இன்று உலகிலுள்ள மொத்த முஸ்லிம் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுபான்மையாக வாழ்கின்றனர். தனித்துவத்தைப் பேணுதல் இத்தகைய சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஒரு சவாலே அல்ல எனக் கருதும் அளவுக்கு இஸ்லாமிய சட்டத்துறையில் விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை போன்ற சிறுபான்மை நாடொன்றில் எமது மார்க்க, கலாசார தனித்துவங்களைப் பேணிக்கொள்வதற்கு சகவாழ்வு இனறியமையாததாகும். இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளில் இதுவும் ஒன்று. மத சகிப்புத் தன்மை, பிற சமூகங்களுடன் இணங்கி வாழல், பிற சமூகங்களின் சுக துக்கங்களில் கலந்துகொள்ளல், பொது வாழ்வில் ஈடுபடல் ஆகிய பல்வேறு அம்சங்கள் சகவாழ்வுடன் தொடர்புபடுகின்றன. பிற சமூகங்களுடன் இணங்கி வாழ்வதே இஸ்லாத்தின் அடிப்படை வேண்டுகோளாகும். முஸ்லிம்களுடன் இணக்கமாக வாழ்வதோடு, முஸ்லிம் அல்லாதவர்களோடு சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளுமாறும் இஸ்லாம் பணிக்கின்றது. அத்தகைய சகிப்புத்தன்மையின் விளைவே இஸ்லாம் போதிக்கும் சகவாழ்வாகும்.

அல்குர்ஆனை ஆழ்ந்து கற்கும் போது, அது சமாதானத்தினதும் சகவாழ்வினதும் மார்க்கம் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம். இஸ்லாம் எனும் சொல்லின் கருத்தே அமைதியும் சமாதானமுமே ஆகும். சமாதானத்தைக் குறிக்கும் 'சில்ம்' எனும் பதமும் அதிலிருந்து பிரிந்த சொற்களும் சுமார் 100 இடங்களில் இடம்பெறுகின்றன. இஸ்லாம் அடிப்படையில் சமாதானத்தின் மார்க்கம் என்பதையே அல்குர்ஆனின் இப்போதனைகள் வலியுறுத்துகின்றன. நபிகளாரின் வாழ்வியலிலும் இக்கருத்தையே பிரதிபலிக்கின்றது.

அப்துல்லாஹ் ...

இஸ்லாம் முழு மனித குலத்திற்குமான மார்க்கம். மனிதனை மனிதனாக மாத்திரம் பார்க்கும் மார்க்கம். மதம், இனம், மொழி, கலாசாரம், நாடு ஆகிய எல்லைகளைத் தாண்டி அனைவரும் மனிதர்களாக வாழ்வதற்கு இஸ்லாம் தூண்டுதலளிக்கின்றது.

இஸ்லாம் போதிக்கும் சகவாழ்வின் சில அடிப்படைகளை நோக்கினால், பூமியில் தோன்றும் அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்பினமாகும். 'நிச்சயமாக நாம் உங்களை ஒரே பெண்ணிலிருந்தும் ஒரே ஆணிலிருந்தும் சிருஷ்டித்தோம். பின்னர் கோத்திரங்களாகவும் குழுக்களாகவும் ஆக்கினோம். நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக.' (ஹுஜ்ராத்: 13)

உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள். இந்த கண்ணியம் அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்டது. ஆதமின் அனைத்து சந்ததியினருக்கும் உரியது. அல்லாஹ், ரஸூல், முஃமின்களுக்கு விஷேட கண்ணியம் உள்ளது போன்று, எல்லா மனிதர்களுக்கும் ஒரு பொதுவான கண்ணியத்தை அல்லாஹ் வழங்கியுள்ளான். 'நாம் ஆதமின் சந்ததியினரை கண்ணியப்படுத்தி விட்டோம். கடலிலும் கரையிலும் அவர்களைச் சுமந்தோம்.' (இஸ்ராஃ: 70)

மனித குலத்திற்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை. அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரிய மனிதன் சக மனிதனுக்கு நன்மை பயப்பவன் என இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. 'மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பம். அல்லாஹ்வின் குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர்கள்.' (ஆதாரம்: முஸ்லிம்)

இஸ்லாம் சகோதரத்துவத்தை பெரிதும் வலியுறுத்தியுள்ளது. எல்லா மனிதர்களதும் மூதாதையர் ஆதமும் ஹவ்வாவுமே. அதனால் அனைவரும் சகோதரர்கள். இப்பின்னணியிலேயே அல்குர்ஆன் பல இடங்களில் மனிதர்களே... என விழித்துப் பேசுகிறது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் மேற்கொள்ளும் பிரார்த்தனையில், 'இறைவா! மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என நான் சாட்சி பகர்கிறேன்' என்றும் பிரார்த்தனை செய்யக்கூடியவராக இருந்தார்கள்' என ஸைத் பின் அர்கம் (றழி) அவர்கள் கூறியுள்ளார். (ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத்)

ஒரு முறை 2 ஆம் உமர் எனப் போற்றப்படும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் பஸராவின் கவர்னராக இருந்த அதீ இப்னு அத்ரஹ் என்பவருக்கு எழுதிய கடிதத்தில், 'உங்களது ஆட்சியின் கீழுள்ள முஸ்லிம் அல்லாதவர்களிடையே வாழும் வயதான, சம்பாதிக்க முடியாதவர்களை தேடிக்கண்டு பிடித்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுங்கள்' என்று பணித்தார்கள். ஸதகதுல் பித்ர் போன்றவற்றை முஸ்லிம் அல்லாதோருக்கும் வழங்கலாம் என்ற கருத்தை இமாம் அபூ ஹனீபா, இமாம் ஸுஃரி, இமாம் முஹம்மத் போன்றோர் கொண்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. தமது நிலைப்பாட்டுக்கு ஸூறதுல் பகராவின் 271 ஆம் வசனத்தை அவர்கள் ஆதாரமாகக் கொள்கின்றனர்.

உழ்ஹிய்யா இறைச்சியின் ஒரு பகுதியை முஸ்லிம் அல்லாதோருக்கு வழங்க முடியும் என்ற கருத்தை இமாம் இப்னு குதாமா முன்வைக்கின்றார். அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) ஒரு முறை தனது அயல் வீட்டில் வாழ்ந்த முஸ்லிமல்லாதவருக்கு இவ்வாறு உழ்ஹிய்யாவிலிருந்து ஒரு பகுதியை வழங்கியமையை அவர் மேற்கோள் காட்டுகின்றார். காலித் பின் வலீத் (றழி) பைதுல்மாலிலிருந்து முஸ்லிம் அல்லாத ஏழைகளுக்கு செலவு செய்துள்ளார். கலீபா உமர் (றழி) அவர்கள் ஒரு முறை டமஸ்கஸிலிருந்து மதீனாவுக்குத் திரும்பும் வழியில் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு பைதுல்மாலிலிருந்து உதவுமாறு டமஸ்கஸ் கவர்னரைப் பணித்தார்கள். ஸகாத் பெறத் தகுதியுடைய 'மிஸ்கீன்' எனும் பிரிவினர் முஸ்லிம் அல்லாதோரிடையே காணப்படும் ஏழைகள் என்பதுதான் உமர் (றழி) அவர்களின் கருத்தாகும்.

ஆகவே சகவாழ்வுக்கு இஸ்லாம் அளித்துள்ள முக்கியத்துவம் மற்றும் சிறப்பு குறித்து கவனம் செலுத்தி அவற்றுக்கு ஏற்ப வாழ்வை அமைத்துக்கொள்வோம்.

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார்
aalamulislam.tkn@lakehouse.lk

நோயாளியை நலன் விசாரிப்போம்

அல்லாஹ் மனிதன் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாகவே அவனை சோதிக்கின்றான். மனிதன் அவனது சொத்து, செல்வம், மனைவி, மக்களால் மாத்திரமல்லாமல் நோய்களாலும் சோதிக்கப்படுகின்றான். சமூகத்தில் நோயாளர்கள் பரவலாகக் காணப்படுகின்றனர். ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை அவர் நோயாளரை நோய் விசாரிக்கச் செல்வது கடமையாகும். நோய் விசாரிக்கச் செல்வதானது ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய ஐந்து கடமைகளில் ஒன்றாகும்.

எம்.எல். நதா பர்வின் ...
ஆயிஷா சித்தீக்கா கல்லூரி
மாவனல்லை

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மூஸா (ரலி) அறிவிக்கிறார்கள். நோயாளியை நோய் விசாரியுங்கள், பசித்தவருக்கு உணவளியுங்கள், கைதியின் விடுதலைக்கு உதவுங்கள். (ஆதாரம்: புகாரி)

இதன்படி நோய் விசாரிக்கச் செல்வதன் முக்கியத்துவம் தெளிவாகின்றது. இருந்தும் நோய் விசாரிக்க செல்வத்தின் சிறப்பை அறியாதவர்களாக இருப்பவர்களை மக்கள் மத்தியில் பரவலாகக் காண முடிகின்றது.

இதேவேளை ஸவ்பான் (ரழி) அவர்கள், 'ஒரு முஸ்லிம் தனது முஸ்லிம் சகோதரனை நோய் விசாரித்தால், அவர் திரும்பி வரும்வரை சுவர்க்கத்தில் கொய்து கொண்டிருக்கிறார்' என ரசூல் (ஸல்) கூற, ஒருவர் 'யாரசூலுல்லாஹ் கொய்து கொண்டிருக்கிறார் என்றால் என்ன? எனக் கேட்க "சுவர்க்கப் பழங்களை பறித்துக்கொண்டிருக்கிறார்' எனக் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை காலையில் நோய் விசாரித்தால் மாலையாகும் வரை எழுபதாயிரம் மலக்குகள் அவருக்காக துஆச் செய்கின்றனர். அதேபோன்று அவர் மாலையில் நோய் விசாரிக்கச் சென்றால் காலை வரையிலாகும். மேலும் சுவர்க்கத்தில் கொய்யப்பட்ட பழக்குவியலும் கிடைக்கும்.

இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகிறார்கள். ரசூல் (ஸல்) ஒரு கிராமப்புற மனிதனை நோய் விசாரிக்கச் சென்றார்கள். இவ்வாறு யாரையேனும் நபியவர்கள் நோய் விசாரிக்கச் சென்றால். "லா பஹ்ஷ தமூ இன்ஷா அல்லாஹ்" (பரவாயில்லை, இன்ஷா அல்லாஹ் இது உனது பாவங்களை சுத்தம் செய்து விடும்) என்று கூறுபவராக இருந்தார்கள். (புஹாரி)

ஆகவே நோய் விசாரிக்கச் செல்லும் போது அதன் சிறப்புகளை உணர்ந்து நோயாளிக்காக பிரார்த்திப்போம்.

சுபஹ் தொழுகையின் சிறப்பு

அதிகாலையில் நித்திரை விட்டெழுதல் என்பது சிரமமாகவே தோன்றுகிறது. அதிலும் வுழு செய்வதென்றால் இன்னும் அலுப்பாக இருக்கும். ஏனென்றால் அதிகாலையில் சில்லென்று வீசும் இளந்தென்றல், அதனூடே தழுவிக்கொள்ளும் குளிர், நீண்ட நேரம் கண்டு கொண்டிருக்கும் கனவு, இடையில் முடிவடையுமே என்ற ஒரு சிறு ஏக்கம் என இன்னாரென்ன காரணங்கள் பல. எனினும், இவ்வனைத்தையும் தூக்கி எறிந்து விட்டு எழும்புவதன் சிறப்பை நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்விடம் இறைஞ்சிய துஆ மூலம் அறிந்து கொள்ளலாம். "யா அல்லாஹ் எனது சமூகத்திற்கு அதிகாலை நேரத்தில் அருள்வளத்தை நல்குவாயாக" (ஆதாரம்: அபூதாவூத்)

இதன்படி அதிகாலை எவ்வளவு சிறப்புக்குரியது என்பது தெளிவாகிறது. அதனால் சுப்ஹ் தொழுகை தொழாதவர்களுக்கு அன்றைய தினம் பரக்கத் குறைந்ததாக இருக்கும். முகத்தில் புன்னகை இராது. அன்றைய தினம் முழுவதும் குழப்பமான மனநிலை காணப்படுவதோடு மேற்கொள்ளும் பணிகளிலும் திருப்தி ஏற்படாது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், சுப்ஹ் தொழுகை முடிந்தபின் எங்களை நோக்கித் திரும்பியவாறு, 'இன்ன மனிதர் தொழுகைக்கு வந்தாரா? எனக் கேட்க, மக்கள் 'இல்லை' என்றனர். அதனைத் தொடர்ந்து மீண்டும் இன்னார் வந்தாரா? எனக் கேட்க. மக்களும் 'இல்லை' எனக்கூற நபி (ஸல்) அவர்கள் வேதனையுடன் இவ்வாறு கூறினார்கள். 'நயவஞ்சகர்களுக்கு இந்த இரு தொழுகைகளும் (சுப்ஹ், இஷா) கடினமானவையாக இருக்கும். இந்த இரு தொழுகைகளில் கிடைக்கும் நன்மைகளை இவர்கள் அறிந்துகொண்டால் தவழ்ந்தேனும்

சுஆதா அன்சார் ...
உயன்வத்த

இத்தொழுகைக்காக வருவார்கள்' என்றார்கள் என உபை இப்னு கஅப் (ரழி) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இப்பொன்மொழியில் பொதிந்திருக்கும் கருத்தை விளங்கிக் கொள்வோர் சுப்ஹ் மற்றும் இஷா தொழுகைகளை உதாசீனம் செய்ய மாட்டார்கள். மேலும், அதிகாலையில் அதான் ஒலி கேட்டும் திரும்பிப் படுக்கும் ஒருவரின் காதில் ஷைத்தான் சிறுநீர் கழிக்கிறான் என்ற நபி வாக்கும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. பல நாட்கள் சுப்ஹ் தொழாதவரின் செவிகள் தினமும் ஷைத்தானின் சிறுநீரால் கழுவப்படுமாயின், அவரது நிலை என்னவாகும் என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.அதேவேளை, சுபஹ் தொழுதவருக்குக் கிடைக்கும் சிறப்புக்கள் பற்றியும் நபி (ஸல்) அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள். 'மறுமையில் இருளில் ஒளியின்றி நடப்பவர்களுக்கு நற்செய்தியாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். (பள்ளிவாசலை நோக்கி அதிகாலை) இருளில் நடந்து செல்பவர்களுக்கு மறுமையில் முழுமையான ஒளி கிடைக்கும் எனும் நற்செய்தியைக் கூறுங்கள்' (ஆதாரம்: பைஹகி) என்றும், 'யார் சுப்ஹ் தொழுகையைத் தொழுகின்றாரோ அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கின்றார்' (ஆதாரம்: தபரானி) என்றும், சூரிய உதயத்திற்கு முன்புள்ள தொழுகையையும் சூரியன் மறைந்ததற்குப் பின்னுள்ள தொழுகையையும் (சுப்ஹ், இஷா) யார் தொழுகின்றாரோ அவர் நரகில் ஒரு நாளும் நுழைய மாட்டார். (ஆதாரம்: முஸ்லிம்) என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த நபிமொழிகள் சுப்ஹ் தொழுபவர்களுக்கு கிடைக்கும் சுபசோபனமாக நபியவர்களால் நன்மாராயம் கூறப்பட்டவைகளாகும். இச்சிறப்பை நாம் அடைய வேண்டுமாயின், தூக்கம், சோம்பல் என்பவற்றைத் தியாகம் செய்ய வேண்டும். ஷைத்தானின் தூண்டுதல்களை முறியடிக்க வேண்டும். ஏனெனில் எமது முக்கிய தேவைக்காக அதிகாலையில் எழும்ப முடியுமாயின், இம்மை, மறுமை இரண்டிலும் சௌபாக்கியத்தையும், சுவனத்தையும் பெற்றுக் கொள்வதற்காக மனமுவந்து எழுந்து சுப்ஹ் தொழுகையை நிறைவேற்றுவோம்.

தர்மமாகும் நல்ல வார்த்தை

அதிய்யிப்னு ஹாதிம் (ரழி) அவர்கள், 'ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் எமக்கு நரகத்தை ஞாபகமூட்டினார்கள். பின்னர் தனது முகத்தை எம்மை விட்டும் வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்கள். மீண்டும் 'நீங்கள் நரகத்தைப் பயந்து கொள்ளுங்கள்' என்றார்கள். மீண்டும் முகத்தை வேறுபக்கம் திருப்பினார்கள். அவர்கள் நரகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்று நாம் நினைத்தோம். பின்னர் எம்மை நோக்கி ஒரு பேரீத்தம் பழத்தின் ஒரு பகுதியை தர்மம் செய்தேனும் நரகத்தை பயந்து கொள்ளுங்கள். அதற்கும் வசதியற்றவர்கள் நல்ல வார்த்தைகளை மொழிவதனூடாகவேனும் நரகத்தைப் பயந்து கொள்ளுங்கள்' என்றார்கள்.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்).

நபியவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் இவ்வாறு அறிவித்துள்ளார்கள், 'அடியான் சில போது பெரிதாகப் பொருட்படுத்தாத நிலையில் சில வசனங்களைப் பேசுவான். அவை அல்லாஹ்வின் விருப்பத்துக்கு உட்பட்டதாக அமையுமாயின், அதன் மூலம் அல்லாஹ் அவனை பல மடங்கு அந்தஸ்தில் உயர்த்துவான். அதே போன்று அடியான் பெரியளவு பொருட்படுத்தாமல் சில வார்த்தைகளைப் பேசுவான். அவை அல்லாஹ்வின் கோபத்தை ஏற்படுத்துவதாயின் அவனை அவை நரகத்தின் படுபாதாளத்தில் தள்ளிவிடும்'

(ஆதாரம்: ஸஹீஹ் புகாரி)

மிக்தாத் இப்னு சுரைஹ் (ரழி) அவர்களின் பாட்டனார், 'அல்லாஹ்வின் தூதரே.. சுவர்க்கத்தை எனக்குக் கடமையாக்கக் கூடிய (வாஜிபாக) ஒன்றைச் சொல்லித் தாருங்கள்' என்றேன். அதற்கு நபியவர்கள் 'இல்லாதோருக்கு உணவளிப்பது, ஸலாத்தைப் பரப்புவது, நல்ல வார்த்தைகளைப் பேசுவது என்பன சுவர்க்கத்தை கட்டாயம் பெற்றுத் தரும் செயல்கள்' என்றார்கள்.

மேலும் நபியவர்கள் கூறியதாக அலி (ரழி) அவர்கள், 'சுவர்க்கத்தில் சில அறைகள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் வெளிப்புறம் நின்று பார்த்தால் உட்புறமும் உள்ளே நின்று பார்த்தால் வெளிப்புறமும் தெளிவாகத் தெரியும். இதனைச் செவியுற்ற ஒரு காட்டரபி 'அல்லாஹ்வின் தூதரே! அவை யாருக்காக தயார்படுத்தப்பட்டுள்ளன?' என வினவ, அதற்கு நபியவர்கள், 'அழகிய முறையில் நல்ல விடயங்களை பேசுபவர், இல்லோதோருக்கு உணவளிப்பவர், சுன்னத்தான நோன்புகளை நோற்பதில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர், இரவில் மக்கள் தூங்கும் போது எழுந்து இரவுத் தொழுகையில் ஈடுபடுபவர்" எனப் பதிலளித்தார்கள்.

(ஆதாரம்: திர்மிதி)

'முஃமின் என்பவன் எப்போதும் அடுத்தவர்களை குறை சொல்பவனாகவோ, அதிகமதிகம் சபிப்பவனாகவோ தரம் கெட்ட, கீழ்த்தரமான ஆபாசமான பேச்சுக்களை பேசுபவனாகவோ இருக்க மாட்டான்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வையும் மறுமையையும் ஈமான் கொண்ட உள்ளத்தின் வெளிப்பாடும் நல்ல வார்த்தைகளாகும். 'யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்கின்றாறோ அவர் நல்லவார்த்தையைப் பேசட்டும், அல்லது வாய்மூடி மௌனமாக இருக்கட்டும்".

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்).

மிகவும் தூய எண்ணத்துடன், நல்ல கருத்துக்களையும் சிந்தனைகளையும் சமூகத்துக்கு வழங்குவதில் நவீன தொலைதொடர்பு சாதனங்களையும், சமூக வலைத்தளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்தி நபியவர்கள் குறிப்பிட்ட உயர்ந்த தர்மங்களின் நன்மைகளைப் பூரணமாக பெற்றுக்கொண்ட கூட்டத்தில் அல்லாஹ் எம்மனைவரையும் ஆக்கியருளட்டும்.

ஏ.எம். முஹம்மத் ஸப்வான்
சீனன் கோட்டை, பேருவளை.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 டிசம்பர் 17
வெள்ளிக்கிழமை

கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்கு சீனா, இருபது மில்லியன் ரூபா நிதியுதவி

கிளிநொச்சி குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை சீனா வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சீனத்தூதுவர், அமைச்சர் டக்ளஸை சந்தித்து கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மைச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போதே, இந்த உதவிகளை சீனத் தூதுவர் வழங்கினார்.

இலங்கை சீன கூட்டு முயற்சியான குயிலான் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்படும் கடலட்டை குஞ்சு இனப் பெருக்கப் பண்ணையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களுக்கு வளமான எதிர்காலத்தைப் பெற்றுத் தரக்கூடிய முதலீடுகள், தொழில் நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடலட்டை பண்ணை முதலீட்டின் ஊடாக ஐந்து மடங்கு இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.

இது, ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த முதலீட்டின் மூலம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும். இந்த அடிப்படையில் சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்பதாகவும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள்

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில், யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான், நேற்று முன்தினம் இவற்றை வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டோருக்கு இந்த இழப்பீடுகள் வழங்கப்பட்டன. அத்துடன் பாடசாலைகள், முன்பள்ளிகள், ஆலயங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு பொருட்கள், உபகரணங்களும் அன்றைய தினம் வழங்கப்பட்டன. சுமார் முன்னூறு பேருக்கு இழப்பீட்டுக்கான காசோலைகளும், பொது அமைப்புக்களுக்கு பொருட்கள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இந்த பொருட்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊர்காவற்துறை கடற்கரையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

யாழ்.விஷேட நிருபர்

ஊர்காவற்துறை கடற்கரையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் கரையொதுங்கிய நிலையில் நேற்று (16) உறவினர்களால் மீட்கப்பட்டது.

நயினாதீவைச் சேர்ந்த நடராசா தர்மபாலன் (வயது 58) என்பவரது சடலமே இதுவென உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த இந்நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் , கடந்த 09ஆம் திகதி வீட்டை விட்டு வெளியேறிச் சென்ற நிலையில்,இவர் காணாமல் போயிருந்ததாகவும் உறவினர்கள் பொலிஸாரின் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில், ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில், மக்களின் காணிகளை விடுவிக்க தீர்மானம்

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படும், மக்களின் பயன்பாட்டுக் காணிகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தலைமையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இக்கலந்துரையாடல், நேற்று வியாழக்கிழமை (16) இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பல்வேறு காணிகள் வன ஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்றன. இவற்றை மக்களின் பயன்பாட்டுக்கு விடுமாறு இம்மாவட்டத்தின் பல எம்பிக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் இதையடுத்தே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், காதர் மஸ்தான், கே.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் முன் வைக்கின்ற பல பிரச்சினைகளை உடனே தீர்க்க முடியாதுள்ளது. இதனால் விசேட குழு ஒன்றை நியமித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதென தீர்மானிக்கப்பட்டது.

வில்பத்து தேசிய பூங்கா, கலா ஓய விற்கு குறுக்கே தொங்கு பாலம் அமைக்க அடிக்கல்

மன்னார் குறூப் நிருபர்

வில்பத்து தேசிய பூங்காவின் எளுவன்குளம் நுழை வாயிலுக்கும், கலா ஓயாவிற்கும் குறுக்கே தொங்கு பாலம் அமைப்பதற்கான அடிக்கல் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவினால் நடப்பட்டது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (15) மாலை இடம் பெற்றது.

ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டத்தின் அனுசரணையில் நிர்மாணிக்கப்படவுள்ள குறித்த பாலமானது, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும், வில்பத்து தேசிய பூங்காவிற்கு இலகுவாக செல்லக்கூடிய வகையிலும் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அடிக்கல் நடும் நிகழ்வில், ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டத்தின் திட்டப் பிரதிநிதி திருமதி கிறிஸ்டி ஆன் ஐன்பீல்ட், வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, வன ஜீவராசிகள் பிரதிப் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன, தோட்டக்கலை பிரதிப் பணிப்பாளர் சாந்தனி வில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கைவிடப்பட்ட நாற்பது இலட்சம் ரூபா

தங்க ஆபரணங்களை உரியவரிடம் ஒப்படைத்த இளைஞனுக்கு பாராட்டு

நாகர்கோவில் விஷேட நிருபர்

கைவிடப்பட்ட நாற்பது இலட்சத்துக்கும் அதிகமான தங்க நகைகளை உரியவரிடம் ஒப்படைத்த இளைஞனை பாராட்டும் வைபவம், வடவரணி கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்று முன்தினம் (15) இடம் பெற்றது.

தென்மராட்சி வரணியைச் சேர்ந்த சியானீஸ் மதுசன் என்ற 21 வயது இளைஞனை பாராட்டுவதற்கே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இளைஞன், அரியாலை பஸ் தரிப்பிடத்தில் கைவிடப்பட்டுக் காணப்பட்ட நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை உரியவரிடம் ஒப்படைத்திருந்தார். கைவிடப்பட்ட பெட்டிக்குள் இருந்த கைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, ஆபரணங்களை உரியவரிடம் ஒப்படைத்த இவரது செயற்பாடு பலரையும் கவர்ந்திருந்தது. இந்த முன்மாதிரியான செயற்பாட்டை பாராட்டியே வடவரணி கந்தசுவாமி ஆலய முன்றலில் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இந்நிகழ்வில்,குறித்த இளைஞனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அவரது தாயாருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. சமூக வலைத்தளங்களும் இவ்விளைஞனை பாராட்டி கருத்துக்களை வெளியிட்டிருந்தன. இந்நிகழ்வில் ஆலய குரு, வரணிப் பகுதி பாடாசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர்மக்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டு இளைஞனை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்திருந்தனர்.

யாழ்ப்பாணத்துடன் தொடர்புகளை பேணுவதற்கு சீனா விரும்புகிறது

யாழ்.விஷேட நிருபர்

எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்திற்கும் சீனாவிற்கும் இடையில் தொடர்புகளைப் பேண விரும்புவதாக, யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்தார். பொது நூலகத்தை பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முதன்முதலாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன். நீண்ட கால வரலாறுள்ள யாழ் பொது நூலகத்திற்கு வருகை தந்ததில், நான் மகிழ்ச்சியடைகிறேன். நூலகத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில், யாழ் மாநகர முதல்வர் மற்றும் யாழ் மாநகரசபை ஆணையாளருடன் பேசி தெரிந்து கொண்டேன். எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்திற்கும் சீனாவிற்கும் இடையில் தொடர்புகளை பேண விரும்புகின்றோம் என்றார். இங்கு கருத்து தெரிவித்த யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன், சீனாவின் தூதுவர் பொது நூலகத்திற்கு கணினிகளையும் மேலும் பல புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவர்களுக்கு நன்றிகளை தெரிவிக்கிறோம். இந்த நூலகத்தை இணையவழியிலான நூலகமாக மாற்ற உதவுமாறு கோரிக்கை விடுத்தோம். இதுபற்றி ஆலோசிப்பதாக சீனத்தூதுவர் கூறியுள்ளார் என்றார்.

இளங்கலைமதி விருது வழங்கி கௌரவிப்பு

மாந்தை மேற்கு பிரதேச செயலகமும் மாந்தை மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்திய கலாசார விழா நேற்று முன்தினம் (15) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மன்னார் மாவட்ட செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ,மடு வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மதகுருமார், ஊர்மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதில்,இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன்,மூத்த கலைஞர்கள், இளங்கலைஞர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

பெரியமடுவைச் சேர்ந்த யாசீன் நிஹ்ரி, இளங்கலைமதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் ஊடகவியலாளருக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவு அழைப்பாணை

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சியைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் பரராஜசிங்கம் சுஜீவனை கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரிவு, இன்று (17) கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவுக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டமை ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக கிளிநொச்சி ஊடக மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு, அடிக்கடி ஊடகவியலாளர்களுக்கு தொல்லை கொடுக்கப்படுவது, அவர்களது பணியை செய்வதில் பெரும் இடைஞ்சலை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் ஆணைக்கு குறுக்காக செயற்பட விரும்பாததால், பட்ஜட்டை ஆதரித்தோம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விளக்கம்

முல்லைத்தீவு குறூப் நிருபர்

மக்கள் ஆட்சியை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பம் பறிக்கப்படக் கூடாது என்பதற்காகவே,

யாழ் மாநகர சபையின் பட்ஜட்டுக்கு ஆதரவளித்து வெற்றிபெறச் செய்ததாக, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

யாழ்,மாநகர சபை பட்ஜட்டுக்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் அக்கட்சி தெரிவித்துள்ளதாவது, இந்த பட்ஜட் தோற்கடிக்கப்படுமென,பல எதிர்பார்ப்புக்கள் நிலவின. இருந்த போதும், மக்களின் அபிலாஷைகளுக்கு குறுக்காக செயற்பட எமது கட்சி விரும்பவில்லை. இதனால்தான், இந்த பட்ஜட்டை ஆதரித்தோம். எங்களது ஆதரவு கிடைத்ததால் மூன்று மேலதிக வாக்குகளால், யாழ், மாநகர சபையின் பட்ஜட் வெற்றி பெற்றுள்ளது.

கடந்தவருடம் நடைபெற்ற பாதீட்டின்போது மக்களது நலன்களை புறக்கணித்து தன்னிச்சையாகச் செயற்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாதீட்டை தோற்கடித்தோம். இதனால், தற்போதைய முதல்வர் தலைமையிலான தரப்பினருக்கு ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்நிலையில், 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை முதல்வர் மணிவண்ணன் முன்வைத்திருந்தார். இதையும், தோற்கடிப்பதற்கான முயற்சிகள் பலதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் மக்கள் நலனையே முதன்மையாக கொண்டு குறித்த பாதீட்டை ஆதரித்து மக்களின் ஆணையைக் காப்பாற்றியதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் தெரிவித்தனர்.

கிழக்கின் குரல்

மட்டு. மாநகர ஆணையாளராக ஒரே நாளில் இருவர் பதவியேற்பு

மாலை வேளையில் கடமையேற்ற தயாபரனே ஆணையாளர்

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு மாநகர ஆணையாளராக இலங்கை நிருவாக சேவையின் முதல்தர வகுப்பைச் சேர்ந்த மாணிக்கவாசகர் தயாபரன் புதன்கிழமை (15) மாலை மீண்டும் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுனரின் நியமனத்திற்கமைய புதன்கிழமை காலை இலங்கை நிருவாக சேவையின் முதல்தர வகுப்பைச் சேர்ந்த பொறியியலாளர் நடராஜா சிவலிங்கம் மாநகர ஆணையாளராக கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார்.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா கணக்காளர் மற்றும் ஜி.எச்.சிவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிருவாக நியமன மாற்றத்தினால் நடராஜா சிவலிங்கத்தின் ஆணையாளர் நியமனம் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் மாணிக்கவாசகர் தயாபரன் மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நிகழ்வின்போது மாநகர பிரதி ஆணையாளர் உதயகுமார் சிவராஜா மற்றும் உத்தியோகத்தர்கள் கொண்டனர். மட்டக்களப்பு மாநகர சபைக்கு ஒரே நாளில் இரு ஆணையாளர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் சிறுவர்களின் கல்வியை உறுதிப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் திருக்கோவில் பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.கசிகலாவின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது, கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இக் கற்றல் உபகரணங்களானது பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுவின் ஊடாக திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 பாடசாலை மாணவ மாணவிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இநிகழ்வில், திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே. சதிசேகரன், பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி கள உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர்.

ஹிறா சமுர்த்தி அமைப்பின் அலுவலகம் திறந்துவைப்பு

புதிய காத்தான்குடி தினகரன்

மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள செல்வநகர் கிழக்கு பாலமுனை பிரதேசத்தில் ஹிறா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அலுவலகம் புதன்கிழமை (15) திறந்து வைக்கப்பட்டது.

மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையிலும் அவரின் மேற்பார்வையிலும் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் மண்முனை பற்று பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பாத்தும்மா பரீட், முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி கலைவாணி புவனேந்திரன், ஆரையம்பதி சமுர்த்தி வங்கி வலய முகாமையாளர் கே.நவரஞ்சன், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு உத்தியோகத்தர் எஸ்.யு.குணா, பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜயன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.ஜுனைதீன் உட்பட ஹிறா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஹிறா சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

சமுர்த்தி வேலைத்திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், கிராம மட்டத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று மாநகர சபை 'பட்ஜெட்' ஏகமனதாக நிறைவேற்றம்

தேசிய காங்கிரஸின் ஆளுகையிலுள்ள அக்கரைப்பற்று மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கட்சி வேறுபாடின்றி ஏகமானதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கான விசேட பொதுச்சபை அமர்வு செவ்வாய்க்கிழமை மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆளும் தேசிய காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி(NFGG) உறுப்பினர்களும் 2022 இற்கான பாதீட்டினை ஆதரவளித்து வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

2021ஆம் நிதி ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினை கட்சி பேதமின்றி ஆதரித்து அங்கீகாரம் வழங்கியது போல், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தினையும் ஆதரித்து அவற்றில் குறித்தொதுக்கப்பட்ட காத்திரமான மக்கள் நலனோம்பும் செயற்திட்டங்களை அமுல்படுத்தவென ஆணை வழங்கியிருக்கும் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மாநகர பிதா நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

கொரோனாவால் இழந்த கல்வியை மீட்டெடுக்க கல்முனை வலயத்தில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வையும், ஆசிரிய ஆலோசகர் ரவிச்சந்திரன் பயிற்சி வழங்குவதையும் படத்தில் காணலாம்.
(படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு அபராதம்

அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் றிஸ்லி

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட 72 வழக்குகளுக்கு நீதிமன்றங்களினால் 03 இலட்சத்தி 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார். கொவிட் 19 காலப்பகுதியில் கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து அம்பாறை, தெஹியத்தக்கண்டி, பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தலைமையில் 58 சுற்றி வளைப்புகளை பாவனையாளர் அலுவலகல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டதாக தெரிவித்தார்.

நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்தல், நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

இதேவேளை, நத்தார் மற்றும் புது வருட பண்டிகைகளை முன்னிட்டு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் பாவனையாளர் அலுவலகல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளவுள்ளதாகவும், மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி மேலும் தெரிவித்தார்.

நெற் களஞ்சியசாலையை புனரமைக்குமாறு கோரிக்கை

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட நெற்கலஞ்சியசாலை நீண்ட காலமாக சேதமடைந்து காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்கட்டடம் கடந்த யுத்தகாலத்தில் சேதமாக்கப்பட்ட நிலையில், இன்னும் புனரமைக்கப்படாது காணப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இக் கட்டடத்திற்கு அருகில் சல்மா வித்தியாலயம் அமையப் பெற்றுள்ளதால், இங்கு கற்கின்ற மாணவிகளும் ஆசிரியர்களும் அச்சத்துடனே பாடசாலை செல்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் இக்கட்டடத்தின் ஒருபகுதி சுவர் விழுந்துள்ளதால், பாடசாலை மாணவிகளும் ஆசிரியர்களும் மிகுந்த அச்சத்துடன் தினமும் பாடசாலை செல்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இக் கட்டடம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச பாடசாலை நிருவாகமும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூதூர் பொதுமைதானம் அபிவிருத்தி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பொது விளையாட்டு மைதானத்தின் பல்வேறு புனரமைப்புக்கென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மூலம் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில், 05 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் தெரிவித்தார்.

மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு அபிவிருத்தி வேலைகள் குறித்தும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவிடம் நேரில் சந்தித்து தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பொது விளையாட்டு மைதானத்தை முறையாக சமப்படுத்தி சீர்செய்யப்படுவதுடன், விளையாட்டு வீரர்கள் ஆடை மாற்றும் குழாய் நீர் வசதிகள், மின் இணைப்பு வசதிகள், மலசலகூட வசதிகள் உள்ளிட்ட ஏனைய உட்கட்மைப்பு அபிவிருத்தி வேலைகள் பல மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

உரமின்மையால் விவசாய செய்கை பாதிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற் செய்கை, இரண்டு மாதம் கடந்தும் இரசாயன உரமின்மையால் ஒருசான் உயரம்கூட வளர்ச்சியடையவில்லை எனவும், வேளாண்மை பச்சை நிறத்திற்கு பதிலாக மஞ்சள் நிறத்தில் காட்சியளிப்பதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மாவடிவேம்பில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு வலுவூட்டல் திட்டத்தின் கீழ் 35 வயதுக்கு மேற்பட்ட தொற்றா நோயாளர்களுக்கு சுகாதார அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு மாவடி வேம்பில் மாவட்ட பொது வைத்திய அதிகாரி என்.கார்த்திக் தலைமையில் இடம் பெற்றது. கிராம சேவை உத்தியோகத்தர் அலோசியஸ் விஜயகுமார் மற்றும் அதிதிகள் அடையாள அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும்போது.
(படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)

கல்முனையில் கட்டாக்காலி மாடுகளால் விபத்துகள் அதிகரிப்பு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கல்முனை பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வீதியில் பயணிப்போர் விபத்துக்களுக்குள்ளாகி வருகின்றனர். கல்முனை மாநகர சபை இக் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மைக்காலமாக கல்முனை நகர் பகுதி, அதனை அண்டிய பிரதேசங்களில் கட்டாக்காலி மாடுகள் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது.

வீதியின் நடுவில் படுத்துறங்குவதும், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிற்பதுமாக மாடுகள் அலைவதனால் வாகனங்களில் பயணிப்போர் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதுடன், விபத்துக்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். அத்துடன் பாதையோரங்களில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், முதியோர்கள் கட்டாக்காலி மாடுகளால் ஆபத்துக்களை சந்தித்து வருகின்றனர்.

கடந்த காலங்களிலும் கல்முனை மாநகர சபையினால் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைக் கட்டுகப்படுத்த பல்வேற தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என பொதுமக்கள் வினசம் தெரிவிக்கின்றனர்.

மாநகர சபை இறுக்கமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன். கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சர்வதேச சிறுவர் தின சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் நினைவுச்சின்னம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (11) அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் ஏ.கே. ரொசின்தாஜ் தலைமையில் இடம்பெற்ற போது.
(படம்: அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அரசியல்வாதிகள், அதிகாரிகளின் கயிறு இழுத்தல் காரணமாக

அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 23 கோடி நிதி மீண்டும் திறைசேரிக்கு திரும்பியுள்ளது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வட மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் நிர்வாகிக்கப்படுகின்ற பாடசாலைகளின் 2021 ஆம் ஆண்டு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள 23 கோடி ரூபா எந்த தேவைகளுக்கும் பயன்படுத்தப்படாமல் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பொது கல்வி புதுமை திட்டத்தின் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டம் தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இது தெரிய வந்துள்ளது.

குறித்த மாகாணத்தில் சில பாடசாலைகளின் கூரை உடைந்து விழும் நிலையில் உள்ள போதும் பாடசாலைகளின் முக்கியமான இன்னும் பல அடிப்படை தேவைகள் இருப்பதாகவும் இங்கு தெரியவந்துள்ளது.

இராஜாங்க அமைச்சரின் பொலன்னறுவை கூட்ட மண்டபத்தில் வட மத்திய மாகாண கல்விசார் பிரதானிகளின் பங்கு பற்றுதலுடன் இக்கலந்துறையாடல் இடம் பெற்றுள்ளது.

அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் கயிறு இழுத்தல் காரணமாக இந்த நிதியை கொண்டு எவ்வித அபிவிருத்தி பணியும் செய்ய முடியாமல் போயுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த அபிவிருத்தி திட்டம் அவசரத்தில் நினைத்தது போல் செய்வதனாலும் எவ்வித பயனும் இல்லை. இவ்வாறு ஒதுக்கப்படும் பணம் கடன் வடிவில் 40 அல்லது 50 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

இதனால் ஒதுக்கப்படுகின்ற நிதியை கொண்டு பயன்பெற அதிகாரிகள் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பழுதடைந்துள்ள கூரையினால் பாடசாலைகளில் ஏதாவது ஒரு அனர்த்தம் ஏற்படுமாயின் அதன் பொறுப்பை யார் ஏற்பர் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். இவ்விடயத்தில் வட மத்திய மாகாண கல்வி பணிப்பாளர்களின் பிழையான நடவடிக்கையே இதற்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருந்து வகைகளை கொண்டு செல்ல குளிரூட்டிய புதிய லொறி

ஆளுநர் மஹிபால ஹேரத் வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கொவிட் 19 தொற்று நோய்க்கு பயன்படுத்தப்படும் தடுப்பூசி மற்றும் மருந்து வகைகளின் வெப்ப நிலையை கட்டுப்படுத்தி கொண்டு செல்லக்கூடிய லொறி ஒன்றை வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் அநுராதபுரம் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்தியர் நிமல் ஆரியரத்னவிடம் அண்மையில் கையளித்துள்ளார்.

இன்றைய அவசரத் தேவையாகவிருந்த கொவிட் 19 நோய்க்கு பயன்படுத்தப்படும் தடுப்பூசி மற்றும் மருந்து பொருட்களை வெப்ப நிலையை கட்டுப்படுத்தி கொண்டு செல்லும் பணியில் குறித்த லொறி சேவையில் அமர்த்தப்படவுள்ளது.

11 மில்லியன் ரூபா பெறுமதி மிக்க குறித்த லொறி ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது வட மத்திய மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார , மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் பாலித பண்டார உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கிரியவில் 'கிருஷ்ணன் மண்டபம்' திறந்து வைப்பு

இங்கிரிய, றைகம, ஸ்ரீ குறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தின் முன்னாள் அறங்காவலர் சபைத் தலைவர் அமரர் கிருஷ்ணனின் பெயரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'கிருஷ்ணன் மண்டபம்' திறப்பு விழா கடந்த வாரம் நடைபெற்றது.

லயன்ஸ் கிளப் தலைவர் பி. ஜெகநாதமணியின் முன்னிலையில், முன்னாள் இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜினால் 'கிருஷ்ணன் மண்டபம்' திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில், பறை இசை கலைஞர்களின் வரவேற்பு தப்பாட்டம், மற்றும் வாணி அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் சிறப்பு விருந்தினர்கள், மற்றும் தன்னார்வ பணியாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கொழும்பு லயன்ஸ் கிளப் உறுப்பினர் வி.கே. பாலசுப்ரமணியத்தின் ஒருங்கமைப்பில் லயன்ஸ் கழக உறுப்பினர்களின் நன்கொடை உதவியுடன் லட்சக்கணக்கான ரூபாய் செலவில் இந்த மண்டபம் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாணிக்கக்கல் வர்த்தக சங்க வருடாந்த கூட்டம்

பேருவளை சீனன்கோட்டை மாணிக்கக்கல் வர்த்தக சங்க வருடாந்த கூட்டம் அண்மையில் சீனன்கோட்டை பிரதான காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல் நிர்வாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மத்தியில் விளக்கமளிப்பதை படங்களில் காணலாம்.

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

320

வெற்றிடங்கள்

ஹோட்டல்கள், பேக்கரிகள்

பேக்கரி ஒன்றிற்கு மேசை வேலையாட்கள், தட்டி வேலையாட்கள், கேக்பாஸ்மார், வேட்டர்மார், கையுதவியாட்கள் தேவை. டர்மினஸ் பேக்கர்ஸ், 149, டீன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. 0777571207.

081375

வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனம்
(கடற்றொழில் அமைச்சு)

மட்டக்குளியிலுள்ள களஞ்சியசாலை இடவசதியின் வாடகை / குத்தகைக்கான கேள்வி

கேள்வி இல. 2021/RL/01

கொழும்புத் துறைமுகத்திற்கு அருகாமையில் இல. 25, ஹெந்தல இறங்குதுறை வீதி, மட்டக்குளி, கொழும்பு - 15 இல் 25,000 சதுர அடி இடப்பரப்பிலான களஞ்சியசாலை இடவசதி உள்ளது. நீர் வழங்கல், 3 பேஸ் மின்சாரம் மற்றும் கனரக வாகனங்கள் / கொள்கலன்களை நிறுத்துவதற்குப் போதுமான இடவசதிகளும் உள்ளன.

- அதிகூடிய விலைக்கோரல்
- முற்பணம் - ஒரு வருடம்

ஒரு தொகுதி விலைக்கோரல் ஆவணங்களுக்காக மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணமாக 1000.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனத்தின் வழங்கல் பிரிவில் கிடைக்கப்பெறும் கேள்வி ஆவணங்களிலேயே கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் 2022 ஜனவரி 05ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை அலுவலக நேரங்களில் வழங்கப்படும். 2022 ஜனவரி 06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதே நாளில் பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும். விலைக்கோரல்களை 2022 ஜனவரி 06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-10, இல. 335, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தலைவர் - கேள்விச் சபை,
வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனம்,
335(90), டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 011-4380283 / 0114380281

புத்தளம் இஸ்லாஹிய்யாவில் விழிப்பூட்டல் செயலமர்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியில் 2022 / 2023 ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதர உயர் தரம் பரீட்சை எழுத இருக்கின்ற மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கான விசேட தெளிவுபடுத்தும் நிகழ்வொன்று ஞாயிற்றுக்கிழமை (12) காலை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.முனீர் தலைமையில் நடைபெற்றது.

க.பொ.த. உ/த பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் எதிர்கால பல்கலைக்கழக பிரவேசம், கல்வியியற் கல்லூரிகளுக்கு தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பங்கள், அதற்கான பாடநெறிகளை தெரிவு செய்யும் முறைமைகள் தொடர்பாக தெளிவான விளக்கங்கள் இங்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறப்பு வளவாளர்களாக புத்தளம் பாத்திமா தேசிய கல்லூரியின் அதிபர் ரஜிய்யா சபீயுத்தீன் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் துறை உயர்நிலை விரிவுரையாளர் கலாநிதி ராஹிலா ஆகியோர் கலந்து கொண்டு தெளிவுகளை வழங்கினர்.

ஹெரோயினுடன் பெண் உட்பட இருவர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

சுமார் 43 இலட்சத்திற்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த ஹெரோயின் போதைப்பொருளினை கொழும்பு பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு கடத்திவந்த பெண் சந்தேக நபர் உட்பட இருவரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிடைத்த தகவலொன்றுக்கமைய அநுராதபுரம் சிராவஸ்திபுர பகுதியில் (14) சுற்றிவளைப்பு நடைபெற்றது.

பெறுகை அறிவித்தல்

மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் 2021ஆம் ஆண்டிற்காக கட்டிட நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தலுக்காக ஒப்பந்தக்காரர்களை நியமித்துக் கொள்வதற்கு மற்றும் மருத்துவ உபரகணங்களை கொள்வனவு செய்வதுடன் சம்பந்தப்பட்ட விளம்பரத்தின் 2021.12.24ம் திகதி பி.ப. 2.00 வரை கேள்வி கோரலை திருத்துதல்.

2021.11.27 தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகளின் பெறுகை அறிவித்தல் மாவட்ட பொது வைத்தியசாலை பொலன்னறுவை என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலுடன் சம்பந்தப்பட்ட கேள்வி கோரல் 2021.12.24 பி.ப. 2.00 வரை நீடிக்கப்படுகின்றது.

01. பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் தொ.பே. இல. 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு-362) இடம் கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன் பெறுகை ஆவணங்களை 2021.12.23 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மாத்திரம் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகை மற்றும் செலவுகள் முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

02. பெறுகை ஆவணங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். அத்துடன் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விகள் 'தலைவர், பிரதேச பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை' என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம். அல்லது பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள குறித்த உருப்படியின் பெயர் குறிப்பிட்ட பெறுகைப் பெட்டியில் உள்ளிட்டு 2021.12.24 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் (அன்றே பி.ப. 2.00 இற்கு) பெலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள மைத்திரிபால சிரிசேன கேட்போர் கூடத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

03. ஏனைய சகல கேள்வி நிபந்தனைகளும் 2021.11.27 தினமின, டெய்லி நியூஸ், தினகரன் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

04. இப் பெறுகை சம்பந்தமாக வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை பொலன்னறுவை.
2021.12.16

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக்கப்பட்டுள்ளது)	முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்
CMS/LP/21/PT/10/061	05 Nos. Radiators for Cummins QSX – 15 Engine	25,000.00	1,000.00	11-01-2022 பி.ப. 1.30 மணி

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2021 டிசம்பர் 17ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,
கொழும்பு-01.

தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இல. : 2381652, 2370443

கேள்வி அறிவித்தல்

அக்குரஸ்ஸ பிரதேச சபையின் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களின் விளைச்சலை குத்தகைக்கு விடல், சேவைகளை வழங்குதல் மற்றும் வரி அறவிட்டுக்கொள்ளும் உரிமையை 2022 ஆண்டிற்காக (2022.01.01 - 2022.12.31) குத்தகைக்கு வழங்கும் முகமாக 02 பிரதிகளுடனான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2021.12.15 முதல் 2021.12.31ம் திகதி முற்பகல் 10.00 வரை என்னால் ஏற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த விடயம் சம்பந்தமாக கேள்விகளைச் சமர்ப்பித்தல் என்று குறிப்பிடுங்கள் இக் கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அதற்காக இவ் அலுவலகத்தில் பொறியிடப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இக் கேள்விப்படிவங்கள் விநியோகிக்கப்படுவது 2021.12.31 மு.ப. 9.00 வரை மட்டுமே, கேள்விப்படிவங்களை அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2021.12.31 மு.ப. 10.00 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறும். கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வருகின்ற சகலரும் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது அவ்வாறான அங்கீகரிக்கக்கூடிய சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறுபவர்களுக்கு கேள்விப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. கேள்வி நிபந்தனைகள் ஒன்று அல்லது பலவற்றை மீறியுள்ள கேள்விதாரர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமர்ப்பிக்கப்படாத கேள்வி விண்ணப்பங்களிற்கு கேள்விப் பிணை வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது அத்துடன், வெற்று கேள்வி விண்ணப்பத்தை 2021.12.31ம் திகதி மு.ப. 9.00 இற்கு முன் அலுவலகத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்து குறித்த கேள்வி பிணைவைப்பு தொகையை மீள பெற்றுக்கொள்ளலாம். கேள்வி சம்பந்தமான நிபந்தனைகள் மற்றும் சகல விபரங்களையும் தொ.பே. இலக்கம் 041-2283275 மூலம் வருமானப் பிரிவை அழைத்து அல்லது நேரில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர் இல.	சொத்து விபரம்	குறைந்தபட்ச கேள்வி	கேள்விப் பிணை வைப்புத் தொகை	கேள்விப்படிவத் தொகை (ரூபா)
01	அக்குரஸ்ஸ பஸ் நிலைய பொது மலசலகூடம்	1105550.00	5,000.00	500.00
02	அக்குரஸ்ஸ வெளிச் சந்தை	1300000.00	5,000.00	500.00

முனிதாஸ கமகே
தலைவர்,
அக்குரஸ்ஸ பிரதேச சபை,
2021.12.13ம் திகதி
அக்குரஸ்ஸ பிரதேச சபை அலுவலகத்தில்

மக்கள் வங்கி
கடுபெத்த கிளை

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 29ஈ (29D) பிரிவின் கீழ், 2021.10.29 ஆம் திகதி நடைபெற்ற மக்கள் வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மக்கள் வங்கி சார்பில், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசும் மற்றும் சட்டத்தரணியுமான திருமதி எல்.எம்.நாரங்கொட அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.07.17ஆம் திகதியிடப்பட்ட 6393ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசும் மற்றும் சட்டத்தரணியுமான திருமதி.எல்.எம்.நாரங்கொட அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020.06.18 ஆம் திகதியிடப்பட்ட 7009ம் இலக்கத்தையுடைய ஈட்டு முறி என்பவற்றின் மீது வருமதியான கொடுப்பனவில் இல. 98, கவ்டான வீதி, தெஹிவளை என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் மற்றும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரிய முறையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்டதும் பதிவிலக்கம் பீவி 4408 ஐக் கொண்டதுமான (கடன்பெறுநர்) நிறுவனமான அருண பில்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் தவணை தவறியுள்ளதனால், மேலும் சொல்லப்பட்ட அருண பில்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவு என்பவற்றுக்கான அதன இறைமை உரிமை உரித்து மற்றும் அக்கறை என்பவற்றை மேலே சொல்லப்பட்ட 6393 மற்றும் 7009ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளின் கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு

சொல்லப்பட்ட ஈட்டு முறிகள் மீது பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது ரூபாய் நாற்பத்தாறு சதம் (ரூ.1,998,839.46) தொகை, ரூபாய் பதினேழு இலட்சத்து இருபத்திரண்டாயிரம் (ரூ.1,722,000.00) தொகை, ரூபாய் பதினேழு இலட்சம் (ரூ.1,700,000.00) தொகை, ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் (ரூ.260,000.00) தொகை மற்றும் ரூபாய் பத்து இலட்சம் (ரூ.1,000,000.00) தொகை என்பன மக்கள் வங்கிக்கு வருமதியாக இருக்கின்றது.

பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது ரூபாய் நாற்பத்தாறு சதம் (ரூ.1,998,839.46) தொகையையும் மற்றும் பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்பது ரூபாய் நாற்பத்தாறு சதம் (ரூ. 1,998,839.46) தொகை மீது 2020.11.01ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வருடத்திற்கு 19.5% சதவீதத்தில் மேலதிக வட்டியையும், ரூபாய் பதினேழு இலட்சத்து இருபத்திரண்டாயிரம் (ரூ.1,722,000.00) தொகையும் மற்றும் ரூபாய் பதினேழு இலட்சத்து இருபத்திரண்டாயிரம் (ரூ. 1,722,000.00) தொகை மீது. 2020.10.21ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வருடத்திற்கு 19.5% சதவீதத்தில் மேலதிக வட்டியையும், ரூபாய் பதினேழு இலட்சம் (ரூ.1,700,000.00) தொகையையும் மற்றும் ரூபாய் பதினேழு இலட்சம் (ரூ.1,700,000.00) தொகை மீது 2020.12.21ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வருடத்திற்கு 19.5% சதவீதத்தில் மேலதிக வட்டியையும், ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் (ரூ.260,000.00) தொகையையும் மற்றும் ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் (ரூ. 260,000.00) தொகை மீது 2020.12.21ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வருடத்திற்கு 19.5% சதவீதத்தில் மேலதிக வட்டியையும், ரூபாய் பத்து இலட்சம் (ரூ.1,000,000.00) தொகையையும் மற்றும் ரூபாய் பத்து இலட்சம் (ரூ.1,000,000.00) தொகை மீது 2020.12.20ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வருடத்திற்கு 8.0% சதவீதத்தில் மேலதிக வட்டியையும் . மற்றும் விற்பனைக் கிரயம் மற்றும் மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29L இன் கீழ் மீட்டுக் கொள்ளப்படக்கூடிய சகல தொகைகளையும், கொடுப்பனவுகள் (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து, மீட்டுக் கொள்வதற்காக கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் திரு. ஏர்வின் பெரேரா அவர்களினால் சொல்லப்பட்ட 6393 மற்றும் 7009 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் மற்றும் வளவுகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினால் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

ஈடு வைக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளின் விபரம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை, பள்ளே பற்று, தெஹிவளை-கல்கிஸ்ஸ மாநகர சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குள், கவ்டான கிராம சேவகர் பிரிவில், கவ்டான என்ற இடத்தில் அமைந்துள்ள "தெல்கஹவத்த" என அழைக்கப்படுகின்ற காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.ஏ.டப்லியூ.பெரேரா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2011.06.13ஆம் திகதியுடைய 1049ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட காணிக்கு எல்லைகள் பின்வருமாறு: வடக்கே: வரிமதிப்பீட்டிலக்கம் 96ஐக் கொண்ட வளவு, கவ்டான வீதி மற்றும் துண்டம் 2, கிழக்கே: துண்டங்கள் 02, 03 மற்றும் தனியார் வீதி, தெற்கு: தனியார் வீதி மற்றும் வரிமதிப்பீட்டிலக்கம் 96/5ஐக் கொண்ட வளவு, கவ்டான வீதி மற்றும் மேற்கே: வரி மதிப்பீட்டிலக்கம் 96/5 மற்றும் 96ஐக் கொண்ட வளவுகள். கவ்டான வீதி அத்தோடு சொல்லப்பட்ட 1049ஆம் இலக்க வரைபடத்திற்கு எற்ப இதன் விஸ்தீரணம் பதிமூன்று தசம் ஒன்று ஆறு பர்ச்கள் (ஏ.0, றூ:- பே:13.16) மற்றும் இதனகத்தேயுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் இதனுடன் இணைந்த சகல உடமைகளையும் கொண்டு தெல்கந்த நுகேகொட காணிப் பதிவகத்தில் F232/113 பிரிவு/இருமடி இலக்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

கீழே குறிப்பிடப்பட்ட காணியானது பின்வரும் காணியிலிருந்து பிரித்தொதுக்கப்பட்ட ஒரு பாகமாகும்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை, பள்ளே பற்று, தெஹிவளை-கல்கிஸ்ஸ மாநகர சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குள், கவ்டான கிராம சேவகர் பிரிவில், கவ்டான வீதியில், கவ்டான என்ற இடத்தில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 98ஐக் கொண்ட வளவின் பாகமாக இருக்கின்ற "தெல்கஹவத்த" என அழைக்கப்படுகின்ற காணியின் உத்தரவு. பெற்ற நில அளவையாளர் எஸ்.எச்.பீ.கோட்டேகொட அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1979.12.20ஆம் திகதியுடைய 840ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட காணிக்கு எல்லைகள் பின்வருமாறு: வடக்கே: வரிமதிப்பீட்டிலக்கம் 96ஐக் கொண்ட வளவு, கவ்டான வீதி கிழக்கே: துண்டங்கள் 02 மற்றும் 03, தெற்கு: தனியார் வீதி மற்றும் மேற்கே: வரி மதிப்பீட்டிலக்கம் 96/5ஐக் கொண்ட வளவு, கவ்டான வீதி அத்தோடு சொல்லப்பட்ட 840ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப இதன் விஸ்தீரணம் இருபது தசம் மூன்று பர்ச்கள் (ஏ:0, றூ :0- பே:20.3) மற்றும் இதனகத்தேயுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் இதனுடன் இணைந்த சகல உடமைகளையும் உள்ளடக்கியது.

பின்வரும் காணித்துண்டத்தின் மேலாலும் மற்றும் அதன் வழியேயுமான பாதை உரிமையையும் உள்ளடக்கியது.

மேலே சொல்லப்பட்டவாறு கவ்டான வீதியில், கவ்டான என்ற இடத்தில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 98ஐக் கொண்ட வளவின் பாகமாக இருக்கின்ற "தெல்கஹவத்த" என அழைக்கப்படுகின்ற காணியின் 840ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு (10 அடி அகலப் பாதைக்கான ஒதுக்கம்) துண்டம் 3 என அடையாளமிடப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட துண்டம் 3 பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது: வடக்கே: துண்டம் 2, கிழக்கே: கவ்டான வீதி தெற்கே: தனியார் வீதி மற்றும் மேற்கே: துண்டம் 1 சொல்லப்பட்ட 840ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப இதன் விஸ்தீரணம் மூன்று தசம் ஒன்று பர்ச்கள் (ஏ:0, றூ :0- பே:3.1) மற்றும் தெல்கந்த/நுகேகொட காணிப் பதிவகத்தில் F232/114 பிரிவு/இருமடி இலக்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி
கையொப்பமிடப்பட்டது
பிராந்திய முகாமையாளர்
(கொழும்பு வெளிப்பிராந்தியம்)

மக்கள் வங்கி
பிராந்திய தலைமைக் காரியாலயம்
கொழும்பு வெளிப்பிராந்தியம்
இல:177A, ஹைலெவல் வீதி, நுகேகொட

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

வாகனங்கள் விற்பனைக்கு

வாகன இல.	வகை	மாதிரி	வருடம்
கார்			
18 -3XXX	TOYOTA	AT170	1989
GE -7XXX	MAZDA	323	2000
வேன்			
52 -0XXX	ISUZU	FARGO	1985
GJ -8XXX	TOYOTA	TOWNACE CR41	1997
PF -0XXX	TOYOTA	HIACE KDH220K	2005
பஸ்			
HZ -5XXX	TATA	LP1510	2004
NA -6XXX	TATA	LP01512TC	2007
NC -6XXX	TATA	MARCOPOLO LP407	2016
லொறி			
PQ -4XXX	TATA	ACE	2011
முச்சக்கர வண்டிகள்			
QK -1XXX	BAJAJ	AUTO AR4S	2007
QR -2XXX	BAJAJ	AUTO AR4S	2008
YK -2XXX	BAJAJ	RE 205	2011
AAF -3XXX	BAJAJ	RE 205	2012
AAD -5XXX	BAJAJ	RE205	2012
அகழ்வாராய்ச்சி இயந்திரம்			
UR	HITACHI	ZX225USR	2010

வாகன பரிசீலித்தல்களுக்கு:
மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 டிசம்பர் 17,ஆம், 20,ஆம், 21,ஆம் மற்றும் 22,ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2021 டிசம்பர் 22,ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

www.skillsads.com

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

நொத்தாரிஸ் தேர்வுக்கான இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பம் செய்தமை தொடர்பான அறிவித்தல்

வேயங்கொட, தல்கஸ்மொடே, இலக்கம் 128/D என்னும் விலாசத்தில் வசிக்கும் வட்டே பதிரன்னெஹெலாகே நேரஞ்சி நிலங்கா பிரேமசந்திர எனப்படும் நான், கம்பஹா மாவட்டத்தினுள் சிங்கள மொழியினூடாகப் பணியாற்றும் பிரசித்த நொத்தாரிஸ் ஒருவராக நுழைவதற்காக, 107 ம் இலக்க நொத்தாரிஸ் கட்டளையியற் சட்டத்தின் 7வது பிரிவிற்கமைய இன்று தொடக்கம் ஒரு மாத காலத்திற்குப் பின் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, பதிவாளர் நாயகம் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருப்பதாக அனைவருக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

உறுதியளிக்கும் நொத்தாரிஸ் எழுதுவினைஞர்

டப்ளியு.பி என்.என்.பிரேமசந்திர
இலக்கம் 128/D, **தல்கஸ்மொடே, வேயங்கொட.**
17.12.2021

நொத்தாரிஸ் தேர்வுக்கான இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பம் செய்தமை தொடர்பான அறிவித்தல்

வெயாங்கொட, மாரப்பொல, இலக்கம் 34, என்னும் விலாசத்தில் வசிக்கும் தியுநுவன் சேனாதீர எனப்படும் நான் கம்பஹா மாவட்டத்தினுள் சிங்கள மொழியினூடாகப் பணியாற்றும் பிரசித்த நொத்தாரிஸ் ஒருவராக நுழைவதற்காக, 107 ம் இலக்க நொத்தாரிஸ் கட்டளையியற் சட்டத்தின் 7வது பிரிவிற்கமைய இன்று தொடக்கம் ஒரு மாத காலத்திற்குப் பின் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, பதிவாளர் நாயகம் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருப்பதாக அனைவருக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

உறுதியளிக்கும் நொத்தாரிஸ் எழுதுவினைஞர்

டீ. சேனாதீர, 34, மாரப்பொல,
வேயாங்கொட.
17.12.2021

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து அமைச்சு / இலங்கை புகையிரத சேவை

புகையிரத வினைத்திறனை மேம்படுத்தும் செயற்றிட்டம்
வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கான விலைக்கோரல்

கேள்வி ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்:
2021 டிசம்பர் 24 (இலங்கை நேரம் பி.ப. 2.00 மணி)

1. போக்குவரத்து அமைச்சின் கீழுள்ள கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் வகையில் 2022 ஜனவரி மாதம் முதல் 2024 ஜனவரி மாதம் வரையில் வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வாகனத்தின் வகை	வாகன எண்ணிக்கை	உற்பத்தி வருடம்
இரட்டை நோக்க வேன் (Dual-Purpose AC)	01	2014ஆம் வருடம் அல்லது அதற்குப் பின்
கார்	01	2014ஆம் வருடம் அல்லது அதற்குப் பின்

2. உத்தேச ஒப்பந்தக் காலம் 02 வருடங்களாகும்.
3. கேள்வி நடைமுறையானது விலை மேற்கோள் முறையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும்.
4. விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுள்ள தனி வியாபார உரிமையாளர்கள் அல்லது வியாபார நிறுவனங்கள் இயைபுடைய கேள்விப் படிவங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா வைப்புத் தொகையொன்றைச் செலுத்தி கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்ட அலுவலகத்திலிருந்து 2021 டிசம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைகளைச் சமர்ப்பிக்கும் கேள்வியானது 90 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவத்தைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் 2022-2024" எனக் குறிப்பிட்டு பெறுகைக் குழுத் தலைவர், கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம், போக்குவரத்து அமைச்சு, இல. 217, கொட்டா வீதி, கொழும்பு-08 எனும் முகவரிக்கு 2021 டிசம்பர் மாதம் 24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து இந்நிகழ்வில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு (கீழ்நிலை),
கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம், போக்குவரத்து அமைச்சு,
இல. 217, கொட்டா வீதி, கொழும்பு-08.
தொலைபேசி: 011-2674354, 076-3935029
2021.12.17

விலைமனுக்களுக்கான அழைப்பு

கல்வி அமைச்சு

தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி திட்டம்

மஹரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவனத்திலுள்ள தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கு இயந்திராதி மற்றும் உபகரணங்களின் பெறுகை

1. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு மஹரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கு இயந்திராதி மற்றும் உபகரணங்களின் பெறுகைக்காக (வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் பயிற்சியளித்தல் ஆகியன) கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பில் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன. விலைமனுதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட விலைமனுக்களையும் ஒன்றிற்கு மேற்பட்ட லொட்களையும் சமர்ப்பிக்கலாம். கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொ. இல.	விலைமனு விளக்கம் மற்றும் குறிப்பீட்டு இலக்கம்	லொட்	விலைமனுப் பிணை	மீளளிக்கப் படாத கட்டணம்	விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான திகதி மற்றும் நேரம்	ஏற்றுக் கொள்ளும் கடிதத் திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒப்படைப்புக் காலப்பகுதிகள்
01.	தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழுள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்காக கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களின் பெறுகை (விலைமனு இல. ED/TEDP/PRO/01/2021/G-11)	A	75,000 ரூபா	5,000 ரூபா	2022 சனவரி 7ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக	12-14 வாரங்கள்
		B	50,000 ரூபா			
		C	15,000 ரூபா			
		D	20,000 ரூபா			
		E	20,000 ரூபா			
02.	தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழுள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்காக பௌதீகவியல் இயந்திராதி மற்றும் உபகரணங்களின் பெறுகை (விலைமனு இல. ED/TEDP/PRO/01/2021/G-13)	A	15,000 ரூபா	5,000 ரூபா	2022 சனவரி 7ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக	10-12 வாரங்கள்
		B	20,000 ரூபா			
		C	20,000 ரூபா			
03.	தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழுள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்காக பண்ணை இயந்திராதிகளின் பெறுகை (விலைமனு இல. ED/TEDP/PRO/01/2021/G-14)	A	30,000 ரூபா	5,000 ரூபா	2022 சனவரி 7ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக	10-12 வாரங்கள்
		B	5,000 ரூபா			
		C	65,000 ரூபா			

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, ''இசுருபாய", 5 ஆம் மாடியின் கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவிலிருந்து (தொலைபேசி: 011-2785573) பெற்று, 2022 சனவரி 06 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. 2022 சனவரி 06 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. ஒவ்வொரு விலைமனுவும் தனித்தனியான தபாலுறையொன்றில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, ''இசுறுபாய", 5 ஆம் மாடியின் கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு,
''இசுறுபாய",
பத்தரமுல்ல.

புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான

ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள்.
★ சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோடு மாத்திரம் இடுக.
★ செய்கை வேலைக்காக தாள் ஒன்றைப் பயன்படுத்துங்கள்.

1) ஒரு மீற்றர் சட்டைத்துணியின் விலை 120.00 எனின் $2\frac{1}{2}$ m சட்டைத் துணியின் விலை யாது?
(1) 240.00 (2) 300.00 (3) 280.00

2) பி.ப. 2.45 மணியை சரியாகக் காட்டும் டிஜிட்டல் கடிகாரம் யாது?
(1) 2.45 (2) 02.45 (3) 14.45

3) உருவில் நிழற்றப்பட்ட பகுதி யாது?



(1) 1/5 (2) 1/6 (3) 1/8

4) குழாய் ஒன்றின் நீளம் 8m ஆகும். இதிலிருந்து 2m 75cm நீளமான துண்டு வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சிய குழாயின் நீளம் யாது?
(1) 6m (2) 5m 25cm (3) 6m 75cm

5) 7, 2, 4, 3 கட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகப்பெரிய ஒற்றை எண் யாது?
(1) 7432 (2) 7243 (3) 7423

6) மணிக்கு 40km மாறா வேகத்தில் செல்லும் மோட்டார் சைக்கிள் ஒன்று 100km தூரம் செல்ல எடுக்கும் நேரம் யாது?
(1) 2 மணித்தியாலம் (2) 2 மணி 30 நிமிடம் (3) 2 மணி 15 நிமிடம்

7) என்னிடமும் தம்பியிடமும் உள்ள பணத்தின் கூட்டுத்தொகை 124 ரூபா ஆகும். என்னை விட தம்பியிடம் 32 ரூபா குறைவாக உள்ளது எனின் என்னிடம் உள்ள பணத்தொகை யாது?
(1) 78 ரூபா (2) 46 ரூபா (3) 63 ரூபா

8) 6 மனிதர்கள் 6 நாட்களில் செய்யக்கூடிய வேலையை 9 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
(1) 4 நாட்கள் (2) 6 நாட்கள் (3) 9 நாட்கள்

9) 6 பசுக்கள் 6 சாக்குப்புல்லை 6 நாட்களில் தின்று முடிக்கும் எனின் ஒரு பசு ஒரு சாக்குப் புல்லை தின்று முடிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?
(1) 1 நாள் (2) 6 நாட்கள் (3) 9 நாட்கள்

10) 5 நண்பர்கள் தீபாவளி வாழ்த்துக்களை தமது நண்பர்களிடையே மாறி மாறி அனுப்பி மகிழ்ந்தனர் எனின் அனுப்பப்பட்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 20 (2) 25 (3) 30

11)



உருவின் சுற்றளவு 30cm எனின் A, B யின் நீளம் யாது?
(1) 8cm (2) 5cm (3) 10cm

12)
```
  3 2 5
+ 3 □ 6
-------
  □ 7 1
```
வெற்றுக்கட்டங்களுக்கு வரவேண்டிய இலக்கங்கள் எவை?
(1) 5, 6 (2) 4, 6 (3) 6, 7

13) சதுர வடிவக்காணி ஒன்றை சுற்றிவரத்தூண்கள் சமதூர இடைவெளியில் நடப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் இருந்து பார்க்கும் போது 10 தூண்கள் தெரிகின்றன எனின் நடப்பட்ட மொத்த தூண்களின் எண்ணிக்கை யாது?
(1) 40 (2) 36 (3) 38

14) 5 முட்டைகள் வாங்கும் பணத்துக்கு 500g உழுந்து வாங்கலாம். 1kg உழுந்தின் விலை 180.00 எனின் முட்டை ஒன்றின் விலை யாது?
(1) 17.50 (2) 20.00 (3) 18.00

15) சதுரம் ஒன்றின் பரப்பவு 36 சதுர சென்றிமீற்றர் எனின் சதுரத்தின் சுற்றளவு யாது?
(1) 36cm (2) 24cm (3) 12cm

16) ராகவன் வரிசை ஒன்றில் முன்னாலிருந்து ஆறாவதாகவும் பின்னாலிருந்து எட்டாவதாகவும் நிற்கிறான் எனின் வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 14 (2) 15 (3) 13

17) அதிகளவு சமச்சீரைக் கொண்டுள்ள தளவடிவம் எது?

(1) 
(2) 
(3) 

18) 2m உயரமும் 2m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 2l வர்ணம் தேவை. 4m உயரமும் 4m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூச எத்தனை லீற்றர் வர்ணம் தேவை?
(1) 2 l (2) 4 l (3) 8 l

19) 

ஒரு பக்க நீளம் 2cm அளவுடைய இச்சதுரத்தை ஒருபக்க நீளம் 8cm அளவுடைய சதுரம் ஒன்றாக மாற்றுவதற்கு இன்னும் எத்தனை 2cm அளவுடைய சதுர அட்டைகளை ஒட்ட வேண்டும்?
(1) 15 (2) 11 (3) 8

20) ஒரு மோட்டார் சைக்கிள் 10 நிமிடத்தில் 5km தூரம் பயணம் செய்யும் எனின் மாறாவேகத்தில் 1 மணித்தியாலத்தில் வாகனம் பயணம் செய்யும் மொத்த தூரம் யாது?
(1) 25km (2) 50km (3) 30km

21) வந்தான், ஓடின, நீந்தும் போன்ற சொற்கள்
(1) பெயர்ச்சொற்கள் (2) வினைச்சொற்கள் (3) இணைமொழிச்சொற்கள்

22) ஏழை மாணவர்களுக்கு அரசு புலமைப் பரிசில் வழங்கி கைதூக்கிவிட்டது. கைதூக்கிவிட்டது என்பது யாது?
(1) கையைக்கொடுத்து தூக்குதல் (2) பணம் கொடுத்தல்
(3) மேலும் கற்பதற்கு வசதி அளித்தல்

23) இயல் இசை நாடகம் என்பவற்றை குறிக்கும் தனிச்சொல் எது?
(1) மும்மொழி (2) முத்தமிழ் (3) முக்கனி

24) பாரி முல்லைக்கு தேர்கொடுத்த நிகழ்வை குறிக்கக்கூடிய மேற்கோள் எது?
(1) சீரைத்தேடின் ஏரைத் தேடு (2) ஐயம்இட்டுஉண்
(3) முயற்சிதிருவினையாக்கும்

25) மாணவர் மன்றக்கூட்டம் அடுத்த மாதம் 1ஆம் திகதி நடைபெறும். இது ஒரு
(1) அறிவித்தல் (2) அறிவுறுத்தல் (3) விளம்பரம்

26) கிளிகள் வானில் பறந்தன. இதில் உள்ள எழுவாய் சொல் எது?
(1) கிளிகள் (2) வானில் (3) பறந்தன

27) அஃறிணை, பன்மை, நிகழ்கால, வினைச்சொல் எது?
(1) மேய்கின்றது (2) ஓடின (3) நீந்துகின்றன

28) பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொல் எது?
(1) மலை (2) பார் (3) தரை

29) அழகிய, உயர்ந்த, நீண்ட போன்ற சொற்கள்
(1) இணைமொழிகள் (2) அடைமொழிகள் (3) பெயர்ச்சொற்கள்

30) இருதிணை பொதுப்பாற்சொல்லை தெரிவுசெய்க.
(1) சாரதி (2) உழவன் (3) பாடகன்

31) ஐம்பதுக்கு பொன்விழா போன்று எண்பதுக்கு
(1) மணிவிழா (2) பவளவிழா (3) அமுதவிழா

32) மலை குறிஞ்சி போன்று வயல்
(1) முல்லை (2) நெய்தல் (3) மருதம்

33) அறிஞர் அவை போன்று புகையிலை
(1) சிப்பம் (2) கட்டு (3) கற்றை

34) குரங்கின் ஆண் கடுவன் போன்று யானையின் ஆண்
(1) கடுவன் (2) போத்து (3) களிறு

35) குதிரை கனைக்கும் என்பது போல் எருது
(1) கத்தும் (2) எக்காளமிடும் (3) உறுமும்

36)
இவ்வானிலை குறியீடு குறிப்பது
w
(1) கடும்மழை (2) தூறல்மழை
(3) இடியுடன் கூடிய மழை

37) ஈமெயில் (email) என்பதன் தமிழ் வடிவம் எது?
(1) தொலைநகல் (2) மின்னஞ்சல் (3) வெப்தளம்

38) கதிர்காம நகருக்கு அருகில் ஓடும் நதி எது?
(1) களுகங்கை (2) கல்லோயா (3) மாணிக்ககங்கை

39) இக்குறியீடு குறிப்பது
(1) இலங்கை அஞ்சல் (2) இலங்கை மின்சார சபை
(3) ரூபவாஹினி கூடுத்தாபனம்

(18ஆம் பக்கம் பார்க்க)

புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான

ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

(17 ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

40) இலங்கையின் தேசியக் கொடியில் வாள் ஏந்திய சிங்கம் உணர்த்துவது எது?
(1) வீரம் (2) தேசிய ஒற்றுமை (3) சமாதானம்

41) பொருளாதார நன்மை தரும் பிராணி அல்லாதது எது?
(1) தேனீ (2) காகம் (3) கோழி

42) விசர்நாய்க்கடி நோயை பரப்பும் பிராணி அல்லாதது எது?
(1) பூனை (2) நாய் (3) எலி

43) பயிர்களை சேதப்படுத்தும் நத்தைகளை உண்ணும் பிராணி எது?
(1) பருந்து (2) எலி (3) செண்பகம்

44) காற்று வீசும் திசையை அறிய உதவுவது எது?
(1) காற்றுத்திசைகாட்டி (2) திசைகாட்டி (3) காற்றுவேகமானி

45) தேசப்படத்தில் மேட்டுநிலங்களை குறிக்கப் பயன்படும் வர்ணம் எது?
(1) கபிலம் (2) சிவப்பு (3) பச்சை

46) வானவில்லில் உள்ள நிறம் அல்லாதது எது?
(1) கருநீலம் (2) செம்மஞ்சள் (3) வெள்ளை

47) ஆறு கடலுடன் கலக்கும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?
(1) கழிமுகம் (2) நீரிணை (3) நீர்வீழ்ச்சி

48) ஒளித்தொகுப்பின் போது தாவரங்கள் உள்ளெடுக்கும் வாயு எது?
(1) காபனீரொட்சைட் (2) ஒக்சிசன் (3) நைதரசன்

49) இலைகளில் இருந்து வேர்கள் உருவாகும் தாவரம் எது?
(1) வாழை (2) நாகதாளி (3) பெகோனியா

50) தண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகளை பெறமுடியாத தாவரம் எது?
(1) குரோட்டன் (2) பாகல் (3) மரவள்ளி

51) தங்கத்தின் நிறையை அளவிட பயன்படுத்தப்பட்ட வித்து எது?
(1) மஞ்சாடி (2) கடுகு (3) குன்றிமணி

52)



தரப்பட்ட மூன்று உருக்களும் ஒரு குறித்த ஒழுங்குமுறையில் அமைந்துள்ளன. அவ் ஒழுங்கில் அடுத்து வரும் உரு எது?

(1)



(2)



(3)

53) நாய் கடித்த ஒருவருக்கு வழங்கக்கூடிய முதலுதவி எது?
(1) நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு செல்லுதல்
(2) காயத்தை சவர்க்காரமிட்டு தூய நீரினால் கழுவுதல்
(3) காயத்தை சுற்றி துணியால் கட்டுதல்

54) இலை, சருகுகளை உக்கலடைய செய்யும் பிராணி எது?
(1) காகம் (2) பல்லி (3) கரையான்

55) இலங்கையின் தரநிர்ணய சான்று எது?
(1) ISO (2) SLS (3) IOS

56) மகரந்த சேர்க்கைக்கு உதவும் பிராணிகள் எவை?
(1) தேனீ, வண்ணத்துப்பூச்சி (2) வண்டு, மண்புழு (3) குளவி, எறும்பு

57) இயற்கையான சூரிய ஒளியில் கிடைப்பது எது?
(1) விற்றமின் A (2) விற்றமின் D (3) விற்றமின் E

58) சந்திரவட்டக்கல் ஒன்றில் காணமுடியாத விலங்கு எது?
(1) குதிரை (2) யானை (3) நாய்

59) ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 6 ஆம் திகதி கொண்டாடப்படுவது
(1) உலக தொழிலாளர் தினம் (2) சர்வதேச ஆசிரியர் தினம்
(3) சர்வதேச சிறுவர் தினம்

60)



இவ் இலட்சினை குறிப்பது

(1) காப்புறுதி கூட்டுத்தாபனம் (2) இலங்கை வங்கி
(3) பெற்றோலிய கூட்டுத்தாபனம்

உலகில் வாழும் பறவைகள்

குயில்

தீக்கோழி

கொக்கு

மீன்கொத்தி

காகம்

தேன்குருவி

மைனா

மரங்கொத்தி

சேவல்

தூக்கணாங்குருவி

கிவி

மயில்

வாத்து

பருந்து

கிளி

எதிர்ப்பொருட் சொற்கள்

★ உதித்தல்	-	மறைதல்	★ எஞ்சுதல்	-	விஞ்சுதல்	★ ஒழுக்கம்	-	இழுக்கம்
★ உருகுதல்	-	இறுகுதல்	★ எதிர்ப்பு	-	ஆதரவு	★ ஒற்றை	-	இரட்டை
★உமிழ்தல்	-	விழுங்குதல்	★எதிர்	-	நேர்	★ஒருமுகம்	-	பன்முகம்
★ உள்ளே	-	வெளியே	★ஏகம்	-	அனேகம்	★ஒளித்தல்	-	வெளிப்படல்
★ உற்சாகம்	-	சோர்வு	★ ஏராளம்	-	குறைவு	★ஓரவஞ்சனை	-	நடுநிலைமை
★ஊடல்	-	கூடல்	★ஏழை	-	செல்வந்தன்	★ ஓடு	-	நில்
★ஊர்தல்	-	விரைதல்	★ஏற்றுமதி	-	இறக்குமதி	★களங்கம்	-	நிட்களங்கம்
★ஊன்றுதல்	-	பிடுங்குதல்	★ஐயம்	-	தெளிவு	★கனவு	-	நனவு
★ஊதாரி	-	சிக்கனம்	★ஐது	-	செறிவு	★கலக்கம்	-	தெளிவு
★எளிது	-	அரிது	★ஒருமை	-	பன்மை	★கசப்பு	-	இனிப்பு
★ எழுச்சி	-	வீழ்ச்சி	★ஒற்றுமை	-	வேற்றுமை	★கதி	-	நிர்க்கதி

அன்பான மாணவர்களே...

நாளை போயா விடுமுறை தினமாகும். எனவே இவ்வினாத்தாள் செய்முறைப் பயிற்சியானது வழமை போன்று நாளை சனிக்கிழமை இலங்கை வானொலி தமிழ்ச் சேவையின் 'வானொலி ஆசான்' நிகழ்ச்சியில் ஒலிபரப்பாக மாட்டாது. எனவே நீங்கள் இவ்வினாத்தாளுக்கு சுயமாகவே விடை எழுதுங்கள். இவ்வினாத்தாளுக்கான விடைகளை எதிர்வரும் 22. 12.2012 புதன்கிழமையன்று 'புலமைக் கதிர்' பகுதியில் எதிர்பாருங்கள்.

எதிர்காலத் தலைமைகளை உருவாக்குவதில் வை.எம்.எம்.ஏ முன்னிலை வகிக்கிறது

எதிர்காலத் தலைமைகளை உருவாக்குவதற்கென வை. எம். எம். ஏ இன் செயற்பாடுகள்

தலைமைத்துவம் என்பது காத்திரமான ஆளுமைகளை பதிவு செய்தவர்களை அடையாளப்படுத்துவதாகும். மார்க்கத் தலைவர்கள் எதிர்காலத்தில் சரியான தலைமையை உருவாக்கினார்களா அல்லது அரசியல் தலைவர்கள் அரசியல் தலைமைகளை உருவாக்கினார்களா என்பதை ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும்.ஆனால் வை. எம். எம். ஏ. தன்னுடைய கடப்பாடுகளைச் சரியான முறையில் செய்துள்ளது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒரு தலைவர் இரண்டு தடவைகள் தலைவராக இருக்கலாம். ஆனாலும் அவர் அடுத்த தலைவரை உருவாக்கி விட்டுத்தான் செல்ல வேண்டும். அதுவும் வை. எம். எம். ஏ. இன் தலைமைத்துவப் பண்பானது யாப்புக்கு கட்டுப்பட்டது. அதன் பரிணாம வளர்ச்சியானது அதிகாரம் பகிர்ந்தளித்தல், விட்டுக்கொடுப்பு சேவை மனப்பாங்கு, அடுத்த தலைவரை உருவாக்குதல், புதிய தலைமைத்துவங்களுடன் ஒன்று சேர்ந்து செயற்படல் மற்றும் புதிய தலைமைகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல் தொடர்பான பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியதாகும் என்று கூறலாம்.

நேர்காணல்
இக்பால் அலி

? தற்போதைய நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்பில் உங்கள் கருத்து,..

கடந்த இரண்டு வருடங்களாக கொரோனாவால் நாடும் உலகமும் முடங்கி கிடந்தது. அந்த மனோநிலையில் இருந்து தற்போது சற்று வெளியே வந்தாலும் நூறு வீதம் ஒவ்வொரு மனிதனும் பீதியின்றி அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. குறிப்பாக சரியான முறையில் சமய கடமைகளை செய்து கொள்ள முடியவில்லை. ஒரு இக்கட்டான நிலையில் தான் புதிய சாதாரண நிலைமைக்கு நாங்கள் வந்திருக்கின்றோம். ஆனாலும் நாங்கள் கொரோனாவுடன் எப்படி வாழ்தல் என்பது பற்றி கற்றுக் கொள்ளுதல் வேண்டும். எங்களுடைய அன்றாட வாழ்க்கை முறையில் இருந்து நாங்கள் பின்நோக்கி நகர முடியாது. கொரோனா இருப்பதை விட வேகமாக பரவி வந்தாலும் தொடர்ந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.இன்று 'புதிய சாதாரண வாழ்க்கை' என்று கூறி உலகத்தில் புதிய வசனம் ஒன்று பயன்படுத்தப்படுகிறது. எனவே கால மாறுதலுக்கு ஏற்ப நாம் அதனை மறுதலிக்காமல் வாழ பழகிக் கொள்ளுதல் வேண்டும். தற்போது வேகமாக பரவிவரும் திரிபான ஒமிக்ரோனை எதிர்கொள்ளவும் நாம் தயாராகவே உள்ளோம்.

? பெரும் பேசும் பொருளாக்கப்பட்டுள்ள பாகிஸ்தானில் கொல்லப்பட்ட இலங்கையர் தொடர்பில் நீங்கள் கூற விழைதல்

இந்த ஈனச் செயலை எந்த மனிதனும் ஏற்றுக் கொள்ளமட்டான். உண்மையிலேயே எமது நாட்டுப் பிரஜை ஒருவரான பிரியந்த குமார அநியாயமாக கொலை செய்யப்பட்டது என்பது கவலை தரும் செய்தியாகும். அதற்கு முதலாவது கண்டப் பிரகடனத்தை முன் வைத்த சிவில் அமைப்புக்களில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையும் ஒன்றாகும். அந்நாட்டுப் பிரதமர் இம்ரான் கான் அதிரடியாக தலையிட்டு 48 மணித்தியாலயத்தில் 100 க்கும் மேற்பட்டவர்களை கைது செய்ததுடன் அதன் பிரதான சூத்திரதாரியையும் கைது செய்து அதற்கு எதிரான கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றியதோடு சட்ட நடவடிக்கையினையும் மேற்கொண்டார். பிரியந்த குமாரவைப் போராடி காப்பாற்ற முயற்சித்த அதான் மலிக் என்ற மனிதாபிமானிக்கு பாகிஸ்தானின் உயர் விருது கௌரவிக்கப்பட்டமை உலகின் கவனத்தைப் பெற்றது. இந்த விடயம் தொடர்பில் முழு உலகிற்கும் எடுத்துக் காட்டாக பிரதமர் இம்ரான் கான் திகழ்ந்துள்ளார். ஆனாலும் இது இலங்கைக்கு பெரும் பாதிப்பு. அவர் எந்த மதமாக இருந்தாலும் அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இலங்கையருக்கு இப்படியான சோகமான ஒரு நிலைமை வரும் போது இது போன்று நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் சவூதி அரேபிய சட்டத்தின் பிரகாரம் மரண தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட கிழக்கிலங்கை யுவதி ரிஸானா நஃபீக்கின் தண்டனை விடயத்திலும் இந்நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றுபட்டு செயற்பட்டோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

? இன்றைய முஸ்லிம் வாலிபர்கள் மத்தியில் ஒருவித குற்றவுணர்வு, விரக்தி மனப்பான்மை தலை தூக்கி வருவதை நாம் அவதானித்து வருகின்றோம். இளம் தலைமுறையினர் ஏனைய சமூகத்துடன் சேர்ந்து எவ்வாறு பயணம் செய்தல் என்று தெரியாமல் தாழ்வு மனப்பான்மையுடைவராக இருக்கின்றனர்.இது தொடர்பில் உங்கள் அபிப்பிராயம்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகம் ஒரு குற்ற உணர்வோடும் தாழ்வு மனப்பான்மையோடு வாழும் சமூகமாக இருக்கிறோம். அண்மையில் நடந்த பாகிஸ்தான் சம்பவம் கூட இன்னும் எங்களை பின்னுக்குத் தள்ளிவிடுமா என்ற ஒரு ஐயமும் இருக்கிறது. உண்மையிலேயே இது ஒரு மத ரீதியிலான தாக்குதலோ இன ரீதியிலான தாக்குதலோ அல்ல. இரு குழுக்களிடையே இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஆகும். ஆனாலும் இது தொடர்பிலும் இலங்கை பிரஜை என்ற வகையில் ஒரு குற்றவுணர்வு ஏற்படுகிறது. இந்த மன நிலையில் இருந்து நாங்கள் வெளியே வர வேண்டும். இன்றைக்கு எதிர்கால சந்ததியினர். தாழ்ந்த மனநிலையோடு இருப்பார்களாயின் ஒடுக்கப்பட்ட சமூகமாக நாங்கள மாறிவிடுவோம்.

நாங்கள் இதில் இருந்து வெளியே வரவேண்டும். ஏனைய பெரும்பான்மை சிங்கள சமூகத்தோடு நகமும் சதை போன்று பிறந்த நாள் முதல் மரணிக்கும் வரையில் பரஸ்பரம் புரிந்துணர்வு தேசிய ஐக்கியம் என்பவற்றை இந்த மண்ணில் வேரூன்ற வைத்திட வேண்டும் என்று சலிப்படையாமல் வாழத் துடிக்கும் இளம் உணர்வுகள் புரிந்து கொள்ளப்படாமல் அலட்சியம் செய்யப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தைக் கொண்டுள்ளனர். காரணம் தம் சமூகம் எந்தக் குற்றமும் செய்யாமல் அவஸ்தைப்படுவதைப் பார்த்தே. கபடமில்லாத இதய உணர்களை சரியாகப் புரிந்து கொண்டு எமது இளம் தலைமுறையினர்களையும் எதிர்கால சந்ததியினர்களையும் வழிநடத்த வேண்டிய தேவை இருக்கிறது.

> உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகம் ஒரு குற்ற உணர்வோடும் தாழ்வு மனப்பான்மையோடு வாழும் சமூகமாக இருக்கிறோம். அண்மையில் நடந்த பாகிஸ்தான் சம்பவம் கூட இன்னும் எங்களை பின்னுக்குத் தள்ளிவிடுமா என்ற ஒரு ஐயமும் இருக்கி–றது. உண்மையிலேயே இது ஒரு மத ரீதியிலான தாக்கு–தலோ இன ரீதியிலான தாக்குதலோ அல்ல. இரு குழுக்க–ளிடையே இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஆகும். ஆனாலும் இது தொடர்பிலும் இலங்கை பிரஜை என்ற வகையில் ஒரு குற்றவுணர்வு ஏற்படுகிறது. இந்த மன நிலையில் இருந்து நாங்கள் வெளியே வர வேண்டும்.இன்–றைக்கு எதிர்கால சந்ததியினர்.தாழ்ந்த மனநி–லையோடு இருப்பார்களாயின் ஒடுக்கப்பட்ட சமூகமாக நாங்கள மாறிவிடு–வோம்.

எவ்வாறாயினும் இதற்கு ஒவ்வொரு துறைசார்ந்தவர்களுடைய பொறுப்பு இருக்கிறது. எதற்கும் அச்சப்படத் தேவையில்லை. முஸ்லிம்கள் 1400 வருடங்களைக் கொண்ட சமூகம். எந்த கால கட்டத்திலும் இந்த நாட்டுக்கு எந்தவொரு துரோகமுமிழைக்காத ஒரு சமூகம். சட்டத்தை 100 வீதம் மதிக்கக் கூடிய சமூகம். இந்த நாட்டின் யுத்த வெற்றிக்காக எண்ணற்ற உயர்த் தியாகங்களைச் செய்த சமூகம். ஆனாலும் எங்களை ஒரு வர்ணக் கண்ணாடி போட்டுப் பார்க்கின்றனர். இதில் இருந்து நாங்கள் வெளியே வருவது எவ்வாறு என்பது பற்றி இளையோருக்கு பாதையை காட்ட வேண்டும்..

உண்மையிலேயே நாங்கள் 20 வருடங்களுக்கு பின்நோக்கிச் சென்று பார்த்தால் ஏனைய சமூகத்தோடு எவ்வாறு வாழ்ந்தோம். அந்த வாழ்க்கை முறைப் பின்னணியை ஏனைய காலங்களோடு ஒப்பிட்டு எவ்வாறு ஒற்றுமையாகவும் சக வாழ்வுடனும் மனிதாபிமானப் பண்புகளுடனும் வாழ்ந்தோம் என்பதை மீளாய்வு செய்ய வேண்டும்.

அதேவேளையில் எங்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் விடயத்தில் பெரும்பான்மை சமூகத்தினர்களும் எமக்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் என்கின்ற பழைய வரலாற்று அம்சங்களையும் நாம் ஆராய்ந்து நடக்க வேண்டியிருக்கிறது. சிங்கள சகோதரர்கள் எங்களின் நியாயங்களை ஏற்றுக் கொள்வதற்கு நமக்கு அவர்கள் ஒரு வலுவான சக்தியாக விளங்கியுள்ளார்கள். எனவே நாம் விழிப்பாக இருந்து நாம் நாட்டுக்காகப் பெற்றெடுத்த நல்லவைகளை இழந்து விடாமல் பாதுகாத்து முன்நோக்கிச் சொல்ல வேண்டும். இதற்கான கடுமையான முயற்சிகளை மிக ஆழமாக முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. இது நன்கு படித்த சமூத்தினுடைய பொறுப்பாகும். இது பற்றி எமது இளைய தலைமுறையினர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டிய தேவையும் கடப்பாடும் இருக்கிறது.

? இளைய தலைமுறையினர்களுக்கு விழிப்புணர்வூட்ட நீங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் குறித்தும் இது தொடர்பான ஆலோசனைகளையும் கூற முடியுமா?

இந்த இடைவெளி வருவதற்கான காரணம் என்ன.1956 க்குப் முற்பட்ட காலத்தில் ஒரு பாடசாலையில் தமிழ், முஸ்லிம், சிங்களம், கிறிஸ்தவ ஆகிய மணவர்கள் கல்வி கற்ற காலம் ஒன்று இருந்தது. ஒரு தொழிலுக்கோ அல்லது வேறு நிறுவனங்களுக்கோ சென்றாலும் எல்லோருடைய முகங்களையும் பார்த்து புன்னகையோடு கலந்துரையாடினோம். அக்காலத்தில் உதவி புரிதல் போன்ற பண்புகளில் ஒருவொருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டார்கள். இனங்களுக்கிடையே நல்ல பரஸ்பர தொடர்புகளும் நல்ல எண்ணங்களும் சிந்தித்துத் பேசுதல் போன்ற நல்ல பண்புகள் காணப்பட்டன. நாம் ஒரு இனத்தை அல்லது ஒருவரை இன மத மொழி சாதி ரீதியாகப் பார்க்காது மனிதப் பண்புகளுடன் மனிதாபிமானத்துடன் பார்க்கும் காலத்திலும் வாழ்ந்திருக்கின்றோம்.

இந்நாட்டில் வாழும் அனைவரும் ஒரே குடையின் ஒரே மனப்பான்மையுடன் வாழ்தல் வேண்டும்.ஒருவர் மற்றைய இனத்தோடு சேராது ஒதுங்கிச் செல்லல் முடியாது. இனங்களைக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் மனம் திறந்து பேசுதல் என்ற விடயத்தில் பல்லின மக்களிடையே இன நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உண்மையிலே சிங்கள மக்கள் மிகவும் நன்றியுடைவர்கள். உதவி செய்யும் மனப்பான்மை உடையவர்கள் கருணையுடையவர்கள். சிறந்த விருந்தோம்பல் பண்புடையவர்கள். அடுத்தவர்களை மதிக்கக் கூடியவர்கள். அரச உத்தியோகஸ்தர்கள் கூட மிகவும் சிறந்தவர்கள். முஸ்லிம் அரச உத்தியோகஸ்தருடன் சேர்ந்து வேலை செய்வதற்கு விருப்பம் உடையவர்கள். நாம் எல்லோரையும் தவறாகப் பார்க்க முடியாது. ஒரு சில நபர்கள் இனவாதம் பேசுவார்கள். அதற்காக எல்லோரையும் தவறாகப் பார்க்க முடியாது. தவாறாக மதிப்பிட முடியாது. ஒரு இனம் மற்றைய இனத்தின் மீதுள்ள சந்தேகங்களையும் தவறான சிந்தனை எண்ணப்பாடுகள் ஒழிக்கப்படல் வேண்டும்.

அதாவது ஒரு இனம் மற்றைய இனத்துடன் சேர்ந்து வாழும் போதும் பழகும் போதும் பேசும் போதும் கலந்துரையாடும் போதும் சந்திக்கும் போதும் தான் ஓர் இனத்தின் உள்ளுணர்வுகளையும் மனப்பான்மையினையும் நற்பண்புகளையும் நல்ல குணநெறியினையும் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. உள்ளூராட்சி மாகாண அமைச்சின் கீழ் உள்ள உள்ளூராட்சி ஆளுகை நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமை புரியும் போது நான் ஒருவர் மாத்திரம் முஸ்லிமாக இருந்த போதிலும் ஏனைய அனைத்து சக ஊழியர்களும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடன் சேர்ந்து செயலாற்றியவன் என்ற வகையில் நான் அவர்கள் எல்லோரும் நல்ல பண்புடையவர்கள் என்று கூறுவேன். இன்றும் கூட என்னுடன் தொடர்பு கொண்டு கதைக்கின்றார்கள். அந்த இடத்திற்கு நான் மீண்டும் வர வேண்டும் அவாவுடன் பேசுகின்றார்கள்.

அந்த வகையில் அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசத்தை கட்டி எழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் இரத்ததான முகாம். பொதுச் சிரதமானம் மரம் நடுகை போன்ற முன்மாதிரியான வேலைத் திட்டங்களை நாடளாவிய ரீதியில் செய்து வருகின்றோம். இவ்வேலைத் திட்டங்களின் போது பௌத்த சமயத் தலைவர்கள் முஸ்லிம் சமயத் தலைவர்கள் இந்து சமயத் தலைவர்கள் கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் அரச உயர் அதிகாரிகள் பாதுகாப்பு பிரிவினர்கள் என வரவழைக்கப்பட்டு அவர்களுடைய ஆசீர்வாதங்களுடன் முன்னெடுத்து வருகின்றோம்.இந்நாட்டிலுள்ள எல்லா சமூகத்தினரிடையே நல்லிணக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதில் பங்களிப்பை செய்து வருகின்றோம் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள அபாயகரமான ஓளடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அனுசரணையுடன் நாட்டைப் போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்கான முழு வேலைத் திட்டம் ஒன்றை மிக நீண்ட காலமாக செய்து வருகின்றோம். இதில் ஆயிரக்கணக்கான சிங்கள சகோதரர்களுடன் நேரடியாக அவர்களுடைய நெருங்கிப் பழகி போதைவஸ்துப் பாவனையில் இருந்து விடுவித்து புனர்வாழ்வளித்துள்ளோம். இதன் மூலம் சிங்கள சமூகத்திற்கு மத்தியில் ஒரு கௌரவமான பார்வை இருக்கின்றது தேசிய நல்லிணக்கம் சகவாழ்வு என்பது சமூகத்தின் அடி மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய நியதி. அதற்கான நிகழ்ச்சி நிரலை வை. எம். எம். ஏ. பேரவை வகுத்து எமது முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஒருவர் எவ்வாறு மற்றவர்களின் மனப்பாங்கினை புரிந்து கொள்வது என்கின்ற செயற்திட்டத்தின் கீழ் போதைவஸ்துப் பாவனையால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் புனர்வாழ்வு அளித்து சமூகமயப்படுத்தி வருகின்றோம். அதிகரித்து வரும் எயிட்ஸ் தொற்று நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு செயற்த் திட்டங்களையும் முன்னெடுத்துவருகின்றோம்.

> தேசிய நல்லிணக்கம் சகவாழ்வு என்பது சமூகத்தின் அடி மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய நியதி. அதற்கான நிகழ்ச்சி நிரலை வை. எம். எம். ஏ. பேரவை வகுத்து எமது முஸ்லிம் இளைஞர்கள் மத்–தியில் ஒருவர் எவ்வாறு மற்றவர்களின் மனப்பாங்கினை புரிந்து கொள்வது என்கின்ற செயற்திட்டத்தின் கீழ் போதைவஸ்துப் பாவனையால் பாதிக்கப்–பட்ட இளைஞர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் புனர்வாழ்வு அளித்து சமூகமயப்படுத்தி வருகின்றோம். அதிகரித்து வரும் எயிட்ஸ் தொற்று நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு செயற்த் திட்டங்களையும் முன்னெ–டுத்துவருகின்றோம்

இதில் பயிற்றுவிக்கும் திட்டத்தின் கீழ் பயிற்சியாளர்களை உருவாக்கி வருகின்றோம். இதில் இளைஞர்கள் இணைந்து கொள்ளலாம். அந்த வகையில் பல்லின சமூகத்திற்கு இடையிலான இணைப்பு பாலமாக எங்களுடைய போதை ஒழிப்பு செயற்திட்டம் அமைந்துள்ளது.

மேலும் ஒரு இனத்தின் கலாசார அடையாளங்களை மற்றைய இனத்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒரு இனம் மற்றைய இனத்தின் மீது மதிப்பளிக்கும் நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சிகளையே நாங்கள் தொடர்ந்து செய்து வருகின்றோம். குறிப்பாக அரசாங்கத்தினால் இலங்கையில் மீலாத் தினத்தை தேசிய மீலாத் விழாவாகப் பிரகடனப்படுத்தப்படும் காலம் முதல் இன்று வரையிலும் தேசிய மீலாத் விழா கொண்டாட்டங்களை செய்து வருகின்றோம்.

ஒவ்வொரு வருடமும் இந்நிகழ்வில் சகல சர்வ சமயத் தலைவர்களும் கலந்து கொள்வார்கள். இந்நிகழ்வு ஒவ்வொரு வருடமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவையில் நேரடியாக ஒலிபரப்பப்படும். எமது சமய கலாசார அடையாளங்களை மற்றயை சமய இனத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் முன்மாதரியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இதன் மூலம் எமது சமய நடவடிக்கைகளை விளங்கிக் கொள்வதுடன் எங்கள் மீது பற்று வைப்பதற்கும் ஒருவரை ஒருவர் சந்தித்து மனம் திறந்து பேசுவதற்கும் உண்மையான தேசிய சகவாழ்வுக்கான வேலைத் திட்டம் எமது வை. எம். எம். ஏ. பேரவையால் ஒவ்வொரு வருடமும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் மூலம் ஏனைய சமய இனத்தவர்கள் கௌரவிக்கவும், மதிக்கவும் படுகின்றனர், நாம் எமது சமய விடயங்களைப் பின்பற்றுவதோடு ஏனைய மதங்களைப் பற்றி அறிந்து இருத்தல் அவசியம். மற்றைய மதங்களை கௌரவித்தல்இ மதித்தல் சிறந்தது. அவர்களுடன் நல்ல உறவுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் . மற்றவர்களை மனிதாபிமானத்துடன் நோக்குதல் வேண்டும். எல்லாவற்றுக்கு மேலாக நாம் ' இலங்கையர்' என சிந்தித்து வாழ வேண்டும்.

? நீங்கள் இறுதியாக கூற விரும்புவது என்ன?

ஊடகம் என்பது மிகவும் பெறுமதியான சாதனமாகும். அதன் தேவைப்பாடு ஒவ்வொரு சமூகத்திற்கும் அவசியமானதொன்றாக இருக்கிறது. அதனை உருவாக்கிக் கொள்ள முஸ்லிம் சமூகத்தால் இயலாமைப் போனது என்பது தவிர்க்க முடியாதது.ஆனாலும் ஊடகம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள இயலாமைப் போனமைக்கான போக்குகளைக் கடந்தும் முஸ்லிம் சமூகம் பல்வேறு சவால்களையும் சொல்லொண்ணாத் துயரங்களையும் ஏனைய சகோதர ஊடகங்களின் வாயிலாக வெளிக்கொணர்ந்து வருகின்றனர்.

எனினும் அந்த ஊடகங்களின் மூலம் முழு நிறைவான தகவல்களையும் முஸ்லிம்களுடைய முழுமையான தேவைகளையும் நிறைவு செய்வதுதென்பது சாத்தியப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. அதனால்தான் இலங்கை முஸ்லிம்கள் சமூக வலைத்தளம் ஊடாக தங்களுடைய பதிவுகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனாலும் அது உண்மையிலே நெறிப்படுத்தப்பட்ட ஒன்றாகத் தெரியவில்லை.

இதன் மூலம் எமது முஸ்லிம் சமூகம் முற்றிலும் தோல்விகளை எதிர்நோக்கிய சமூகமாக காணப்படுகின்றது.

இருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த ஊடகவியலாளர்கள் இதன் சாதக பாதங்களை மக்களுக்கு தெளிவுபடுத்திக் கூறினார்களா என்பது கேள்விக்குரிய விடயமாகவே இருந்து வருகிறது, எமக்கென ஒரு தனியார் ஊடகம் இல்லை, எமது பிரச்சினைகளைப் பேசுவதற்காக உள்ள சமூக வலைத்தளங்களில் செய்திகளைப் பதிவிடுவதில் மிகுந்த கவனமும் நிதானமும் அவசியம் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்பகத்தன்மையான செய்திகளைப் பதிவிட வேண்டும் என்பது மிகவும் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

நாட்டின் ஒற்றுமைக்காக, 27ஆவது தடவையாகவும் நடைபெறும் கிரி விகாரை அதிஷ்டான பூஜை

பௌத்த கோட்பாட்டை அசைக்கமுடியாத அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் கலாசாரத்தை பாதுகாத்து, இலங்கையின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமையை பாதுகாப்பதற்காக கதிர்காமம் வரலாற்றுப் பிரசித்திபெற்ற கிரி விகாரை தாதுகோபுரம் முன்னிலையில் நடைபெறும் அதிஷ்டான பூஜை இருபத்தி ஏழாவது தடவையாக இம்முறையும் மகா சங்கத்தினரின் ஆசிர்வாதத்துடன் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது. மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் தேசிய அமைப்பு, வருடம் தோறும் தொடர்ந்து நடத்தி வரும் இந்த அதிஷ்டான பூஜையில் இம்முறை 2021 டிசம்பர் 4ஆம் திகதி மாலை கதிர்காம வாசனா யானை முன்னால் வர எளிமையான பெரஹராவில் கொண்டுவரப்பட்ட வஸ்திரம் கிரி விகாரைக்கு பூஜை செய்யப்பட்டது. கொவிட் தொற்று காரணமாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றி மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பக்தர்களுடன் இம்முறை இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட ராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி வரவேற்புரை நிகழ்த்தினார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்ப குமார ஆகியோருடன் ருகுணு கதிர்காம தேவாலேயவின் பஸ்நாயக்க நிலமே டில்ஷான் குணசேகர பலரும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வின் இறுதியில் உரையாற்றிய அமைச்சர் தினேஷ் குணவர்தன,..

புத்தசாசனத்தால் பாதுகாக்கப்படும் வலுவான, புதிய அரசியலமைப்பை உருவாக்க இன்றைய தினம் நாம் உறுதி கொள்ள வேண்டும்.

விகிதாசார தேர்தல் முறையை கலப்பு தேர்தல் முறையாக மாற்றுவதற்கு உறுதி எடுக்க வேண்டும். ஜனாதிபதியும் அதற்கு ஆசீர்வாதத்தை வழங்கியுள்ளார்.

அதனால் அதனை செய்வதற்கான சரியான நேரம் இதுவாகும். அதே போன்று நாட்டை தன்னிறைவாக்க பாடுபடும் அரச தலைவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அதற்கான சக்தி கிடைக்க வேண்டுமென பிரார்த்திப்போம் என கூறினார்.

துயரங்களை சுமந்து வாழும் அப்பர் கலஹா தோட்ட மக்கள்

ஒரு கழிப்பறையை மூன்று அல்லது நான்கு குடும்பங்கள் பயன்படுத்தி வரும் நிலை...

கொட்டும் மழையிலும் சுட்டெரிக்கும் வெயிலிலும் தனது உயிரையும் பொருட்படுத்தாது அட்டைக்கடிகள், குளவிக் கொட்டு , சிறுத்தை தாக்குதல் எனப் பல வலிகளையும் அச்சத்தையும் மனதில் சுமந்துக் கொண்டு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பாடுபடுபவர்கள் தான் எமது தேயிலை தோட்ட தொழிலாளர்கள்.

தேயிலைத் தோட்டத்தை நம்பியிருக்கும் ஒரு பிரதேசம்தான் கண்டி. கண்டி மாவட்டத்தில் உள்ள அப்பர் கலஹா தோட்டம் எவ்வித அடிப்படை வசதிகளையும் கொண்டிராத, நாட்டின் பொருளாதாரத்திற்கு உழைப்பவர்கள் வாழும் இடம்.

இவர்களுக்கு வீடு, நீர், போக்குவரத்து, கழிப்பறை என எவ்வித அடிப்படை வசதிகளும் கிடையாது. அப்பர் கலஹா தோட்டத்தில் வசிப்பவர்களில் பெரும்பான்மையான மக்கள் தேயிலைத் தோட்டங்களில் பணி புரிபவர்கள் ஆவர். இவர்கள் லயன் வீடுகளில் வசித்து வருகின்றனர். இங்கு நான்கு லயன் குடியிருப்பு பகுதிகள்தான் காணப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் இரண்டு சிறிய அறைகளைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளன.

இவ் அளவிலான வீடுகளில் 50 குடும்பங்களுக்கு மேல் வாழ்கின்றனர். ஒரு குடும்பத்தில் ஐந்து ஆறு உறுப்பினர்கள் உள்ள நிலையில் இத் தோட்ட மக்கள் வசித்து வருகின்றனர். மழைக்காலம் வந்துவிட்டால் வாசல்களில் மட்டுமல்ல வீட்டினுள்ளும் நீர் நிறைந்து விடும். தரமற்ற தகரக் கூரைகளினால் நீர் வீட்டிற்குள் வடியும்.

ஒவ்வொரு இடங்களிலும் பாத்திரங்கள் வைத்து நீரை ஏந்துவார்கள். உறங்குவதற்கும், அன்றாட வேலைகளை செய்வதற்கும் இந்நிலமை மிகவும் இடையூறாகவே இருக்கின்றது. இவர்களுக்கு ஏற்றவாறு கூரைகளை அமைக்கவோ, மேலதிகமான அறைகளை அமைத்துக்கொள்ளவோ எவ்வித வசதிகளும் கிடையாது.

தேயிலைத் தோட்டத்தில் கிடைக்கும் வருமானத்தைக் கொணடே தமது சீவனோபாயத்தை நடத்தி வருகின்றனர். குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு இவர்கள் எவ்வித உபதொழிலையும் செய்யாதவர்களே. கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபட்டாலும் அதற்கும் வனவிலங்குகள் இடம் கொடுப்பதில்லை. கீரிகள் கோழிகளை பிடித்துச் சென்று விடுகின்றன. அத்தோடு ஆடுகளை சிறுத்தைகள் கொண்டு சென்ற சந்தர்ப்பமும் அதிகளவில் இடம் பெற்றுள்ளன.

வாழும் வீடுகள் மட்டுமல்ல தொழில் புரியும் தேயிலை மலைகளும் இவர்களுக்கு பெரும் சவாலாகவே அமைகிறது.

தேயிலை தோட்டங்கள் காடுகளாக மாறி வருவதால் மிருகங்களின் வாழ்விடமாகிவிட்டது. தேயிலை மலைகளில் வேலை செய்பவர்களை பாம்பு தீண்டிய, குளவி கொட்டிய சந்தர்ப்பமும் இங்கு வெகுவாகவே இடம்பெற்றுள்ளது. மேலும் சிறுத்தையின் நடமாட்டமும் இத்தேயிலை

மலைகளில் அதிகமாகும். சிறுத்தைகள்,வளர்ப்பு பிராணிகளை தாக்கிய மற்றும் கடித்து கொன்ற சந்தர்ப்பங்களும் அதிகம்.

வைத்திய சேவையை பெற்றுக் கொள்வதும் இவர்களுக்கு சிக்கலே. அருகில் ஆரேக்கர் வைத்தியசாலை அமைந்திருந்தாலும் முக்கியமான சிகிச்சைகள், பரிசோதனைகள் கண்டி அல்லது பேராதனை பகுதிகளுக்கே செல்ல வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நோயுற்றவர்களை கண்டி பேராதனை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் போது நிறைய பணம் செலவாகிறது.

மழைக் காலங்களில் தரமற்ற தகரக் கூரைகளினால் வீட்டிற்குள் வெள்ளம்

நாட்டில் கொவிட் 19 மற்றும் ஓமிக்ரோன் நோய் பரவி வரும் இக்காலத்தில் இவர்கள் ஒரு கழிப்பறையை மூன்று அல்லது நான்கு குடும்பங்கள் பயன்படுத்தி வரும் நிலையும் இத்தோட்டத்தில் காணப்படுகிறது. இவை வெவ்வேறான நோய் தாக்கத்திற்கு உறுதுணையாக அமையும் என்பதில் எவ்வித அச்சமும் இல்லை.

இங்கு சமூக இடைவெளியை பின்பற்றுவது என்ற ஒரு விடயம் பயனற்று போகிறது. இயன்றளவு நாட்டின் ஏற்றுமதி பொருளாதாரத்திற்காக உழைக்கும் மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லை என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

கொரோனா அதிகமாக பரவி வரும் காலத்திலும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தமது பங்களிப்பினை வழங்கி உள்ளனர்.

ஆனால் அவர்களின் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் இல்லாது போகிறது என்பதற்கு அப்பர் கலஹா மக்களின் வாழ்வு ஒரு சான்றாகும்.

ஆர்.ரெஜினா
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
ஊடகக் கற்கைகள்

வாகரையில் ஆட்டுப்பால் சேகரிப்பின் ஊடாக பால்மா தயாரிக்கும் தொழிற்சாலை

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

கால்நடைகள் ஊடாக அனைவரும் பயன்பெறும் வகையில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் ஆட்டுப்பால் ஊடாக தயாரிக்கப்படும் பால்மா தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிற்செய்கை மேம்பாட்டு அமைச்சினூடாக கால்நடை வளர்ப்புத் திட்டத்தில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு ஆடுகள் பெற்றுக்கொடுக்கும் நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பால் உற்பத்தி கிராமங்களை அமைப்பதற்காக அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. குறிப்பாக ஏறாவூர் பற்று, கிரான், வாகரை, போரதீவுப்பற்று,

மண்முனை மேற்கு போன்ற பிரதேசங்களில் அதிகளவான கால்நடைகள் உள்ளன.

இந்தக் கால்நடைகள் ஊடாக சேகரிக்கப்படும் பாலைக் கொண்டு பால்மா உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் இதனூடாக எமது நாட்டின் பால்மா உற்பத்தி அதிகரிக்க முடியும் எனவும் கூறியுள்ளார்.

இன்று பல உலக நாடுகளில் ஆட்டுப்பால் ஊடாக தயாரிக்கப்படும் பால்மாவுக்கு கேள்வி நிலவுகின்றது. தாய்ப்பாலுக்கு நிகரான சத்து ஆட்டுப்பாலில் காணப்படுவதுடன் ஆட்டுப்பாலில் இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் மருத்துவ குணம் உள்ளது.

பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிற்செய்கை மேம்பாட்டு அமைச்சினூடாக கால்நடை வளர்ப்புத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பயனாளிகளுக்கு ஆடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆடுகள் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக பால் உற்பத்தி அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்பு சார்ந்தும் பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சரின் ஊடக இணைப்பாளர் இரா.சுரேஸ்குமார்

நகைச்சுவை எழுத்தாளர் பொன்னையா சண்முகநாதன் காலமானார்

நகைச்சுவை எழுத்தாளராக அறியப்பட்ட பொன்னையா சண்முகநாதன்(சண் அங்கிள்) நேற்று முன்தினம் காலமானார்.

இறக்கும் போது அவருக்கு 82 வயது. 12021939இல் சங்குவேலியில் பிறந்த அவர் திருமணத்தின் பின்னர் கந்தரோடையில் வாழ்ந்து வந்தார். கலைச் செல்வி பண்ணைக்கூடாக எழுத்துலகுக்குள் பிரவேசித்த அவர் சிறுகதைகளையும், நகைச்சுவைப் புதினம் மற்றும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது ஆக்கங்கள் வெள்ளரி வண்டி, இதோ ஒரு நாடகம், பெண்ணே நீ பெரியவள்தான், கொழும்புப்பெண், நினைக்க சிரிக்க சிந்திக்க, சிரிப்போம் சிந்திப்போம்,நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள் ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன.

வலிதெற்கு பிரதேச செயலகத்தின் ஞான ஏந்தல் விருது, கலா பூசணம் (2008) விருது உட்பட பல விருதுகளைப் பெற்ற அவர் உதயன் பத்திரிகையில் எழுதிய பத்தி எழுத்துக்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறந்த பத்தி எழுத்துக்கான ஊடகத்துறை விருதையும் 2004 ஆம் ஆண்டு பெற்றவராவார். தினபதி பத்திரிகையின் மானிப்பாய் நிருபராகப் பணியாற்றிய அவர் உதயன் பத்திரிகைக்கும் செய்திகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது இறுதி நிகழ்வுகள் நேற்று முற்பகல் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

பதுளை மாவட்டத்தில்

கொவிட் 19 தொற்றை கட்டுப்படுத்த விசேட தொலைபேசி இலக்கங்கள்

பதுளை தினகரன் விசேடநிருபர்

பதுளை மாவட்டத்தில் மிக வேகமாக பரவி வரும் கொவிட் 19 தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில்,

அவசர தொலைபேசி இலக்கங்களை பொதுமக்களுக்கு வழங்கியுள்ளதாக பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் ஈ.எம்.எல். உதயகுமார தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதயகுமார இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் குறித்த புகார்களை தெரிவிக்க 0553134223, 0553134224 ஆகிய அவசர இலக்கங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலக்கங்களுக்கு புகார்கள் தெரிவிப்பவர்களது பெயர், விபரங்கள் இரகசியமாக வைக்கப்படும். எக்காரணம் கொண்டும் அவர்களின் பெயர், விபரங்கள் வெளியிடப்படமாட்டாது.

நாட்டின் நலம், சமூகநலன் குறித்து, மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கொவிட் 19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு, சுகாதாரப்பிரிவினரும் பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனை மீறி செயற்படுபவர்களை மேற்குறிப்பிட்ட இலக்கங்களுக்கு அறிவிக்க முடியும். பொது இடங்கள் கடைகள், தனியார் இடங்கள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள், வேலைத்தளங்கள், பாடசாலைகள், பெருந்தோட்டங்கள் போன்ற இடங்களில் சுகாதார வழிமுறைகளை மீறுவோர் தொடர்பாக புகார் செய்யலாம்.

பதுளை மாவட்டத்தில் ஆரம்பம் முதல் இதுவரையில் (16122021) 535 பேர் கொவிட் 19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர். 33 ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தைந்து பேர் கொவிட் 19 தொற்றாளர்களாக இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில், பதுளை – 70 பேர், பண்டாரவளை – 60 பேர், எல்ல – 14 பேர், ஹல்துமுள்ளை – 23 பேர், ஹாலிஎலை – 58 பேர், ஹப்புத்தளை – 42 பேர், கந்தகெட்டிய – 07 பேர், லுணுகலை – 17 பேர், மகியங்கனை – 67 பேர், மீகாகியுல – 14 பேர், பசறை – 33 பேர். ரிதிமாலியத்தை – 15 பேர், சொரணாதொட்டை – 11 பேர், ஊவா – பரணகமை – 36 பேர், வெலிமடை – 68 பேர் என்ற வகையில் பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் மொத்தமாக 535 பேர் கொவிட் 19 தொற்றினால், சிகிச்சை பலனின்றி மரணமாகியுள்ளனர். கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 50 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டிருப்பதுடன், நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக பதுளை மாவட்ட சுகாதாரப்பணிப்பாளர் குறிப்பிட்டார்.

செம்புவத்த தோட்ட பிரதான வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

மாத்தளை மாவட்ட, எல்கடுவ செம்புவத்த தோட்டத்தின் பிரதான வீதி முழுமையாக புனர்நிர்மாணம் செய்யப்படாமல் உள்ளது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் இன்று வரையில் முழுமை பெறாமல் பிரதேச மக்கள் பல்வேறு துயரங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

செம்புவத்த தோட்டம் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தளமாக காணப்படுகின்றது.

வீதி புனரமைக்கப்படாமையால் சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளது. மக்கள் வைத்தியசாலை,தபால் நிலையம் மற்றும் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு சுமார் 5 கிலோமீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டும். பாதை புனரமைக்கப்படாமல் வாகன நெரிசல் காரணமாக பல முரண்பாடுகள் மற்றும் விபத்துகள் ஏற்படுகின்றன.

தனியார் பஸ் சேவை ஒன்று காணப்படுகின்றது. இருப்பினும் உரிய நேரத்திற்கு பஸ் சேவைகள் இடம்பெறாது.

இதனால் பாடசாலை மாணவர்கள் மழைக்காலங்களிலும் நடந்து செல்ல வேண்டிய நிலையே உள்ளது.

பாதை புனரமைப்பு என்ற பெயரில் பாதையின் மேற்பகுதியில் மண் நிரப்பப்படுகின்றது.மழைக்காலத்தில் பாதையிலுள்ள மண்நீருடன் அடித்துச் செல்லப்படுவதால் பாதை குண்டும், குழியுமாக உள்ளது. எனவே பிரதேச மக்களின் சிரமங்களை கருத்திற்கொண்டு பாதையை முழுமையாக புனரமைக்குமாறு தோட்ட நிர்வாகத்திடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் வர்த்தக சேவைகள் மத்திய நிலையம்

தம்புள்ள தினகரன் நிருபர்

மாத்தளை மாவட்ட செயலக வளாகத்தில் வர்த்தக சேவைகள் மத்திய நிலையமொன்று அண்மையில் விவசாய இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹவினால் திறந்து வைக்கப்பட்டது.

சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், சிறிய மற்றும் நடுத்தர விவசாய நடவடிக்கை இராஜாங்க அமைச்சரின் வழிநடாத்தலின் கீழ் திறந்து வைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட வர்த்தக சேவைகள் மத்திய நிலையம் இதுவாகும்.

மிகவும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகள் தேசிய வருமானத்தில் 52 வீதம் பங்களிப்பைப் பெற்றுத் தருகின்றனர். அவர்களது வர்த்தக நடவடிக்கைகளைப் பதிவு செய்தல், அனுமதி வழங்குதல், விவசாயிகள் எதிர்நோக்கியிருந்த சிக்கல்களிலிருந்து அவர்களை விடுவித்தல், விவசாய நடவடிக்கைகளை வலுவூட்டும் பொருட்டு வர்த்தக சேவைகள் மத்திய நிலையங்களை நாடு முழுவதும் நிறுவுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹ தெரிவித்தார்.

வைத்தியசாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

வெல்லாவெளி தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் கடமையாற்றும் துணை மருத்துவர்கள், சுகாதார தொழில் வல்லுனர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை பிரதிநிதிப்படுத்தும் 16 தொழிற்சங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று வியாழக்கிழமை(16) நண்பகல் 12.00 மணியளவில் பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது அகில இலங்கை பொதுச்சுகாதார தொழிற் சங்கம், அகில இலங்கை தாதி உத்தியோகத்தர்கள் சங்கம், அகில இலங்கை மருந்தாளர் சங்கம், அகில இலங்கை மருந்து வழங்குனர் சங்கம்,அகில இலங்கை துணை மருத்துவர் சங்கம் உட்பட 16 தொழிற்சங்கங்களும் அதன் பிரதிநிதிகளும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பு ஆட்பாட்டத்தினால் காந்தி பூங்கா முன்பாக உள்ள வீதியினால் போக்குவரத்து அரைமணித்தியாலம் தடைப்பட்டதுடன் மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தலைமையிலான போக்குவரத்து பொலிஸார் போக்குவரத்தை சீர் செய்திருந்தனர்.

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சுலோக அட்டைகளை தாங்கியவாறு குரல்கொடுத்தார்கள். இதன்போது "சுகாதார சேவையை ஆரம்பி","மருந்துக்களின் விலையை குறை", "மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு உபகரணங்களை வழங்கு", " 12 வருடத்தில் முதலாம்தர பதவி உயர்வை வழங்கு", "றனுக்கின் சம்பள ஆணைக்குழு அறிக்கையை நடமுறைப்படுத்து", "விஷேட கடமை கொடுப்பனவு 10,000 ஆக உயர்த்து", மேலதிக நேரக்கணிப்பீட்டை அடிப்படை சம்பளத்தில் 1/80 ஆக கணிக்கவும்", தொழிநுட்ப நிபுணத்துவ பட்டதாரிகளுக்கு திருத்தியமைக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்து என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷத்தை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கலைந்து சென்றதுடன் தங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் சுகாதார அமைச்சுக்கு பாரியதொரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என கண்டனம் வெளியிட்டனர்.

சீரற்ற காலநிலை: மாணவர்கள் மத்தியில் புதிய நோய் நிலைமைகள்

மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்

மலையகத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாடசாலை மாணவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட கோட்டம் 3 புளூம் பீள்ட் தேசிய பாடசாலை மாணவர்கள் சிலர் தலைவலி, வாந்தி, காய்ச்சல், இருமல் போன்ற நோய் நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் என். பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் வலய கல்விப் பணிப்பாளருக்கு தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கட்டாக்காலி மாடுகளை பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்க நடவடிக்கை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை இம்புல்பே பிரதேசத்தில் பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து எம்பிலிப்பிட்டிய மாடுகள் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்புல்பே பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க இந்நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இம்புல்பே பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீலால் செனரத் தலைமையில் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு இவை எம்பிலிப்பிட்டியவில் சோபிததேரரினால் அமைக்கப்பட்டுள்ள மாடுகள் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவற்றை முறையாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்

